Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 164 | ஞாயிற்றுக்கிழமை | சித்திரை 26 ஆம் நாள் 09 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்:16+16 விலை : ரூ

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக அணிதிரளுங்கள்

## புலம்பெயர் அமைப்புகளுக்கு அழைப்பு

லண்டன், மே 9

அனைத்து தமிழ் புலம்பெயர் அமைப்புகளும் ஒன்றிணைந்து ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க் குற்றவாளிகளைத் தடைசெய்யுமாறு பிரிட்டனை வலியுறுத்த வேண்டும் என்று இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் தண்டிப்பதற்கான சர்வதேச மையம் தெரிவித்துள்ளது. 15

## இந்தியாவின் வைரஸ் திரிபு இலங்கையிலும் கண்டறிவு

கொழும்பு, மே 9

இந்தியாவையே புரட்டிப்போட்டுள்ள கொரோனா வைரஸ் திரிபுடன் இலங்கையிலும் ஒருவர் கண்டறியப்பட்டுள்ளார் என சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார். 15

## பிரிட்டன் திரிபு வைரஸ் மன்னாரில் அடையாளம்

கொழும்பு, மே 9

பிரிட்டனின் கென்ட் பிராந்தியத்தில் அடையாளம் காணப்பட்ட பி.1.1.7 என்ற திரிபடைந்த கொரோனா வைரஸ் இலங்கையின் பல பகுதிகளிலும் அடையாளம் காணப்பட்டுவரும் 15

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு; வடக்கு மீண்டும் சறுக்கியது

யாழ்ப்பாணம், மே 9

கடந்த வாரம் வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வடக்கு மாகாணம் பின்னடைவைச் சந்தித்துள்ளது என பரீட்சைகள் திணைக்களத்தின் புள்ளி விவர ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

## வடக்கில் மேலும் 25 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 25 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை இன்று (நேற்று) சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது 15

## நயினாதீவில் வெசாக் கொண்டாட்டம் நிறுத்தம்

### அரசு உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, மே 9

யாழ்ப்பாணம், நயினாதீவு ரஜமஹா விகாரையில் இடம்பெறவிருந்த தேசிய அரச வெசாக் கொண்டாட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என பௌத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா பரவலை கருத்திற்கொண்டு 15

### பெருந்தொற்றுக்கு ஏதுநிலை

## கல்வியங்காடு சந்தைக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், மே 9

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறியதால் கல்வியங்காடு பொதுச்சந்தை யாழ்ப்பாணம் மாநகர சுகாதார 15

## மே 18 அன்று சுடரேற்றல் 18:18

கொழும்பு, மே 9

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நாளை நினைவுகூர்ந்து 15

## நேற்றும் 1,890 பேருக்கு கொரோனாத் தொற்று


கொழும்பு, மே 9

இலங்கையில் நேற்றும் ஆயிரத்து 890 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் 15

## தவறான முடிவெடுத்து கணவன், மனைவி சாவு

யாழ்ப்பாணம், மே 9

தவறான முடிவெடுத்து கணவன் உயிரிழந்த தகவல் அறிந்து மனைவியும் உயிர் துறந்தார். 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நேற்று மட்டும் 22 கொரோனா சாவுகள் பதிவு

## ஒரே நாளில் அதிகளவான உயிரிழப்புகள்



**கொழும்பு, மே 9**
**இலங்கையில் நேற்று மாத்திரம் 22 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.**

அதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 786 ஆக அதிகரித்துள்ளது. இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் ஒரே நாளில் நேற்றே அதிகளவான கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இதேவேளை, நேற்றுமுன்தினம் 19 கொரோனா மரணங்கள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாப் பெருந்தொற்று இலங்கையில் நாளுக்குநாள் சிக்கலுக்கு உரியதாக மாறி வருகின்றது. கட்டுக்கடங்காமல் செல்கின்ற தொற்றுக்கள் ஒருபுறம், அடையாளப்படுத்தப்படும் புதிய வைரஸ் திரிபுகள் இன்னொருபுறம் என்று அச்சமான சூழ்நிலை நிலவுகின்ற நிலையில் தற்போது கொரோனா இறப்புக்களும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-22)



# பூமியை நோக்கி வருகிறது சீனாவின் ரொக்கெட் துண்டு

கொழும்பு, மே 9
சீனா விண்வெளிக்கு அனுப்பிய ரொக்கெட்டின் பாகம் பூமியில் இன்று விழக் கூடும் என்றும் , எனினும், அது பூமிக்குள் நுழையும்போது இடைவழியில் எரிந்துவிடும் என்றும் சீனா குறிப்பிட்டுள்ளது.
சீனா கடந்த மார்ச் மாதம் ஏவிய '5பி' ரொக்கெட்டின் மிகப்பெரிய பாகம் ஒன்றே பூமியில் விழப்போகிறது. இந்த பாகம் செயலிழந்துள்ள நிலையில் பூமியை நோக்கி வருகிறது. இதன் எடை 18 தொன் என்று சீனா குறிப்பிடுகின்றது.
இது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வுசெய்து வருகின்றனர். சீனாவின் தகவல்படி பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழையும்போது ரொக்கெட்டின் பாகங்கள் எரிந்துவிடும் என்பதால் இது தொடர்பில் அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் சீனா தெரிவித்துள்ளது. பூமியின் வளிமண்டலத்துக்குள் ரொக்கெட் நுழையும் துல்லியமான பகுதியை, அது நெருங்கும்போதுதான் கண்டறிய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சீனாவின் விண்வெளி ஆய்வுக்கு சர்வதேச விண்வெளி நிலையத்தை பயன்படுத்துவதற்கு அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் அனுமதிக்கவில்லை. இதனால் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஆய்வுப் பணியை அமெரிக்காவின் நாசாவே பிரதானமாக முன்னெடுக்கிறது. இந்த நாடுகளின் விண்வெளி வீரர்களையே நாசா அனுப்பி வருகின்றது.
இவ்வாறான நிலையில் சீனா தான் ஒரு விண்வெளி நிலையத்தை அமைப்பதற்கு முயற்சிசெய்து வருகின்றது. 'தியான் காங்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி நிலையம் பூமியிலிருந்து 340 கி.மீ. முதல் 450 கி.மீ. தொலைவில் வலம்வரும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த விண்வெளி நிலையத்துக்கான சிறிய அளவிலான கலங்களை சோதனை முறையில் ஏற்கனவே செலுத்தியுள்ளோம் என்றும் சீனா தெரிவித்துள்ளது. (த-இ)

# 200 கிலோ கஞ்சாவுடன் இந்தியர்கள் 7பேர் கைது

மன்னார், மே 9
மன்னார் கடல் பரப்பில் கஞ்சாவுடன் இந்திய மீனவர்கள் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஒ.இ)

யாழ். பல்கலைக்கழக

# சட்டபீட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டபீட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஒரு மாதத்துக்கு முன்னரே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விடுதிக்கு அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கான பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் எவருக்கும் தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவு கிடைக்கப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)



# கோத்தா – சஜித் இணைந்தால் கொரோனாவை விரட்டலாமாம்


## சு.கவின் பொதுச் செயலர் ஆலோசனை

கொழும்பு, மே 9
நாட்டில் கொவிட் பரவல் தீவிரமடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் தரப்பும் எதிர்த் தரப்பும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதைவிட , ஒன்றிணைந்து செயற்படுவதே பொருத்தமானது. போரின்போது ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட்டதைப் போல தற்போதும் செயற்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாட்டில் தற்போது காணப்படுகின்ற கொவிட் பரவல் நிலைமை அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியினதோ பிரச்சினை அல்ல. அனைவரும் முகங்கொடுத்துள்ள நெருக்கடியாகும். முழு நாட்டையும் முடக்குவதன் ஊடாக மாத்திரம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே போக்குவரத்துக்களை வரையறுத்துக் கொண்டு, முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட அடிப்படைச் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஆளுங்கட்சி , எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சுமத்திக் கொண்டிருப்பதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையே அறிவுடைய மக்கள் எதிர்பார்க்கின்றனர்- என்றார். (ப-இ)



# நீர்த்தேக்கத்தில் மாயமான குடும்பஸ்தரின் உடல் மீட்பு

வவுனியா, மே 9
கருங்கல் அகழ்வால் ஏற்பட்ட நீர்த் தேக்கத்தில் நேற்றுமுன்தினம் மூழ்கிக் காணாமல் போயிருந்த குடும்பஸ்தர், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வவுனியா, பம்பைமடுவில் நடந்துள்ளது. கற்பகபுரத்தைச் சேர்ந்த ரவி (வயது50) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வவுனியா, பம்பைமடுவில் உள்ள நீர்த் தேக்கம் ஒன்றில் மீன்பிடிப்பதற்காக நேற்றுமுன்தினம் 5 பேர் சென்றுள்ளனர்.
அவர்களில் ஒருவர் நீர்த்தேக்கத்துக்குள் இறங்கிய போது நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்தார். இந்தத் தகவல் கிராம மக்களுக்கும், பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. எனினும் நேற்றுமுன்தினம் மாலைவரை அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.
நேற்றுக் காலை கடற்படை சுழியோடிகளின் உதவியுடன் நீர்த்தேக்கத்தில் தேடுதல் நடத்தப்பட்டது. நீரில் மூழ்கியவரின் உடல் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-110)



# கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 9
யாழ்ப்பாண நகரை அண்டிய கரையோர பிரதேசத்தில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன.
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் இணைந்து இந்த விழிப்புணர்வில் ஈடுபட்டனர்.
அத்துடன் மக்கள் சுகாதார விதிகளை கடைப்பிடிப்பது தொடர்பாக ஒலிபெருக்கி மூலமும் அறிவிக்கப்பட்டது.
சந்தைகள் மற்றும் பொது இடங்களிலும் இவ் விழிப்புணர்வு நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டனர். (ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# சிறுதானிய செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்துவரும் நிலையில் விவசாயிகள் சிறுதானிய செய்கையில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர். இதற்கென தமது விவசாய நிலங்களை உழுது தயார் செய்தும் வருகின்றனர். அத்துடன் அனேகமான விவசாயிகள் உழுந்து, பயறு மற்றும் குரக்கன் போன்றவற்றை விதைத்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இதே சமயம் இந்த சிறுபோக செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஐம்பது வீத மானிய விலையில் உழுந்து பெற்றுக் கொடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (ஐ-17)

# 1,265 வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மே 9

அரியாலை மற்றும் கொழும்புத்துறை பிரதேசங்களில் உள்ள ஆயிரத்து 265 வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

மாநகர சுகாதார பிரிவினரால் வளர்ப்பு நாய்களுக்கு கடந்த மாதத்தில் இருந்து இந்த தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டுள்ளன.

அரியாலை பிரதேசத்தில் 712 வளர்ப்பு நாய்களுக்கும், கொழும்புத்துறையில் 553 வளர்ப்பு நாய்களுக்கும் விசர் நோய்க்கான தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாண நகரை அண்டிய வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர் (ஐ-17)






# புலிக்குளத்தில் முதலை



கிளிநொச்சி, மே 9

யாழ்ப்பாணம்- கைதடி பகுதியில் வாகனத் திருத்தகம் ஒன்றுக்குள் நேற்று முன்தினம் நுழைந்த 8 அடி நீளமான முதலை ஒன்று வனஜீவராசிகள் திணைக்களத்தால் பிடிக்கப்பட்டு, கிளிநொச்சி பொன்னகர் பகுதியிலுள்ள புலிக்குளத்தில் நேற்றுக் காலை பாதுகாப்பாக விடப்பட்டது. (ப-214.113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீ சேர்ட்டில் பிரபாகரனின் படம் கடற்படையினர் விசாரணை

கொழும்பு, மே 9

**கடற்படையினரால் சில தினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் சிலரின் ரீ சேர்ட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படம் பொறிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கை கடற்படையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த வியாழக்கிழமை தமிழக மீனவர்கள் சட்டவிரோதமாக இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில், அதில் ஒரு படகில் இருந்தவர்கள் அணிந்திருந்த உடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் பெயரும் படமும் பொறிக்கப்பட்டிருந்தது. இதனை அவதானித்த கடற்படையினர் மீனவர்களை ஒளிப்படம் மற்றும் காணொலி எடுத்தபின்னர் விடுவித்திருந்தனர். குறித்த காணொலி மற்றும் ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு கடற்படையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ.இ)



## அரசை பாதுகாக்கவே சமலுடன் சந்திப்பு

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

தமிழ் அரசியல்வாதிகளுக்கும் சமல் ராஜபக்சவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பு கொழும்பை பாதுகாக்கும் முயற்சியே என்று வவுனியாவில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

தமிழ் அரசியல் வாதிகள் அண்மையில் சமல் ராஜபக்சவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டமை தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுவருவோர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 3ஆம் திகதி கொவிட் 19 தாக்கத்தின் மத்தியிலும், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மிக முக்கியமான சந்திப்பு லண்டனில் நடந்தது. சீன ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் இலங்கையைத் தண்டிப்பதற்கு தமிழர்களின் துன்பத்துக்கு நீதியை ஒரு துரும்பாகப் பயன்படுத்துவது பற்றி அங்கு பேச்சுக்கள் நடந்தன.

இதேவேளை, தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும், நில அபகரிப்பு என்ற தலைப்பில் சிங்கள அமைச்சர் சமல் ராஜபக்சவை சந்திக்க ஒன்றுபட்டுள்ளனர். தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து பேசலாம், வேலை செய்யலாம் என்பதையே இது உலகுக்குக் காட்டியுள்ளது. தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க எந்தவொரு வெளிநாட்டு ஈடுபாடும் தேவையில்லை என்பது தமிழ் அரசியல் தலைவர்களின் செய்தி. சிங்களவர்களுடன் பேசுவதன் மூலம் பயனளிக்கும் எந்த செயற்பாடும் நடைபெறாது என்பதை 73 ஆண்டுகள் பாடம் நமக்குக் கற்பித்திருக்கின்றது.

விழிப்புத்தான் ஓர் இனத்தின் விடுதலை. பத்திரிகையாளர் நிமலராஜனின் நீதியும் சர்வதேச ஈடுபாட்டை தமிழ் அரசியல்வாதிகளுக்கு உணர்த்தியிருக்கும் - என்றனர். (த-110)

## முடங்கியது திருமலை நகரம்

திருகோணமலை,மே 9

திருகோணமலை மாவட்டத்தில் அதிக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து பல கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் திருகோணமலை நகர்ப் பகுதியில் மருந்தகங்கள், அத்தியாவசியத் தேவைகளுக்கான பொருள்கள் விற்பனை நிலையங்கள் தவிர்ந்த அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளன.

இதனால், திருகோணமலை மாவட்டத்தின் நகர்ப் பகுதி, மூதூர்,கந்தளாய் மற்றும் கிண்ணியா ஆகிய நகரப் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. (ஐ-40)

## ஒரே நாளில் 617 பேர் கைது

கொழும்பு, மே 9

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 617 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு நகரில் மாத்திரம் 342 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையிலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பாக ஒரே தினத்தில் அதிகளவானோர் கைதுசெய்யப்பட்டமை இதுவே என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினரென 6 ஆயிரத்து 539 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

*நினைவேந்தல் தொடர்பில்*

## காணிக்காரர் விடுவிப்பு தவிசாளரிடம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், மே 9

நினைவேந்தலுக்கும் காணி உரிமையாளர்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று ரெலோவின் மாவட்டப் பொறுப்பாளரும் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சென்று தெரிவித்ததை அடுத்து சிறி சபாரட்ணத்தின் நினைவேந்தல் இடம்பெற்ற காணி உரிமையாளர் பொலிஸ் நெருக்குவாரங்களில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறி சபாரட்ணத்தின் 35 ஆவது நினைவு தினத்தை அவர் மறைந்த இடமான உரும்பிராய் தோட்டவெளியில் கடந்த வியாழக்கிழமை அனுஷ்டித்தனர். ஒவ்வொரு ஆண்டும் அனுஷ்டிக்கப்படும் குறித்த இடம் தனியாருக்குச் சொந்தமான காணி. எனினும், நினைவேந்தல்கள் மேற்கொள்வதை தடைசெய்யும் முகமாக குறித்த தோட்ட வெளிக்குச் செல்லும் பாதைகள் அடைக்கப்படவேண்டும் என ஏற்கனவே காணி உரிமையாளர்களுக்கு புலனாய்வாளர்களால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் கடந்த 5 ஆம் திகதி குறித்த இடம் துப்புரவு செய்யப்பட்டதையடுத்து புலனாய்வுத்துறையினரின் அழுத்தங்கள் காரணமாக காணி பராமரிப்பாளர்களால் அஞ்சலி நடைபெறும் இடம் வேலி மூலம் அடைக்கப்பட்டிருந்தது. எனினும், அங்கு பாதை வடிவில் காணப்பட்ட இடத்தைத் திறந்து வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் அஞ்சலி செலுத்த சென்றிருந்தார்.

அதனைத் தொடர்ந்து அங்கு வருகை தந்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் குறித்த இடத்தில் அஞ்சலித்திருந்தனர். இந்த நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு குறித்த காணியின் பங்கைக் கொண்ட உள்நாட்டில் உள்ள பராமரிப்பாளர் அழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வாக்குமூலங்கள் பெறப்பட்டன. அவர் தவிசாளருக்கு தொலைபேசி வாயிலாக தன் நிலைமையை அறிவித்தார். இதனையடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற தவிசாளர் நினைவேந்தல் விடயத்துக்கும் இவர்களுக்கும் எதுவித தொடர்புகளும் கிடையாது எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து காணிப் பராமரிப்பாளர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, இவ்வாறு செயற்பட்டமை குறித்து வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளரிடமும் கோப்பாய் பொலிஸார் நேற்றுமுன்தினம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். (த)

## நாட்டில் 70க்கும் மேற்பட்ட தாதியர்களுக்கு கொரோனா

### அரச தாதியர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மே 9

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் மிக வேகமாக பரவிவரும் சூழலில், நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் பணியாற்றும் தாதியர்களில் 70க்கும் மேற்பட்டோருக்கு கொவிட் 19 வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னப் பிரிய தெரிவித்தார். (த-இ)

## எல்லை மீறுகிறது கொரோனாத் தொற்று

### மன்னார் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு எச்சரிக்கை

மன்னார், மே 9

மன்னாரில் கொரோனா நிலைமை எல்லை மீறிப் போகின்றது. நேற்றுமுன் தினம் மீண்டும் 14 கொரோனாத் தொற்றாளர்கள் மன்னாரில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் சிறப்பு மருத்துவர், மருத்துவ கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

**மன்னார் மாவட்டத்தில் கடந்த எட்டு நாள்களுக்குள் 28 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். கடந்த செவ்வாய்க்கிழமையன்று பெறப்பட்ட 461 பி.சி.ஆர். மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டதில் முதற்கட்டமாக 7 நோயாளர்களும், அதன் பின் நேற்றுமுன்தினம் 14 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். இந்த வருடத்தில் மட்டும் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 370 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். எனவே மன்னாரில் வர்த்தக நிலையங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கொரோனா தொடர்பான சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றுமாறு சுகாதாரத் துறையினர் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். கொரோனா தடுப்பு நடவடிக்கையை உரிய முறையில் பின்பற்றாத நிறுவனங்கள் மீது எதிர்வரும் திங்கள் முதல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு மக்கள் கொரோனா தொடர்பான சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடித்து கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.** (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உடல் ஆரோக்கியத்தில் பற்களின் வகிபங்கு!

எமது உடல் ஆரோக்கியமும், பற்களின் ஆரோக்கியமும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டது. பற்கள், ஈறுகள் மற்றும் வாய் பகுதி ஆரோக்கியமாக இருந்தால்தான், உண்ணும் உணவில் உள்ள சத்துக்கள் முழுமையாக கிடைக்கும். பற்களை பராமரிப்பது எளிதானது. ஆனால் ஒவ்வொரு வயதிற்கும் ஏற்றாற்போல் பற்களை பராமரிக்கும் விதமும் மாறுபடும்.

குழந்தைக்கு முதல் பற்கள் முளைத்த பின்போ அல்லது ஒரு வருடத்திற்குள்ளாகவோ பல் மருத்துவரை அணுகி குழந்தையின் பல் வளர்ச்சி பற்றி பெற்றோர் ஆலோசனை பெறுவது அவசியமானது. பெரும்பாலான பெற்றோர், குழந்தைகள் இனிப்பு பலகாரங்களை அதிகம் உண்பதால்தான் பற்சிதைவு ஏற்படுவதாக கருதுகிறார்கள். ஆனால் அது மட்டுமே காரணம் அல்ல. சில சமயங்களில் குழந்தைகள் பால் அருந்தியவுடன் அப்படியே தூங்கிவிடுகிறார்கள். பல குழந்தைகள் புட்டிப்பாலை அருந்தியபடியே தூங்கவும் செய்கிறார்கள். குழந்தை பருவத்தை கடந்ததும், கடைகளில் வாங்கும் பாலுடன் சர்க்கரையை கலந்து பருகுகிறார்கள். அப்போது பால், பற்களில் ஒட்டிக்கொள்ளும். அதனால் பாலின் வாயிலாகவும் பற்சிதைவு ஏற்படுகிறது.

ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பற்பசை உள்ளது. அதனை வாங்கி பயன்படுத்த வேண்டும். அதனை கொண்டு குழந்தைகள் தாங்களாகவே பற்களை துலக்குவதற்கும் பழக்க வேண்டும். சத்தான உணவு வகைகளையும் சாப்பிட கொடுக்க வேண்டும். அதன் மூலம் பற்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும். உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைத்தால் பற்களும் சிறுவயது முதலே ஆரோக்கியமாக இருக்கும். அடிக்கடி வாய் கொப்பளிப்பதும், தேவையான அளவு தண்ணீர் குடிப்பதும் அவசியம் என்பதை குழந்தைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். பெற்றோர் குழந்தைகளுக்கு அறிவுரை கூறுவதைக்காட்டிலும் தாங்கள் அதன்படியே நடக்க வேண்டும். அதை பின்பற்றி குழந்தைகள் எளிதில் கற்றுக்கொள்வார்கள்.

குழந்தைகளுக்கு 7 வயது முதல் 12 வயதுவரை பால் பற்களும், நிலையான பற்களும் சேர்ந்தே இருக்கும். இந்த சமயத்தில் பற்சிதைவு பிரச்சினை ஏற்படும். அதோடு முகத்தில் தாடை எலும்புகள் வளர்ச்சி பெறுவதால், பல்வரிசை சரியாக அமைவதில் பிரச்சினை ஏற்படலாம். எனவே, இந்தக் காலத்தில் மிக நுணுக்கமான கவனிப்பை எம் குழந்தைகளின் பல் வரிசைகளில் நாம் வெளிப்படுத்த வேண்டும்.

பதின் பருவத்திலிருந்து பற்களை சரியாக பராமரிப்பதும், காலை மற்றும் இரவு படுக்கபோகும் முன்பு பல் துலக்குவதும் பற்களின் ஆரோக்கியத்தை வலுப்படுத்தும். பற்சிதைவு ஏற்படாமலும் பாதுகாக்கும். பெரியவர்களான பின்பு புகைபிடிக்கும் பழக்கம், மது அருந்துதல், புகையிலை போன்ற பழக்கங்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும். தவிர்த்தால் பற்கள் ஆரோக்கியமாக இருக்கும்.

65 வயதிற்கு மேற்பட்டவர்கள் பற்களின் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். பல்கூச்சம், எரிச்சல், பற்சிதைவு, ஈறுகளில் வீக்கம், வாய்ப்புண் போன்ற பாதிப்புகள் நேர்ந்தால் உடனே மருத்துவர்களை அணுகி சிகிச்சை பெற வேண்டும். இல்லாவிட்டால் பின்னாளில் பாதிப்பை அதிகப்படுத்திவிடும்.

வாயில் பற்கள் முளைத்த நாள் முதல் தொடர்ந்து பற்களை பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். சாப்பிடும் உணவு பொருட்கள் அனைத்துமே பற்களை கடந்துதான் உள்ளே செல்கிறது. பெரும்பாலும் உணவு பொருட்களை பற்களால் மென்றுதான் விழுங்குகிறோம். அப்போது பற்களில் உணவு துகள்கள் ஒட்டிக்கொள்ளும். அதனை பொருட்படுத்தாமல் அசட்டையாக இருந்துவிட்டால் பல்வேறு விதமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துவிடும். சரியான முறையில் பற்களை பராமரிக்க வேண்டும். இல்லாவிட்டால் பற்களின் எனாமல் (பற்சிப்பி) தேய்ந்து, பற்கள் கூர்மையாகி வாயின் உள் பகுதியை ரணமாக்கிவிடும். அதுவே வாயில் புற்றுநோய் ஏற்பட காரணமாகிவிடும். ஆதலால் பற்களை கவனமாக பாதுகாக்க வேண்டும்.

பற்கள் உடல் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. பளிச்சென்ற பற்களும், அழகான புன்னகையும், அன்பான வார்த்தைகளும் நம்மை மற்றவர்கள் மத்தியில் உயர்வாக அடையாளம் காட்டுகிறது. தன்னம்பிக்கையும் அளிக்கிறது. அத்தகைய அழகான பற்களையும், ஈறுகளையும் வாய் ஆரோக்கியத்தையும் பேணிக்காப்போம். நிம்மதியாக புன்னகை பூப்போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சரியான தீர்மானம் எடுப்பதே அவசர தேவை

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை புத்தாண்டின் பின்னர் சடுதியாக அதிகரித்தது. தினமும் நூறுகளால் அதிகரித்து வந்த இந்த எண்ணிக்கை சில நாள்களாக குறிப்பிட்ட ஒரு தொகையில் தளம்பிக் கொண்டிருக்கின்றது.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்படும் நிலையில், மருத்துவத்துறை சார்ந்தவர்களும், அரசியல்வாதிகளும் எதிரும் புதிருமான கருத்துக்களையே கூறிவருகின்றனர். நாட்டை முடக்க வேண்டும் என்று மருத்துவத் துறை சார்ந்த பல தரப்புக்கள் கோரிக்கை விடுத்துவரும் நிலையில், அரசியல்வாதிகளோ கொரோனாத் தொற்று கட்டுப்பாட்டுக்குள் உள்ளது என்ற தொனியில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

நாட்டில் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள அரசு; தற்போது வெளிநாட்டுக் கடன்களில், முக்கியமாக சீனாவின் கடன்களின் மூலமே நாள்களை நகர்த்துகின்றது. இந்த நிலையில் மீண்டும் ஒரு முடக்கத்துக்குச் செல்லும் இயலுமை இப்போதைய அரசுக்கு இல்லை. ஆக, தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமை அவ்வளவு பாரதூரமானதல்ல, நாட்டை முடக்க அவசியமில்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்தும் பிரயத்தனங்களில் அரசு சார்ந்தவர்கள் இறங்கியுள்ளனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நாட்டை முடக்க வேண்டும், கொரோனாத் தொற்று நிலைமை ஆபத்தான கட்டத்தில் உள்ளது என்று கூறுபவர்கள் அரசியல்வாதிகள் அல்லர். அரசியல்வாதிகளாக இருந்தால் அவர்கள் அரசின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியில் கூறுகிறார்கள் எனலாம். ஆனால் இந்த விடயத்தை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருப்பவர்கள் கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளில் முன்களத்தில் பணியாற்றுபவர்கள். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் மற்றும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் என மருத்துவத் துறையுடன் தொடர்புடைய தரப்புக்களே இந்த எச்சரிக்கைகளை தொடர்ந்து முன்வைத்து வருகின்றன.

இந்தத் தரப்புக்கள் புத்தாண்டின் பின்னர் நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரிக்கும், புத்தாண்டு காலத்தில் பயணத் தடைகளை விதிக்க வேண்டும் என்று கோரியபோது அதைக் காதில் போட்டுக்கொள்ளாதிருந்த அரசு, தற்போது மக்களின் பொறுப்பற்ற செயற்பாடே தொற்று வீரியமடையக் காரணம் என்று கூறி வாளாவிருக்கின்றது.


புத்தாண்டின் பின்னர் தினந்தோறும் கண்டுபிடிக்கப்படும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வந்த நிலையில் சில நாள்களாக அந்தத் தொகை ஆயிரத்து 900 களில் தளம்பிக் கொண்டிருக்கின்றது. இதுவும் மக்கள் மத்தியில் சந்தேகத்தை எழுப்பியிருக்கின்றது.

செருப்பு போன்ற சில பொருள்களின் விலை பெரும்பாலும் 99 ரூபா 99 என்ற வகையிலேயே பெரிதும் காணப்படும். அதற்கான ஒரு காரணம் வாடிக்கையாளரின் மனநிலை. 100 ரூபா என்றால் பெரும் தொகை என்று தோன்றும் அதேநேரம் 99 ரூபா 99 சதம் என்றால் அந்த எண்ணம் வாடிக்கையாளர் மனதில் தோன்றாது. இந்த யுக்தியையே அரசும் கைக்கொள்கின்றதா என்ற சந்தேகமே அது.

தொற்றாளர்கள் எண்ணிக்கை 2 ஆயிரத்தைத் தாண்டினால், தங்களை நோக்கிய கேள்விகள் வலுவடையும், நாட்டை முடக்கத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதால் அரசு இந்த யுக்தியைக் கையாண்டு தொற்றாளர்கள் எண்ணிக்கையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடும். ஆனால் அரசு உண்மையில் அவ்வாறான யுக்தியைக் கையாளுமானால் அது ஒருபோதும் சாதகமான நிலைமையை நாட்டுக்குத் தராது என்பதுதான் உண்மை.

தடுப்பூசி ஏற்றுவதன் ஊடாக கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்பது தவறானது என்பது சீஷெல்ஸ் தீவில் நிரூபணமாகியுள்ளது. அங்குள்ள 60 சதவீதமானோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டு மக்களிடையே கூட்டு நோய் எதிர்ப்புச் சக்தி உருவாகியுள்ளது என்று உலக சுகாதார அமைப்பால் கணிக்கப்பட்ட அந்தத் தீவில் தற்போது மீண்டும் கொரோனாத் தொற்று அவதானிக்கப்பட்டுள்ளது.

தொற்று ஏற்பட்ட பின்னர் சிகிச்சை முறைகளை மேற்கொள்வதைக் காட்டிலும், தொற்றுப் பரவாது கட்டுப்படுத்துவதே புத்திசாலித்தனம். துறைசார்ந்த தரப்புக்களின் ஆலோசனைகளைச் செவிமடுத்து உரிய நேரத்தில் செயற்படாது விட்டால் ஏற்படும் அவலத்துக்கு கண் முன்பாக உள்ள உதாரணம் இந்தியா. அரசியல் நோக்கங்களை அப்பால் தள்ளிவைத்து உண்மை நிலவரங்களை அறிவித்து, துரித செயலாற்றுவதே மக்களுக்கும், நாட்டுக்கும் நலன்தரும்.



யாழ்ப்பாணத்தில்

## நாளையிலிருந்து பி.சி.ஆர். சோதனை இருமடங்காகிறது

### சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

**கொழும்பு, மே 9**

**தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள மூன்றாவது அலை திரிபடைந்த வைரஸால் ஏற்பட்டுள்ளது. இந்த வைரஸ் தொற்று வேகமாக பரவுவதன் காரணமாக சுகாதார அமைச்சு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சுகாதார அமைச்சரின் பணிப் பின்படி அனைத்து மாகாணங்களுக்கும் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர்கள் சென்று நிலைமைகளை ஆராய்கின்றனர்.**



இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) மருத்துவர் ச.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு நிலைமைகளை ஆராய்வதற்கு வந்துள்ளேன். இன்று (நேற்று) வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்ந்துள்ளேன். இன்று (நேற்று) காலை யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏறத்தாழ ஆயிரம் கட்டில்களுடன் சுவிய சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளோம். கர்ப்பிணிகளுக்கு தொற்று ஏற்பட்டால் அவர்களுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்துள்ளோம்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளருடன் இது தொடர்பில் கலந்துரையாடினோம். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பி.சி.ஆர். பரிசோதனைகளை இரு மடங்காக அதிகரிப்பது தொடர்பாக ஆலோசித்துள்ளோம்.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை கட்டாயமாகப் பின்பற்றிச் செயற்படுவதன் மூலம் மாவட்டத்தைக் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் - என்றார். (எ)

## 'பசுமைச் சவூதி' முயற்சிக்கு இலங்கை அரசு வாழ்த்து

கொழும்பு, மே 9

சவூதி அரேபியா மற்றும் அதனுடனான பரந்த பிராந்தியம் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்காக பிராந்திய ஒத்துழைப்பைக் கோரும் வகையிலான சவூதி அரேபியாவின், பசுமைச் சவூதி மற்றும் பசுமை மத்திய கிழக்கு ஆகிய முன்முயற்சிகளுக்கு இலங்கை அரசு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு அமைச்சின் ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

பிராந்தியத்தில் கார்பன் உமிழ்வை 60 சதவீதமாகக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இலட்சியத் திட்டங்களை இலங்கை பின்பற்றும் அதேவேளை, இந்த முயற்சிகள் கடல் மற்றும் கடலோர சூழல்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதால், இந்த முயற்சி ஒரு தீவு தேசமாக எமது இதயத்துக்கு மிகவும் நெருக்கமானதாக உள்ளது. உலகளாவிய காலநிலை மாற்றத்தால் வளர்ச்சியடைந்து வரும் கடுமையான யதார்த்தங்களை இலங்கையும் தற்போது அனுபவித்து வருகின்றது. எனவே அனைத்து மனித குலத்தையும் பாதிக்கும் காலநிலை மாற்றத்தின் முயற்சியைக் கையாள்வதில் முன்னிலை வகிக்கும் ஒரு நாடாக சவூதி அரேபிய இராச்சியம் உருவாகி வருவதானது மனதுக்கு இதமானதாக அமைகின்றது. சவூதி அரேபியாவுக்கு இலங்கை தனது ஆதரவை வெளிப்படுத்துவதுடன், காலநிலை மாற்றத்தை சமாளிப்பதற்காக எமது பொதுவான அணுகுமுறைகளில் சவூதி இராச்சியத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கும் எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் வழங்கப்படாதோர் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை

### யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமை யாற்றும் இடமாற்றம் வழங்கப்படாத அலுவலர்களின் பணியிட மாற்றம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சில பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அலுவலக உதவியாளர்கள் 10 வருடங்களைத் தாண்டியும் அதே பிரதேச செயலகங்களில் தொடர்ச்சியாக கடமையாற்றுகின்றனர் என்று கூறப்படுகின்றது. இது தொடர்பில் அவரிடம் கேட்டபோது அவர் மேலும் தெரிவிக்கையில்:

இடமாற்றங்கள் தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக உரிய காலப்பகுதியை நிறைவுசெய்த அலுவலர்கள் பணியிட மாற்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும்போது சரியான தகவல்களை வழங்காத பட்சத்தில் இடமாற்றங்கள் சில வேளைகளில் பின்செல்ல வாய்ப்பு உள்ளது.

ஆகவே இடமாற்றங்கள் உரிய காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சில தவறுகள் இருக்கச் செய்கின்ற நிலையில், அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். என அவர் மேலும் தெரிவித்தார். (த-20)

# கொரோனா சவாலையும் வெற்றி கொள்வோம்

### பிரதமர் மஹிந்த நம்பிக்கை

கொழும்பு, மே 9

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை ஒருபோதும் முடக்கமாட்டோம். அனைத்துச் சவால்களையும் நாம் வெற்றிகொள்வோம்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாட்டில் 7ஆவது அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தி நிர்மாண பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் அலரி மாளிகையில் காணொலி முறைமை ஊடாக நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது அவர் தெரிவிக்கையில்:

கொரோனா தாக்கத்தால் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். சவால்களுக்கு மத்தியில் நாட்டை முழுமையாக முடக்கும் நோக்கம் கிடையாது. சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் செயற்படுத்தப்படும்.

கொரோனாத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு ஆரம்பத்தில் இருந்து பொறுப்புடன் செயற்படுகிறது. நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. - என்றார். (ஒ-இ)



முல்லைத்தீவு வள்ளுவர்புரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 100 முதியோர் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. அனுசா ரவீந்திரா நிதியத்தின் நிதி அனுசரணையில் நாரோ நிறுவனத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (க-159)






# ரிஷாத் நல்லவரா கெட்டவரா என அரசியல்வாதிகளுக்கு தெரியும்

### மன். தவிசாளர் தெரிவிப்பு

இன்றைய அரசியல் தலைவர்களுடன் ரிஷாத் எம்.பி. அரசியல் செய்தவர். இவர்களுக்கு தெரியும் இவர் நல்லவரா கெட்டவரா? என்று என மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்கள் கட்சியின் தேசியத் தலைவர் ரிஷாத் பதியுதீன் எந்தவொரு தவறுகளும் செய்யாமல் இன்று சிறை வைக்கப்பட்டுள்ளார். ஏப்ரல் 21 இல் நடந்த சம்பவம் எவ்வாறு நடந்தது யார் செய்தது என்பது யாவருக்கும் தெரியும். இச் சம்பவம் நடைபெற்று சற்றுநேரத்துக்குள் எமது தலைவரின் பெயரை உச்சரித்து அவருக்கு இழுக்கு ஏற்படுத்தினர். இதை தனது கவனத்துக்கு எடுத்துக்கொண்ட எமது தலைவர் நாடாளுமன்றத்தில் தனது உரையில் இதில் எனக்கு எந்தவித தொடர்பும் இல்லை அவ்வாறு என்னில் சந்தேகம் இருக்குமெனில் என்னை விசாரணை செய்து நான் குற்றவாளியாகக் காணப்பட்டால் எனக்கு மரண தண்டனை தாருங்கள் என தெரிவித்திருந்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக இவரை பல விசாரணைகளுக்கு உட்படுத்தினர். கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்காக அவர் தனது தேர்தல் தொகுதியில் பிரசாரத்துக்கு வந்துவிட்டால் உடன் விசாரணைக்கு வரவும் என அழைப்பு வரும். அவர் தனது தேர்தல் பிரசாரத்தையும் கைவிட்டு விசாரணைகளுக்குச் சென்ற சம்பவங்களும் பல. விசாரணைகளின் முடிவில் அவர் குற்றமற்றவர் என சபாநாயகரும் தெரிவித்திருந்தார். இப்படியிருந்தும் எமது தலைவர் ரிஷாத்தை அவரின் வீட்டுக்கு அதிகாலை மூன்று மணியளவில் சென்று ஒரு பாதாள கோஷ்டியினர் போல கைதுசெய்து அடைத்துவைத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு இந்த நாட்டில் சர்வ அதிகாரமும் இருக்கின்றது. அவர் இந்த விடயத்தில் இவரிடம் தவறு இருக்கின்றதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் எது நடந்தாலும் அதைத் தட்டிக்கேட்க எவரும் முன்வராமையால் நாங்கள் இந்த நாட்டுக்கும் அரசுக்கும் தெரியப்படுத்த தொடர்ச்சியான போராட்டங்களை செய்துள்ளோம். இதில் எமக்கு சாதகமான நடவடிக்கை கிடைக்கும்வரை எமது போராட்டம் தொடர்ச்சியாக நடைபெறும் -என்றார். (ப-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
14 . 09 . 1949



மறைவு
06 . 05 . 2021

### திருமதி கெஜஞானவதி இராஜசிங்கம் (பேபி)

**(ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர் - Castle street Women Hospital, Colombo)**

வறுத்தலைவிளான் தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்த வருமான திருமதி கெஜஞானவதி இராஜசிங்கம் (பேபி) (ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர் - Castle street Women Hospital, Colombo.) கடந்த (06.05.2021) இல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர் - மதுவரித் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி கதிரித்தம்பி சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கட்டுவன் மலாயன் பென்சனியர் தில்லையர் கந்தையா தம்பதியரின் அன்பு மருமகளும், றவீன் (Engineer - Canada), கஜன் (MRI/CT Technologist - USA), றஜித் (Restaurant Chain Owner Canada), றஜீவன் (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஷாமினியின் அன்பு மாமியாரும், ஆரிஷ்ஷின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற குகஞானவதி திருச்செல்வம் (கொழும்பு) மற்றும் குணஞானவதி குலசிங்கம் (யாழ்ப்பாணம்), குலஞானவதி மகாலிங்கம் (Canada), செந்தில்ஞானவதி சிவலிங்கம் (Canada), காலஞ்சென்ற குகஞானலிங்கம் (இலங்கை), மகாஞானவதி செண்பகசுந்தரம் (வவுனியா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 11.05.2021 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 7.00 மணிமுதல் 10 மணி வரை Chapel Ridge Funeral Home Markham இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 12.05.2021 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிமுதல் 5.00 மணிவரை இறுதிக் கிரியைகள் நடைபெற்று, மாலை 5.30 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**Rhaveene (மகன் - கனடா +16479827250)**
**Gajen (மகன் - அமெரிக்கா +19739010054)**
**Rajith (மகன் -கனடா +16479689263)**

# 10 நாள்களுக்குள் ஆயிரம் கட்டில்கள்

தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க தயாராகும் என்கிறார் பசில் ராஜபக்ச

**கொழும்பு, மே 9**
**கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு 10 நாள்களுக்குள் 10 ஆயிரம் கட்டில்கள் தயாராகும் என்று ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.**

அலரி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத் தறை, அம்பாந்தோட்டை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்தத் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

10 ஆயிரம் கட்டில்களுக்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் மேலதிக சிகிச்சை நிலையங்களை இனங்கண்டு அவற்றுக்குத் தேவையான கட்டில்களும் உபகரணங்களும் வழங்கப்படும்' என்றும் பசில் ராஜபக்ச குறிப்பிட்டார். (ஒ.இ)

## மின்தடை

யாழ்ப்பாணம், மே 9
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். மாவட்டத்தில்** அண்ணாமலையார் ஸ்ரீராகவேந்திரா என்ரபிறைசஸ், எவர் கிறீன் அச்சகம், ஹரிகணன் பிறைவேட் லிமிரட், யாழ் தொழில்நுட்ப கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, பல்கலைக்கழக விடுதி, அரசடி வீதி சீனியர் வீதி சந்தி, ஐயனார் கோவிலடி, கலட்டி பிறவுண் வீதி, மனோகரா நாவலர் வீதி, மாவடி, நாச்சிமார் கோவிலடி, தட்டாதெரு கே.கே.எஸ். வீதி சந்தி, நெதேர்ண் இண்டஸ்ரீஸ் கொக்குவில் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி மாவட்டத்**தில் நன்னீர் மீன் உற்பத்தி, இரணைமடு விமானப் படை, வட்டக்கச்சி பண்ணை , கறுப்பிக்குளம், கோவிந்தங்கடை சந்தி, மாயவனூர், பன்னங்கண்டி, இராமநாதபுரம், இரத்தினபுரம், சின்னச்சந்தை, உடைச்சகண்டி, வட்டக்கச்சி ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** அவறந்துலாவ, எல்லப்பர்மருதங்குளம், மெனிக்பாம், மெனிக்பாம் வலயம் 2, 3 2, 4, 3 1 சக்திகம் மல்வத்து ஓயா, ஆண்டிய புளியங்குளம், சுகாதார மையம், கதிர்காமநகர், கிறிஸ்தவகுளம், மெனிக்பாம் (அறிவுத்தோட்டம்), முகத்தாங்குளம், 2 வது பண்ணை , பீடியாபார்ம், பழைய கிராமம், பெரியகாடு, புதுக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## தே.எண்ணெய் தொடர்பில் வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே 9
இறக்குமதி செய்யப்படும் சமையலுக்கான தேங்காய் எண்ணெய் உடன் வேறு எந்த எண்ணெயையும் கலப்பதை தடை செய்து அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. உடன் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவிப்பு நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளது. இறக்குமதியாளர், உற்பத்தியாளர்கள், களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சமையலுக்கான தேங்காய் எண்ணெயில் வேறு எந்த எண்ணெயையும் கலக்கக்கூடாது என அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய பதார்த்தம் இருப்பதாகக் கண்டறியப்பட்டு மிகப் பெரிய சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

## கோத்தாவின் கொள்கைக்கு வலுச்சேர்க்கிறார் வாசுதேவ

கொழும்பு, மே 9
ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் 'சுபீட்சத்துக்கான நோக்கு' கொள்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஜனநாயக இடதுசாரி முன்னணி வெளியிடும் 'சுபீட்சத்தின் நோக்கத்துக்கான மக்களை மையமாகக் கொண்ட வெளியீடு' அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவால் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் முற்பகல் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது. தற்போதைய நாடு, மக்களை மையமாகக் கொண்ட அரசியல் வரலாறு, சுபீட்சத்தின் நோக்குக்கு வழிவகுத்த பத்து கோட்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கை ஆகிய தலைப்புக்களின் ஊடாக இந்த வெளியீட்டின் மூலம் ஜனநாயக இடதுசாரி முன்னணி விடயங்களை முன்வைத் துள்ளது. நல்லாட்சியின் போது இடம்பெற்ற உள்ளூர் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமான விடயங்கள், ஏற்றுமதி பொருளாதார வீழ்ச்சிக்கான காரணிகள், நாட்டின் நிதி அமைப்பின் வீழ்ச்சிக்கான காரணிகள், உள்ளூர் வர்த்தகம் வீழ்ச்சி, பொருள்களின் விலையேற்றம், வேலையின்மை மற்றும் வறுமை நிலையின் உயர்வு ஆகிய விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஒ.இ)

# தவறணைகளை மீளத் திறப்பதற்கு நிபந்தனையுடன் அனுமதியுங்கள்

## பிரதமருக்கு கிளிநொச்சியிலிருந்து கடிதம்

கிளிநொச்சி, மே 9
கொரோனாத் தொற்று பரவலால் கள் விற்பனை நிலையங்களை மூடுவதன் மூலமாக, அதனை வாழ்வாதாரத் தொழிலாக செய்து வருகின்ற ஏழைக் குடும்பங்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றன. எனவே அவர்களின் குடும்ப நிலைமைகளைக் கருத்திற்கொண்டு கள் விற்பனை நிலையங்களை நிபந்தனையுடன் மீளத் திறப்பதற்கு அனுமதிக்குமாறு கோரி பிரதமருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் குறித்த கடிதத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில்,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக கள் விற்பனை நிலையங்களை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு கள் உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்றது. ஏனெனில், இந்தக் குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள். தற்போதைய காலம் கள் உற்பத்திக்கான பருவ காலமாகும். இந்தக் காலத்தில் கள் விற்பனை நிலையங்களை மூடுவதனால் அவர்களின் பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்படும். எனவே, தாங்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தி சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கள் விற்பனை நிலையங்களை மீளத் திறப் பதற்கு அனுமதியளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கு-2114)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனா பியூட்டி பஷன்



❖ கெயஸ்ரைல் ❖ கேக் ஐசிங்

❖ பேசியல் ❖ பூக்கள்

ஆரி வேக் பயிற்சிகள் சேவைகள்
நிறுவனத்திலும்
உங்கள் இல்லங்களிலும்




தொடர்பு: 077 509 8103, 077 601 8563

# சிறுநீரகம் உடன் தேவை

0 + சிறுநீரகம் உடன் தேவை வழங்க விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

076 018 3700/ 077 468 5553

# SLIIT UNI
THE KNOWLEDGE UNIVERSITY



நாளைய தினத்தில் நீங்கள்

புதிய
மாணவர்களுக்கான
அனுமதி

## MAY INTAKE 2021
UNDERGRADUATE DEGREE PROGRAMMES

COMPUTING | BUSINESS | ENGINEERING | EDUCATION | PSYCHOLOGY | NURSING | LAW | ARCHITECTURE | QUANTITY SURVEYING | HOSPITALITY & COOKERY

**4 YEARS** BSC (HONS) DEGREE IN INFORMATION TECHNOLOGY SPECIALISING IN

**4 YEARS** BBA (HONS) DEGREE SPECIALISING IN

**4 YEARS** BSC ENGINEERING (HONS) DEGREE IN

### SLIIT UNDERGRADUATE DEGREE PROGRAMMES - UGC APPROVED

Software Engineering
Information Technology
Computer Systems & Network Engineering
Data Science
Information Systems Engineering
Cyber Security
Interactive Media

**AUSTRALIAN DEGREE PROGRAMMES** Curtin University

Bachelor of Computing (Software Engineering)
Bachelor of Information Technology
Bachelor of Science (Computer Systems and Networking)

**BSC (HONS) ARCHITECTURE DEGREE**

BSc (Hons) Architecture

Business Management
Human Capital Management
Marketing Management
Accounting & Finance
Logistics & Supply Chain Management
Business Analytics
Management Information Systems
Quality Management

**BRITISH DEGREE PROGRAMMES** LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

Bachelor of Business Administration (Hons)

**WILLIAM ANGLISS INSTITUTE @SLIIT**

Hospitality Management
Commercial Cookery
Event Management
Patisserie

Civil Engineering
Electrical & Electronic Engineering
Materials Engineering
Mechanical Engineering
Mechanical Engineering (Mechatronics)

**AUSTRALIAN DEGREE PROGRAMMES** Curtin University

Bachelor of Engineering (Hons) Civil & Construction Engineering
Bachelor of Engineering (Hons) Electrical & Electronic Engineering
Bachelor of Engineering (Hons) Mechanical Engineering
Bachelor of Engineering (Hons) Mechatronic Engineering

**BRITISH DEGREE PROGRAMMES** LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

Bachelor of Engineering Quantity Surveying

**BRITISH DEGREE PROGRAMMES** LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

BSc (Hons) Nursing (International)
BSc (Hons) Psychology
LLB (Hons) Law

**HUMANITIES AND SCIENCES**

**BEd (HONS)in**

Physical Sciences
Biological Sciences
English

**BSc (HONS) in**

Biotechnology
Financial Mathematics and Applied Statistics

மேற்குறிப்பிடப்பட்ட பட்டப்படிப்பு பாடநெறிகளின் நுழைவுத் தகைமைகளை அறிய, மாணவர்கள் சேர்ப்பு அணியை தொடர்பு கொள்க 011 754 4801.

*These degrees are offered by SLIIT as approved by the University Grants Commission and Ministry of Education, Sri Lanka.*

நினைவுபடுத்தும் திகதிகள்

விண்ணப்ப முடிவுத்திகதி
**20 MAY 2021**

## SCHOLARSHIPS
- FULL SCHOLARSHIP OFFERED TO THE TOP 3 GCE A/L (Sri Lanka) PERFORMERS IN SELECTED STREAMS*
- PERFORMANCE BASED SCHOLARSHIPS ARE OFFERED

*Conditions apply

நுண்ணறிவு சோதனை
**22 MAY 2021**

பரீட்சை நிலையம்
கொழும்பு, மாலபே, கண்டி, குருநாகல், மாத்தறை, யாழ்ப்பாணம்

மொழி மூலம்
ஆங்கிலம், சிங்களம், தமிழ்

Media Monkey

☎ 011 754 4801, 011 754 4802

SLIIT UNI THE KNOWLEDGE UNIVERSITY

SLIIT Malabe Campus
New Kandy Road
Malabe

IAU INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES

The Association of Commonwealth Universities

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட சலுகை

எமது சண் சொப்பிங் மால், சண் Foodcity மாத வாடிக்கையாளராக பதிவு செய்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்திற்குள் ரூபா 30000/- க்கு கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ஒவ்வொரு தடவையும் சிலிண்டர் ஹாஸ் இலவசமாக வழங்கப்படும்.




No. 269,
கெற்றபோல் சந்தி,பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொடர்பு:
077 002 8023

## இடி, மின்னல் தாக்கத்தால் பற்றியெரிந்த மின் இணைப்பு

கொழும்பு, மே 9

மன்னார் - பெற்றா பகுதியில் அமைந்துள்ள வெற்றி யின் நல் நம்பிக்கை இல்லத்தின் மீது நேற்றுமுன்தினம் மாலை இடி, மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் குறித்த இல்லத்தின் மின் இணைப்புக்கள் முழுமையாக எரிந்து சேதமாகியுள்ளன. இதன் போது, இல்லத்தில் உள்ள சிறுமிகள், பாடசாலை மாணவிகள் வெளியேற்றப்பட்டு அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இடி, மின்னல் தாக்கத்தின்போது குறித்த இல்லத்தில் சிறுமிகள், பாடசாலை மாணவிகள் என 15 பேர் இருந்துள்ளனர். எனினும், எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை.

அன்றையதினம் தொடர்ச்சியாக இடி மின்னலுடன் கூடிய மழை பெய்த நிலையிலே குறித்த இல்லத்தின் மீது இடி, மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது. மின்சார சபைக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில், விரைந்து வந்த மின்சார சபையினர் மின்சார இணைப்பை துண்டித்தனர் என்று மேலும் தெரிவிக் கப்பட்டது. (த-இ)

## பதவி வெற்றிடம்

யாழ் நகரின் பிரபல்ய வர்த்தக நிறுவனம் ஒன்றில்

(1) விற்பனை உதவியாளர்
(2) பொதியிடலாளர் (இயந்திர மூலம்)

கணினியறிவுடன் வணிகக்கல்வி கற்றவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். பொருத்தமான ஆண்கள் மட்டும் தொடர்பு கொண்டு திங்கள் முதல் வெள்ளி வரை முற்பகல். 10.00 முதல் பிற்பகல். 3.30 வரையான காலப்பகுதிக்குள் நேரில் வருகை தரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

021 221 6889, 077 477 3481, 077 623 1295

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
16 . 03 . 1940

மறைவு
09 . 04 . 2021



கடந்த 09.04.2021 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குல விளக்கு எமது பாசமிகு தாயார்

### அமரர் திலகவதி கதிர்காமத்தம்பி

திதி : திரியோதசி

அவர்களின் இறுதிக்கிரியையன்று வருகை தந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், ஆறுதல் தெரிவித்தோருக்கும், தொலைத்தொடர்புகள் ஊடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு: இன்றைய கொரோனா சூழ் நிலை காரணமாக அன்னாரின் 31ஆம் நாள் கிரியைகளிற்கும், உபசாரங்களுக்கும் தங்களை அழைக்க முடியாதிருப்பதற்கு மனம் வருந்துகின்றோம்.**

இல.36, செட்டித் தெரு,
நல்லூர்.

நிசாகரன் (மகன்)

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## V A V Holdings (Pvt) Ltd.
## வேலைவாய்ப்பு

**கனடா நாட்டிற்கான உடனடி வேலைவாய்ப்பு**
**கனடா மொன்றியல் நகரில்**

- **மீள்பொதிசெய்பவர்கள்** - 40 20 CAD/h
- **மேற்பார்வையாளர்** - 30 25 CAD/h

உடன்படிக்கை கைசாத்திட்டு **90 நாள்களில் பயணம்.**

தொடர்பு: **பிரபு**
071 368 4639, 077 845 5173

Branch :
No. 14, Muslim College Road, Jaffna, Sri Lanka
Tel : 021-3153131 / 021-3153132 / 021-3153133
E-mail : vavholdingsjaffna@gmail.com

## Global Communitites
Partners for Good

### INVITATION FOR TENDER

The Cooperative Housing Foundation, doing business as Global Communities(GC), invites interested registered firms with experience in Irrigation construction works to submit their proposals.

In the framework of Social Cohesion and Reconciliation Activities (SCORE), the GC's Bids Evaluation and Awarding Committee (BEAC) now invites eligible contractors to submit proposal for following construction work.

| Tender Reference No | Description of works and location | Estimate Amount |
|---|---|---|
| RFQ/FY21/0015 | Renovation of irrigation channel of Periyaiththumadu tank at Oddusuddan, Mullaithivu | 2.2 Mn |

A prescribed Request for Proposal (RFP) is available for issuance for free of charge upon request via email to SCOREprocurement@globalcommunities.org or can be collected a set of hard copy at

**Regional Office – Global Communities**
01st Floor, SLRCS Building,
Off Park Road,
Vavuniya.

**Tender Process Schedules**
❖ Bid Issuance : From 11th May 2021 to 19th May 2021 during Office hour.
❖ Pre-bid meeting Date and Site Visit Location : 19th May 2021 at 02.30pm
: Periyaiththumadu tank at Oddusuddan, Mullaithivu (The Site)
❖ Bid Closing date : 31st May 2021 at 3.30pm

GC reserves the right to accept or reject any proposal, and to cancel the procurement process and reject all proposal at any time prior to award of Contract, without obligation to inform the affected Bidder/s of the ground for GC action.

## Holy Cross School of Health Science
767 / 4 Beach Road, Jaffna.

| Nurse Assistant (NVQ L IV) | Diploma in Nursing (NVQ L VI) |
|---|---|
| • Qualification - G.C.E (O /L) | • Qualification - G.C.E (A /L) Completed |
| • Duration - 18 Months | • Duration - 3 Years (2 Years Studies, I year training with Salary) |

இதற்கான விண்ணப்பங்களை 15.05.2021 திகதிக்கு முன்னதாக தங்களுடைய சுயவிபரக்கோவையுடன் (Bio Data) நேரடியாகவோ or தபால் மூலமாகவோ எம்மைத் தொடர்புகொள்ளவும்.

021 222 2423 / 077 115 9391

## LOLC LIFE ASSURANCE — யாழ் நகரில் உடனடி வேலைவாய்ப்பு

♕ தன்னம்பிக்கையுடன் , முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டோர் நீங்களா?
♕ பகுதி நேர வேலை செய்து மேலதிக வருமானம் உழைக்க ஆசையா?
♕ 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமான அதி உன்னதமான வேலைவாய்ப்பு.

**FINANCIAL PLANNER**



பகுதி நேர வேலை வாய்ப்பு
கா பொ.த சாதாரண பரீட்சை சித்தி
தன்னம்பிக்கை உடையவர்கள்

**TEAM MANAGER**



முழு நேர வேலை வாய்ப்பு
கா பொ.த உயர்தர பரீட்சை சித்தி
தன்னம்பிக்கை உடையவர்கள்
குழு முகாமைதத்துவ ஆற்றல்
அலுவலக மற்றும் களப்பணி ஆற்றல்
நிதித் துறை அனுபவமிக்கவர்கள்.

**CLUSTER MANAGER**



முழு நேர வேலை வாய்ப்பு
கா பொ.த உயர்தர பரீட்சை சித்தி
தன்னம்பிக்கை உடையவர்கள்
குழு முகாமைத்துவ ஆற்றல்
அலுவலக மற்றும் களப்பணி ஆற்றல்
நிதித் துறையில் 3 வருடகால அனுபவமிக்கவர்கள்

வெளிநாட்டு பயணங்கள் , கார் , வீடு மற்றும் ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமா?

076 - 8903761 077 - 3373157 077 - 4993186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு எம்.பிக்கள் சென்றதால் பிரதிப் பணிப்பாளருக்கு விசாரணை

**யாழ்ப்பாணம், மே 9**
**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரியவருகின்றது.**

கடந்த மாதம் 15ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்றிருந்தனர். அங்குள்ள குறைபாடுகள் தொடர்பில் மருத்துவர்களுடன் கலந்துரையாடியிருந்தனர். அத்துடன் மருத்துவமனையின் பல்வேறு பகுதிகளையும் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தாவிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரியவருகின்றது. (ஒ.5)

## மகாவலி அதிகார சபையினது காணி கையேற்பு நடைபெறாது

### கூட்டமைப்பிடம் உறுதியளித்தாராம் இராஜாங்க அமைச்சர் சமல்

யாழ்ப்பாணம், மே 9
முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழான 8 கிராம அலுவலர் பிரிவுகளையும், மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கும் நடவடிக்கை நடைபெறாது. இடைநிறுத்தப்பட்டுள்ள அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படாது. இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச உறுதியளித்துள்ளார் என, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தின் போகஸ்வெள கிராமத்தில் இன்று நடைபெறவுள்ள மீளாய்வுக் கூட்டத்தின் போது, 8 கிராம அலுவலர் பிரிவுகளையும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கும் விவகாரமும் நிகழ்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக முல்லைத்தீவு மாவட்டச் செயலரும் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை வரையில் இதில் எந்தவொரு மாற்றமும் செய்யப்படவில்லை என்று அறியமுடிந்தது.

ஆனாலும் நேற்றுக் காலை 10 மணியளவில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்சவுடன் பேச்சு நடத்தினார்.

இது தொடர்பில் மாவை சேனாதிராசா அனுப்பி வைத்துள்ள பத்திரிகைக் குறிப்பில், 8 கிராம அலுவலர் பிரிவுகளையும் அவ்வாறு மகாவலி அபிவிருத்தி அதிகார சபை கையேற்கும் நிகழ்வு நடைபெறாது என்று வாக்குறுதி வழங்கியுள்ளார். 'அந்தப் பிரதேசங்களில் நவீன முறையில் நீர்ப்பாசன நடவடிக்கைகள் மேற்கொள்ளவே முயற்சிக்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்' என அமைச்சர் தெரிவித்தார் என்று மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

'அந்தப் பிரதேசங்களில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை நீர்ப்பாசன நடவடிக்கைகளின் பொழுது தென்னிலங்கையிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்களைக் குடியேற்றி இனக் குடிப்பரம்பலைச் சீர்குலைக்க முயற்சிக்கப்படும் என்ற அச்சம் தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது' என்று மாவை.சேனாதிராசா, இராஜாங்க அமைச்சர் சமலிடம் சுட்டிக்காட்டி யுள்ளார். 'அவ்வாறு நடைபெறாது. தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்கப்படாது. தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடம் இவ்விடயம் பற்றிப் பேசித் தீர்மானிப்பேன்' என்று சமல் ராஜபக்ச பதிலளித்தார் என மாவை சேனாதிராசா குறிப்பிட்டார்.

சமல் ராஜபக்சவுடனான இந்தப் பேச்சின்போது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமிறக்கப்பட்ட விடயம் தொடர்பிலும் மாவை சேனாதிராசா கலந்துரையாடியுள்ளார். (ம-ஒ.5)

## 130 கர்ப்பிணிகளுக்குக் கொரோனா: இருவரின் நிலைமை கவலைக்கிடம்

கொழும்பு, மே 9
இலங்கையில் புதிய கொரோனாக் கொத்தணியில் தொற்றுக்குள்ளான 130 கர்ப்பிணிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்று குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். தொற்றுக்குள்ளான அதிகமான கர்ப்பிணிகள் முல்லேரியா, நெவில் பெர்னாண்டோ மற்றும் ஹோமாகம ஆகிய மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

கர்ப்பிணிப் பெண்கள் இயலுமானவரை வீட்டில் இருந்து கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுமாறும், சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (ம-22)

## கொரோனா வைரஸுடன் 70 குழந்தைகள் பிரசவம்

கொழும்பு, மே 9
சொய்சா மகளிர் வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 70 குழந்தைகள் பிறந்துள்ளனர் என்று குழந்தைப் பிறப்பு தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் நளின் கமஹெதிகே தெரிவித்தார். அந்தக் குழந்தைகள் அனைவரையும் தனித் தனியாகவும் பாதுகாப்பாகவும் கவனித்து வருகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் அனைத்து வைத்தியசாலைகளிலும் கொரோனாத் தொற்றுக்குள்ளான குழந்தைகளைப் பராமரிப்பதற்காக தனியே பிரிவு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (ம-22)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**
**யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்**
**(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)**
**தொடர்பு:**
**077 288 0152**
**074 075 4204, 077 468 3354**

**உடனடி வேலைவாய்ப்பு**

அரச அங்கீகாரம் பெற்ற PVT (LTD) Company யில் பல வகையான Job, வங்கி உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் பல வேலைகள் உள்ளன.
முந்தும் 18 பேருக்கு முன்னுரிமை.
**உடன் தொடர்பு:**
jobsbank 04 @gmail.com
077 03 18 126

**Dr.eam of Studying MBBS / MD**
**China | Belarus | Latvia | Malaysia | Russia Georgia | Armenia**


Limited Seats are Available for 2021 intake
Colombo : 076 7013060
107, B-1/1 Galle Road, Colombo 06
Jaffna : 077 3013060
77, Clock Tower Road, Jaffna
ICS Study Medicine Abroad

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 02 . 1929



மறைவு
26 . 04 . 2021

**திருமதி பராசக்தி நாகலிங்கம்**

யாழ்ப்பாணம் கந்தர்மடம் அரசடியை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது லண்டன் Milton Keynes இனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி நாகலிங்கம் கடந்த 26.04.2021 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரு சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சீவரட்ணம், சிவராஜா, இராஜரட்ணம், குணரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், வசந்தமலர், சாந்தமலர், லலிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினம், சுபராம், ஸ்ரீரமணானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தனுஜன், அபர்ணா, லிபுசன், விதுஷா, விதுரன், அபிராமி ஆகியோரின் பேர்த்தியும், கர்ஷ்ணாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2021) திங்கட்கிழமை இடம்பெற்று, பூதவுடல் Crownhill crematorium Dansteed way MK8 OAH இல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 644 5949** **தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்தகைக்கு

யாழ். மன்னார் வீதி, தனங்கிளப்பு, சாவகச்சேரியில் அமைந்துள்ள 5 ஏக்கர் தென்னங் காணி வீட்டுடன் குத்தகைக்கு உண்டு.

தொடர்பு: 077 620 6486

## காணி விற்பனைக்கு

யாழ் நகரிலிருந்து 3 km தூரத்திலுள்ள நெடுங்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உறுதிக்காணிகள் விற்பனைக்குண்டு.

- ஒரு பரப்பு 12 Lakhs
- இரண்டு பரப்பு 20 Lakhs

5 பரப்பு சேர்த்தும் வாங்கலாம் தனித்தனியாகவும் வாங்கலாம் தனித்தனி உறுதி உண்டு. மேலதிக தொடர்புகளுக்கு:

074 027 2778

## வலயக்கல்வி அலுவலகம் - முல்லைத்தீவு
### பெறுகைக்கான அழைப்பு
### தளபாடம், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் வழங்கல் - 2021

வலயக்கல்வி அலுவலகத்தின் பிராந்திய பெறுகைகள்குழு தலைவர் தகுதியான தகைமைவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றேன்.

| Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| Goods / PSDG / FU/01 | Student Table (Type III) | 200 | 30,000.00 |
| | Student Chair (Type III) | 200 | |
| | Science Lab Table | 10 | |
| | Teacher Table | 20 | |
| | Teacher Chair | 20 | |
| | Science Lab Chair | 60 | |
| Goods / CBG/ FU/02 | Student Table (Type II) | 100 | 15,000.00 |
| | Student Chair (Type II) | 100 | |
| | Teacher Table | 20 | |
| | Teacher Table | 20 | |
| Goods / PSDG/S1/03 | Sports Items High jump mattress, Disk, Shot put, Javelin etc. | Small Package | 5,000.00 |
| Goods / PSDG/SC/04 | Chemicals for Science Lab | Small Package | 5,000.00 |
| Goods / PSDG/CBG/ EE/05 | Photo Copier | 02 | 20,000.00 |
| | Smart Boart with accessories | 04 | |

- விலைக்கேள்விதாரர் உபகரண பொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
- நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மேற் காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/- காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 10.05.2021 தொடக்கம் 28.05.2021 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- விலைக் கேள்விகள் 31.05.2021 ஆந் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 31.05.2021 ஆந் திகதி 10.00 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
- தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் T.P:021 2290015, Fax : 021 229 0017) வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
- கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்ளவதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு.**

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சேதுகாவலர் சங்கரப்பிள்ளை**

(முன்னாள் சிறிகாந்த ஸ்ரோர்ஸ் - உரிமையாளர்)

தோற்றம் 05.02.1931 — மறைவு 19.04.2012

நிஜமாக நீங்கள் மறைந்து ஒன்பதாண்டுகள் ஆனதோ !
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ !
உங்களை நினைத்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும் - ஐயா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## வலயக்கல்வி அலுவலகம் - முல்லைத்தீவு
### பெறுகைக்கான அழைப்பு விலைக்கேள்விக்கானகோரல் - 2021

1. வலயக்கல்வி அலுவலகம். முல்லைத்தீவுக்காக .பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகைமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப்பினும் வியாபாரபதிவினை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்களே விண்ணப்பிக்க முடியும்.
3. விலைக் கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார / கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. தகைமைகள் பற்றியதேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule. (பகுதி5). Schedule (பகுதி3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. தகுதி வாய்ந்தமற்றும் இதில் நாட்டமுள்ளவிலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2290015) வலயக்கல்வி அலுவலகம். முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
6. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் அட்டவணையின் படி காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 10.05.2021 தொடக்கம் 28.05.2021 வரையான காலப்பகுதியில் 09.00மணி தொடக்கம் 15.00 மணி வரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் 31.05.2021ஆந் திகதி 10:00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ வலயக்கல்வி அலுவலகம். முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 31.05.2021 ஆம் திகதி 10.00 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost/ (Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2021/ PSDG/BR/01 | Repair of Teachers Quarters Mu/Ethawetunuwewa Vid | 1.5 | 2 Month | C9 (Building) | 20, 000.00 | Till 31.08.2021 | 1,000.00 |
| NP/MU/2021/ CBG/BR/02 | Repair Of Classroom Building(160x25x2) at Mu/KokulaiSingala Vid | 1.165 | 2 Month | C9 (Building) | 15,000.00 | Till 31.08.2021 | 1,000.00 |
| NP/MU/2021/ CBG/BR/03 | Repair Of Classroom Building (80x20) at Mu/Kokulai Singala Vid | 2.220 | 2 Month | C8 (Building) | 25,000.00 | Till 31.08.2021 | 1,000.00 |
| NP/MU/2021/ CBG/BR/04 | .Repair of teachers Quarters at Mu/KokulaiSingala Vidyalayam | 2.100 | 2 Month | C8 (Building) | 25,000.00 | Till 31.08.2021 | 1,000.00 |
| NP/MU/2021/ B.G.MRC/BR/05 | Repair of office Building (60x25x2) At Mu/KokulaiSingala vid | 1 | 2 Month | C9 (Building) | 15,000.00 | Till 31.08.2021 | 1,000.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு.**

## மரண அறிவித்தல்

மலர்வு 16 . 08 . 1949



உதிர்வு 06 . 05 . 2021

**திருமதி கெஜஞானவதி இராஜசிங்கம் (பேபி)**

(இளைப்பாறிய பிரதம மருந்தாளர் - Castle Street மகப்பேற்று வைத்தியசாலை, பொரளை)

வர்த்தலைவிளானை பிறப்பிடமாகவும் Toronto, Canada வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெஜஞானவதி இராஜசிங்கம் - (பேபி) (இளைப்பாறிய பிரதம மருந்தாளர் - Castle Street மகப்பேற்று வைத்தியசாலை, பொரளை) மே மாதம் 6ந்திகதி இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னார் வர்த்தலைவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.சுப்பிரமணியம். திருமதி சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மகளும். கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.கந்தையா. திருமதி.செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற திரு.இராஜசிங்கத்தின் அன்பு மனைவியும். றவீன். கஜன். றஜீத் மற்றும் றஜீவன் ஆகியோரின் அன்புத்தாயாரும். சாமினியின் அன்பு மாமியாரும். ஆரிஷ் இன் அன்பு அப்பம்மாவும். காலஞ்சென்ற திருமதி குகஞானவதி மற்றும் திருமதி குணஞானவதி. திருமதி குலஞானவதி. திருமதி செந்தில்ஞானவதி. காலஞ்சென்ற திரு.குகஞானலிங்கம் மற்றும் திருமதி மகாஞானவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான திரு.சிவபாதசுந்தரம். திருமதி தனலஷ்மி. திருமதி பொன்மலர். திரு.குலசிங்கம். திருமதி தர்மபூபதி. திரு.பாலசிங்கம். மற்றும் திரு.ரட்ணசிங்கம். திருமதி. அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue Markham, ON L3R 5G1, Canada எனும் விலாசத்தில் 11.05.2021 செவ்வாய்க்கிழமை பார்வைக்காக வைக்கப்பட்டு. 12.05.2021 புதன்கிழமை இறுதிச்சடங்குகள் நடைபெறும்.

தகவல்:
Dr.K.சுரேஷ்குமார் (பெறாமகன்)
மகப்பேறு பெண் நோயியல் வைத்திய நிபுணர்
யாழ் போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமக்கள் தேவை

## மணமகள் தேவை
1990 யாழிந்து. உத்தரம். Doctor, அராலி. பதிவு: 5143. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை
1985 றோமன் கத்தோலிக்கம். Doctor, சில்லாலை. பதிவு: 5151, தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்-கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை
1987 றோமன் கத்தோலிக்கம், மிருகசீரிடம். Doctor, திருகோணமலை. பதிவு: 5167. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1989 யாழிந்து. ஸ்வாதி. Doctor, காரைநகர். பதிவு: 5806. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்-கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1991 யாழிந்து, உத்திராடம். Lawyer, யாழ்ப்பாணம். பதிவு: 5822, தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்-கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை
1990 யாழிந்து. ரேவதி. Assistant Accountant, யாழ்.திருநெல்வேலி. பதிவு: 5131. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்-கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1986 கார்த்திகை 2ஆம் பாதம், செவ்வாய்க்குற்றமுள்ள டாக்டர் பெண்ணுக்குத் தகுந்த வரனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு : 077 454 4760

## மணமகள் தேவை
உள்நாட்டு, வெளிநாட்டு மணமகள்கள் எம்மிடம் உள்ளனர். வேண்டி மணமகள்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு 077 212 3100

## மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 இல் பிறந்த, சூரிய செவ்வாய், (8 ஆம் இடம்) தொழில் Doctor மணமகனுக்கு மணமகள் தேவை
தொடர்பு: 077 222 4561

## மணமகன் தேவை
1993 யாழிந்து, மிருகசீரிடம், Bank, சுன்னாகம், பதிவு: 5419, தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1990 யாழிந்து, கார்த்திகை, Ayurvedic Doctor, காரைநகர். பதிவு: 5869. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத்தில் 20% கழிவு.
Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

விளம்பர தொடர்புக்கு
021 493 1111

# வாடகைக்கு

## வாடகைக்கு
யாழ்ப்பாணம், வைத்தியசாலை வீதியில், 3 மாடி கட்டடம் ஒன்று வாடகைக்கு உண்டு.
076 694 6798

## வீடு வாடகைக்கு
தாவடியில், K.K.S. வீதிக்கு அருகில் நல்ல நிலையிலுள்ள வீடொன்று வாடகைக்குண்டு.
தொடர்பு 077 020 4276

## வீடு வாடகைக்கு உண்டு
கொக்குவிலில் 2 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 885 2450

## வீடு வாடகைக்கு
கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் (A9 வீதியிலிருந்து 500m தூரத்தில்) 3 அறைகள், பெரியஹோல், சமையல் அறை, 2 மலசலகூட வசதிகளுடனான டைல்ஸ் (Tiles) பதித்த வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 610 4892

## வீடு வாடகைக்கு தேவை
அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு 076 784 3993

## வாடகைக்கு
அலுமினிய பெட்டியினைக் கொண்ட பட்டா வாடகைக்கு விடப்படும் மேலதிக விவரங்களுக்கு
077 136 6901 தொடர்புகொள்ளவும்.

## கடை வாடகைக்கு
No.21 வேம்படி வீதி யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு
077 413 5395

## வீடு வாடகைக்குண்டு
No.44A, டேவிட் வீதியில் சகல வசதிகளும் உடைய நான்கு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 666 9055

## அறைகள் வாடகைக்கு
சிறிய குடும்பத்திற்கு அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777 242 427, 0777 412 713

## வீடு வாடகைக்கு
யாழ் கன்னாதிட்டி லேனிலும், பிறவுண் றோட்டிலும் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 199 5709

# ஏனையவை

## வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் நல்லூருக்கு அருகில் உள்ள 02 பெண் Data Entry ஆள்கள் தேவை. Computer Typing Speed முக்கியம் CV அனுப்பவும் info@remlk.com or
தொடர்பு: 077 473 7737

## சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.
AAA Gold Center
076 568 4346

## வேலைவாய்ப்பு
தனியார் அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு [illegible] தேவை
தகைமை [illegible]
தொடர்பு 077 572 9724

## சேவை
உங்கள் வீடு / காணி விற்க அல்லது வாடகைக்கு கொடுக்க அல்லது வாங்க விரும்புபவர்கள் விவரத்துடன் அழைக்கவும்.
WhatsApp +947 747 377 37
+947 037 444 44

# தேவை

## வேலையாள் தேவை
தச்சு வேலை தெரிந்தவர் தேவை. சம்பளம் - 25000/= (யாழ் நகர்)
T.P: 0777 771 723

## வேலையாட்கள் தேவை
Coreldraw, Photoshop தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் - 15000/= (மாதம்). 4 நாள்கள் லீவு. யாழ் நகர்.
T.P: 0777 771 723

## வாகனம் தேவை
வீதி அபிவிருத்தி பணிகளுக்கு 3,4,5 கியூப் அளவு கொண்ட ரிப்பர் (Tipper) வாகனம் தேவை.
074 100 3932, 074 100 3936

## பணிப்பெண் தேவை
கொக்குவில் பகுதியில் 3 வயது மற்றும் 5 மாத குழந்தைகளைப் பராமரிக்க பணிப்பெண் தேவை.
தொடர்பு: 076 294 3552

## பணியாளர்தேவை
வீட்டுத்தோட்டத்துடன் கூடிய வீட்டை பராமரிப்பதற்கு பணியாளர் ஆண் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது தங்கிநின்று பணிபுரிவதற்கு. சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்பு: 077 030 6716

## வேலை ஆட்கள் தேவை
கிளிநொச்சி Flower Center க்கு பெண் வேலையாட்கள் தேவை. (18 - 30 வயதுக்குட்பட்வர்கள்)
தொடர்பு: 077 400 5023

## வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள
- மேசன்
- கூலியாட்கள்
- வெல்டர்
- தச்சுவேலைசெய்வோர்
- தொழிநுட்ப உத்தியோகத்தர் (T.O)

தேவை.
தொடர்பு:076 316 5734, 077 985 1946
e.mail: jenoshanark@gmail.com

## தேவை
வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்ய பெண் வேலையாள் தேவை
தொடர்பு 077 389 7435

## தேவை
நல்லூரில் அமைந்துள்ள வியாபார நிலையத்திற்கு கணக்குகளை சரி பார்த்து தர கூடிய பெண் ஒருவர் தேவை தகுதி A/L அல்லது O/L
076 826 7703

## ஆள்கள் தேவை
திருநெல்வேலியில் இயங்கும் பான்சி கடைக்கு வரவேற்பாளர், விற்பனை பிரதிநிதி ஆகிய வேலைக்கு வேலையாள்கள் தேவை. சம்பளம் 20,000 - 30,000
தொடர்பு: 076 646 1089

## வேலையாள் தேவை
அரிசி ஆலை மற்றும் மில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
T.P: 076 684 9867

## தேவை
[illegible] வேலைக்குத் தேவை
[illegible] மில்ஸ்
179, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 174 6101

## குழந்தைபேறு பார்க்க பெண் தேவை
குழந்தை பேறினை பார்ப்பதற்கும், குழந்தையினை பராமரிப்பதற்கும் அனுபவமுள்ள, தங்கி நின்று பணிபுரியக்கூடிய பெண் தேவை.
தொடர்பு: 077 0250 339

# விற்பனைக்கு

## காணி விற்பனைக்குண்டு
கோப்பாய் இராஜபாதை வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
077 773 0567

## வீடு காணி விற்பனைக்கு
யாழ் நகருக்கும் நல்லூருக்கும் அண்மையாக 1 கிலோ மீற்றர் தூரத்திற்குள் நல்ல அயலவர்கள் மற்றும் அமைதியான சூழலில் பெறுமதியான காணியில் அமைந்துள்ள திருத்தியமைக்கப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு:
தொடர்பு: 074 142 6687 இற்கு பெயர், முகவரியை SMS அல்லது Missed Call செய்க. உரிமையாளர் தொடர்புகொள்வார்.

## காணி விற்பனைக்கு
நீர்வேலி கரந்தன் வீதியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 236 7508

## காணி விற்பனை
யாழ் அரியாலை பொன்னம்பலம் சந்தி TATA Company என்பவற்றிற்கு அண்மையாக A9 வீதியில் இருந்து 100m இல் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை
தொடர்பு: 076 806 3757

## கார் விற்பனைக்கு
65-xxxx , உற்பத்தி - 1997 , பதிவு -2000 Nissan B14 சுன்னாகம்.
தொடர்பு: 077 532 9802

## வீடு விற்பனைக்கு
நாவற்குழியில் $1\frac{1}{2}$ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 717 1280

# கல்வி

## பிரத்தியேக வகுப்புகள்
A/L 2023, 2022, 2021 and Repeat Classes
இணைந்த கணிதம் - 077 832 4002
பௌதீகவியல் - 077 316 4504
(தனியாகக் கற்பிக்கப்படும்)

## ENGLISH PERSONAL CLASSES
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்
உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் யாழ்ப்பாணம்.
T.P: 077 658 9443

## Online Classes
இலவச ஆங்கில, கணினி, சிங்கள இணையவழி வகுப்புக்கள்
பாடசாலை விடுமுறையில் உள்ள மாணவர்கள், க.பொ.த. (உ/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கான Zoom வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதனால் பதிவுகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். Online Membership No வழங்கப்படும்.
IPS Campus

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சிக்கு தமிழகத்தின் ஆதரவு அவசியம்

## பொ-பொ இயக்கம் ஸ்டாலினிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 9

**தமிழக உறவுகளுக்கும், ஈழத் தமிழருக்கும் இடையே காணப்படும் பண்பாட்டு மற்றும் கலாசார ரீதியிலான இறுக்கமான உறவே தமிழ்த் தேசியத்தின் உறுதியான வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும். தமிழகத்தின் புதிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈழத் தமிழர் நல்வாழ்வுக்குத் தொடர்ச்சியாக ஆதரவு வழங்க வேண்டும்.**

இவ்வாறு "பொத்துவில் முதல் பொலிகண்டி வரை" மக்கள் பேரெழுச்சி இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள மு.க.ஸ்டாலினுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துக் கடிதத்திலேயே அந்த இயக்கம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது: தமிழகத்தின் முதல்வராக முதன் முறையாக பதவியேற்கும் மு.க. ஸ்டாலினுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில், ஈழத் தமிழர் நல்வாழ்வு எனும் தலைப்பின் கீழ் முன்மொழியப்பட்ட, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவை குறித்துச் சுதந்திரமானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயற்படுத்த வேண்டுமென மத்திய அரசை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஈழத் தமிழர்களின் விருப்பத்துக்கேற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய இலங்கையில் உள்ள தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. சபையின் மேற்பார்வையில், பொதுவாக்கெடுப்பு நடத்தவும், இலங்கையில் புதிதாக உருவாக உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்குக் கிடைத்திடும் வகையில் சட்டப் பிரிவுகளை உருவாக்கவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று மத்திய அரசை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும் என்றும் குறிப்பி டப்பட்டிருந்தது.

ஈழத் தமிழினத்தைப் பலப்படுத்த வேண்டிய தார்மீக கடமை தமிழ் நாட்டுக்கு உண்டு என்பதை உரிமையுடன் வலியுறுத்த விரும்புகின்றோம். தங்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் மென்மேலும் வளர்ச்சியுறவும், ஈழத்தமிழினத்துடனான உறவு வலுப்பெறவும் எதிர்பார்த்திருக்கின்றோம் - என்றுள்ளது. (ஏ-150)

# ரிஷாத் பதியுதீனின் கைதுக்கு சபையில் கண்டனத் தீர்மானம்

கொழும்பு, மே 9

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கிண்ணியா பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (த-இ)

# சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் பாடசாலைகளே பெற்றோரின் தெரிவு!

## ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றவேண்டும் என்கிறார் மஹிந்த

கொழும்பு, மே 9

பிரபல பாடசாலைகளுக்குச் செல்வது என்பது தற்போதைய மாணவர்களின் நோக்கமல்ல. சிறந்த பெறு பேறுகளை வெளிப்படுத்தும் பாட சாலைகளுக்கு பிள்ளைகளை சேர்ப்பதிலேயே பெற்றோர் ஆர்வம் கொண்டுள்ளனர். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிறந்த பெறுபேறுகளைப் பெறும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளைச் சேர்க்கும் நிலை காணப்படுவதால் நாட்டின் அனைத்து பாடசாலைகளது ஆசிரியர்களும் அதிபர்களும் தமது பாடசாலையின் பரீட்சை பெறுபேறு களை உயர்ந்த மட்டத்துக்கு கொண்டு செல்ல அர்ப்ப ணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ஒ.இ)


**திறன் அபிவிருத்தி செயற்றிட்டம்**

**இணையவழிக் கருத்தரங்கு**

2020ஆம் ஆண்டில் இடம்பெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றி பல்கலை அனுமதி கிடைக்கப் பெறாத மாணவர்களை விசேட கற்கை/ தொழில் வாய்ப்பில் ஈடுபடுத்தும் நோக்கிலான இணையவழிக் கருத்தரங்கு

**திகதி: 12.05.2021**

**நேரம்: 10.00 AM**

ஆர்வமுடையவர்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி, சுட்டிலக்கம், பாடசாலை போன்ற விபரங்களை 076 685 2529 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பி ID யினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

**இணைப்பாளர்,**
**திறன் அபிவிருத்தி செயற்றிட்டம்**
**தொழில்சார் கல்வி வளர்ச்சி மன்றம்**
**யாழ்ப்பாணம்.**


# ஜனாதிபதி நினைப்பதையெல்லாம் பிரயோக ரீதியில் நடத்திவிடமுடியாது

## மட்டு. மாவட்ட விவசாய சம்மேளனம் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, மே 9

உரத் தடையின் மூலமாக எமது நாட்டின் பொருளாதாரம் நிச்சயம் வீழ்ச்சியடையும். தற்போதைய கொரோனா நிலைமையில் நாம் நம்பியிருப்பது உற்பத்தி அரிசியையும், ஒரு பாதி தேங்காயையும் மட்டுமே. உரத்துக்கு தடை விதித்தால், இந்த இரண்டும்கூட இல்லாமல் இறக்குமதி செய்யும் நிலைமைக்கே நாடு வந்து சேரும். ஜனா திபதி நினைப்பதையெல்லாம் பிரயோக ரீதியில் நடத்திவிட முடியாது. இவ்வாறு தெரிவித்தார், மட்டக்களப்பு மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் நடேசன் சுந்தரேசன்.

மட்டு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

மட்டக்களப்பு மாவட்ட விவசாயி களுக்கு தற்போது எவ்வித உதவியும் இல்லை. மருந்து வகைகள், கிருமி நாசினிகள்கூட வழங்கப்படவில்லை. பசளையும், உரமருந்துகளும் இல்லாமல் மிகவும் கஸ்டமான நிலையை எதிர்நோக்கி இருக்கின்றார்கள். இத்தனை காலங்களும் நாங்கள் செயற்கை உரங்களையே பாவித்து வந்தோம். அது உடலுக்குக் கேடானதுதான். கடந்த அரசின் காலத்தின்போது இந்த விடயத்தை நாங்கள் கூறி இயற்கை உரம் பற்றியும் கூறியிருந்தோம். ஆனால் இந்த அரசு இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. இயற்கை உரப் பாவனை விடயத்தைச் சிறிது சிறிதாகவே நடைமுறைப்படுத்த வேண்டுமே தவிர திடீரென நடைமுறைப்படுத்த முடியாது. உரம் வழங்கும் செயற்பாடு நிறுத்த ப்பட்டமையால், 60 வீதமான விவ சாயிகளைக் கொண்ட நாட்டிலே விவசாயிகளின் தொழில் முயற்சி இல்லாமல் போகும் [illegible] இலங்கைக்குத் தேவையான முப்பதில் ஒரு பங்கு நெல் உற்பத்தியும் இல்லாமல்போகும். அதாவது ஒரு கிலோ நெல் சுமார் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யவேண்டிய நிலை ஏற்படும். ஜனாதிபதி நினைத்துக் கொண்டார் காலையில் மரவள்ளி நாட்டினால் மாலையில் மரவள்ளிக் கிழங்கு எடுக்கலாம் என்று. இவை திடீரென்று செய்யக்கூடிய விடயம் அல்ல.

மஞ்சள் இறக்குமதியை முற்றாக நிறுத்திவிட்டு தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் மஞ்சள் கன்றுகளை வழங்குகின்றார். அந்தச் செடிகள் எப்போது வளர்ந்து நாம் எப்போது மஞ்சள் உபயோகிப்பது?. மஞ்சள் இறக்குமதியைப் பாதியாகக் குறைத்துவிட்டே இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தி ருக்க வேண்டும். எனவே இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தற்போதைய நிலைமையைச் சமாளிப்பதற்காகவாவது எமக்கு இரசாயன உரங்களை வழங்குவதோடு, இந்த இரசாயன உரப் பாவனையை எவ்வாறு குறைப்பது என்று நன்கு திட்டமிட்டு ஐந்து வருடங்களுக்குள் கட்டம் கட்டமாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.


**மரண அறிவித்தல்**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 . 02 . 1975 |  | 03 . 05 . 2021 |

**இராஜசிங்கம் நிசாந்தன்**

யாழ்ப்பாணம் கொட்டடியை பிறப்பிடமாகவும், கனடாவினை வசிப்பிமாகவும் கொண்ட இராஜசிங்கம் நிசாந்தன் 03.05.2021 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்ற இராஜசிங்கம், ரதி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், மகாலட்சுமியின் பெறாமகனும், சந்திரலேகாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராமச்சந்திரன், அன்னலட்சுமி (தோப்பு, அச்சுவேலி) அவர்களது அன்பு மருமகனும், சுசிதரன் (லண்டன்), நிரோஜி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.), நிரோஜன் (முகாமைத்துவ பணிப்பாளர், DMI Computer Education) ஆகியோரது அன்புச் சகோதரனும், சந்திரலீலா, சந்திரதாஸ் (கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், மன்னார்), சந்திரஶ்ரீ, சந்திரபாலா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மாநகரசபை, யாழ்ப்பாணம்.), ஆகியோரது அன்பு மைத்துனரும், அனுசா (லண்டன்), சிவானந்தன் (நிர்வாக உத்தியோகத்தர் பேரவைச் செயலகம், வடமாகாணசபை), சுகன்யா (மென் பொறியியலாளர்) ஆகியோரின் மைத்துனரும், அக்ஷன்யா, ஹரிணி ஆகியோரின் அன்பு மாமானாரும், சாருஹாக்ஷின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 09.05.2021 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கனடாவில் Chapel Ridge Funeral Home and Cremation Centre, 8911 Woodbine Avenue, Markham, Ontario L3R 5G1இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] தி, தோப்பு, அச்சுவேலி.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### போர்க்குற்ற ...

இது தொடர்பில் அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் திருமதி கிறிஸ்டி நிலானி ஊடகங்களுக்கு மேலும் தெரிவிக்கையில்;

சர்வதேச சட்ட நிபுணரான ஜஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கும் ஐ.ரி.ஜெ.பி. என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு சவேந்திர சில்வா தொடர்பில் 50 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகை ஒன்றை தயார் செய்து பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிடம் கையளித்திருந்தது. அதன் அடிப்படையில், சவேந்திர சில்வா உள்ளிட்ட இலங்கை போர்க் குற்றவாளிகளை கடந்த வருடம் ஜூலை மாதம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரிட்டனின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ், தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த முதலாம் திகதி இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் தண்டிப்பதற்கான சர்வதேச மையத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நடைபெற்ற போர்க் குற்றங்கள் சவேந்திர சில்வாவின் கட்டளையின் கீழ் இடம்பெற்றுள்ளதற்கான ஆதாரங்கள் வெளியாகியிருப்பது மட்டுமன்றி, அவரின் கட்டளையின் கீழ் தற்போது செயற்படும் பாதுகாப்புப் படையினரால் இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதற்கான நம்பகமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன - என்றார். (ம)

### இந்தியாவின்...

இந்தியாவில் பரவும் புதியவகை கொரோனா வைரஸ் இலங்கையில் அடையாளம் காணப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் அவர் கூறினார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து, தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஒருவரிடம் இந்தியாவில் பரவும் புதிய வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது. பி.1.617 என்ற வைரஸே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (மஓ,22)

### பிரிட்டன்...

நிலையில், வடக்கு மாகாணத்தின் மன்னார் நகரப் பகுதியிலும் அது அவதானிக்கப்பட்டுள்ளது என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்கள், ஹோமாகம மற்றும் பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளில் குறித்த வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் பொல்பிதிகம, குளியாப்பிட்டிய, நிகவெரடிய, கனெவத்த, அம்பன்பொல, கிரிஉல்ல, பன்னல மற்றும் வாரியபொல ஆகிய பகுதிகளிலும், களுத்துறை மாவட்டத்தில் அகலவத்த, பிம்புர, பாணந்துறை மற்றும் பண்டாரகம ஆகிய பகுதிகளிலும், கண்டி மாவட்டத்தில் படுவஸ்நுவர, கண்டி மற்றும் ஹிங்குரங்கொட ஆகிய பகுதிகளிலும், பொலநறுவை மாவட்டத்தில் மெதிரிகிரிய மற்றும் மன்னார் நகர எல்லைப் பகுதிகளிலும் இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (மஓ,22)

### உயர்தரப்...

புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2019ஆம் ஆண்டு 2ஆம் இடத்திலிருந்த வடக்கு மாகாணம், 2020ஆம் ஆண்டு 6ஆம் இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு பரீட்சைக்கு வடக்கிலிருந்து புதிய பாடத்திட்டத்துக்கு 14 ஆயிரத்து 630பேர் தோற்றியுள்ளனர். அவர்களில் 9 ஆயிரத்து 229பேர் அதாவது 63.08 சதவீதத்தினர் பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். 246 பேர் 3ஏ பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். மூன்று பாடங்களிலும் ஆயிரத்து 498 பேர் சித்தியடையவில்லை.

இதேவேளை 2020ஆம் ஆண்டு பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட ரீதியிலான தரப்படுத்தலில் யாழ்ப்பாண மாவட்டம் 9ஆம் இடத்தையும், மன்னார் மாவட்டம் 16ஆவது இடத்தையும், முல்லைத்தீவு மாவட்டம் 17ஆவது இடத்தையும், கிளிநொச்சி மாவட்டம் 19ஆவது இடத்தையும், வவுனியா மாவட்டம் 25ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

போரின் பின்னரான காலப் பகுதிகளில் 2012ஆம் ஆண்டு வடக்கு மாகாணம் 7ஆவது இடத்திலும், 2013ஆம் ஆண்டு முதலாவது இடத்திலும், 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் மூன்றாவது இடத்திலும், 2016ஆம் ஆண்டு 5ஆவது இடத்திலும், 2017ஆம் ஆண்டு மூன்றாவது இடத்திலும் 2018ஆம் ஆண்டு 6ஆவது இடத்திலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

### கல்வியங்காடு...

மருத்துவ அதிகாரியின் உத்தரவையடுத்து மூடப்பட்டுள்ளது.

பொதுச்சந்தையின் நடவடிக்கைகள் இன்று காலை இடம்பெற்றவேளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்காணிப்பதற்காகச் சென்றிருந்தனர். அதன்போது சந்தையில் வியாபாரிகள் உட்பட பலர் முகக்கவசம் அணியாமல் இருந்துள்ளனர். அத்துடன் சமூக இடைவெளியும் பேணப்படவில்லை. இதையடுத்தே கல்வியங்காடு பொதுச்சந்தைக்கு 'சீல்' வைக்கப்பட்டது. (ம-26)

### மே 18...

மே 18ஆம் திகதி 18.18க்கு (6.18 பி.ப.) ஈகைச்சுடரேற்றி அஞ்சலிக்குமாறு பிரிட்டன் தமிழர் பேரவை கோரியுள்ளது.

இது தொடர்பில் பேரவை அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது:

சர்வதேச சமூகத்தின் செயலறு நிலையால் அடக்குமுறைகள், மிரட்டல்கள், அதிகரிக்கப்பட்ட கண்காணிப்புக்கள், சமூக செயற்பாட்டாளர்களின் கைதுகள், கருத்துச் சுதந்திர உரிமை மறுப்பு மற்றும் ஒன்றுகூடல் உரிமை மறுப்பு ஆகியவை சிறிலங்கா அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. நினைவுச் சின்னங்களை அழித்து, போரில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரும் உரிமை மற்றும் அவர்களுக்கான அஞ்சலி செலுத்தும் உரிமை என்பவை தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. ஒரு பாதுகாப்பு பொறிமுறையை உருவாக்கி தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீட்டெடுத்து தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாஷைகளை பெற்றுக்கொடுத்து நீதியை நிலைநாட்ட வேண்டுமென சர்வதேச சமூகத்திடம் பிரிட்டன் தமிழர் பேரவை கோருகின்றது, என்றுள்ளது. (ஓ,இ)

### வடக்கில்...

என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் 460 பேரின் மாதிரிகள் இன்று (நேற்று) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 பேரும், வவுனியா மாவட்டத்தில் 7 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் மூவரும், மன்னாரில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற இருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 5 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தெல்லிப்பழை மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் தனிமைப்படுத்தில் இருந்த ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற இருவருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பளை மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்ற ஒருவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

வவுனியா குருக்கள்புதுக்குளம் பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்தக் கிராமத்தில் தொற்றாளர்களுடன் முதல் நிலை தொடர்புடைய ஐவருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், வவுனியா பொது மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட இருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்குச் சென்ற ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது' - என்றார். (ம-26)

### நயினாதீவில்...

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அரச வெசாக் நிகழ்வை வேறு இடத்தில் நடத்துவதற்கு எதிர்காலத்தில் திட்டமிட உள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஓ,இ)

### தவறான...

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைத் தொழிலகப் பட்டறையில் நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த பரமலிங்கம் பகீரதன் (வயது 34), அவரது துணைவி ரஜிதா (வயது 33) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

குடும்பத்தலைவர் நேற்று மாலை நகை வேலைக்கு பயன்படுத்தும் இரசாயனத்தை உட்கொண்டுள்ளார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

அதனை அறிந்த துணைவி அதே இரசாயனத்தை உட்கொண்டுள்ளார். அதனால் அவரது உயிரும் பிரிந்தது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் முன்னெடுத்தார்.

இவர்களுக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பிறந்த குழந்தையொன்று, பிறந்து சில நாள்களிலேயே உயிரிழந்தது என்றும் இதனால் அவர்கள் மன விரக்தியில் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-26)

### நேற்றும்...

அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 228ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனா நோயாளர்களில் ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 98 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 19 ஆயிரத்து 366 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

வாகனம் வாடகைக்கு விடப்படும்.
ISUZU 350 BODY Closed
தொடர்பு 077 522 8547

## வாடகைக்கு

கொழும்புத்துறை கிழக்கு பிரதான வீதியில் மூன்று படுக்கை அறை, சமையல் அறை, இரண்டு பெரிய HALL இரண்டு குளியல் அறையுடன் புதிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 076 042 4511

## திருமண சேவை

புதிய திருமண இணைய தளம் நோர்வே. இலவசம் 31.05.2021 வரை (இலங்கை வாழ் மக்களுக்கு)
www.fix2.no 076 555 6479

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் கிளை நிறுவனமொன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் உடனடியாக தேவைப்படுகின்றது.

1. கனரக வாகன சாரதிகள்
2. உதவியாளர்கள்

021 205 0998, 076 138 3497

## Job Vacancy!!

**Photo Retoucher**
A fantastic opportunity to join a leading and expanding online retailer. We are looking a skilled image retoucher to edit and manipulate product images.

- Proficiency in image editing & retouching
- Remove background, crop and sharpen each image
- Should possess a laptop or a desktop and access to uninter rupted internet as you will be working from a remote location.
- Salary: Rs. 2000 a day, negotiable.

**If interested, please forward to your CV to Email: jbrhanavan@gmail.com**

## காணி தேவை


அல்வாய் பகுதியில், சிறு குடும்பம் வசிப்பதற்கு உகந்த வெற்றுக் காணி தேவை. விற்பனைக்குள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்
071 899 4569

## பாதுகாப்பு கமரா

**CCTV கமரா பொருத்துதல்**
மற்றும் **பழுது பார்த்தல்** உங்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களிற்கு நியாயமான கட்டணத்தில் **CCTV கமராக்களைப்** பொருத்திக்கொள்ள எம்மைத் தொடர்புகொள்ளவும்

- இரண்டு வருடகால உத்தரவாதம் (Warranty)
- விற்பனைக்குப் பிந்திய சேவை

தொடர்பு: **Eagle Surveillance**
077 194 4201



## Experience Structural Engineer (Building)

**(Steel,Timber,Masonry & Concrete)**

**Job Responsibilities**

- The ideal candidate will be an enthusiastic Structural Engineer and passion for structural engineering
- Responsible for detailed design work
- Undertake detailed structural engineering calculations on a complex scope and size of projects
- Ability to lead smaller projects independently

**Qualifications and Skills**

- Must have degree in Structural or Civil engineering.
- Must have building design experience.
- Proficient in AutoCAD.
- Proficient in English.
- Masonry,Timber and Steel design experience added advantage

UK Based Company / Work from home, Salary to be negotiate (depend on experience). Full time minimum 2 plus year And 3 - 6 Month probation period. Those who have interest in this role please contact me by WhatsApp, text or email with your experience and CV . Interview will be conducted via Zoom. Contact: Mr Saba
E mail: design@shcuk.co.uk
Phone no: +447462184536




## Science graduates (Physics /Chemistry/Biology/Maths)

**with teaching or graphic design or IT or UX/UI experience to work on eLearning platform as educational content developer/writer.**

**Your Role:**

- Responsible for brainstorming and creating engaging high quality international educational content with copyright to our company.
- Spend valuable time for researching and writing content for the modules and structuring the courses.
- Writing self-test question.
- Create brainstorming challenging example , workouts and **illustrations**.

**Requirements:**

- Proficient in English.
- Be skilled in writing clear, concise, and grammatically correct copy.
- Be highly self-motivated and well organised with good IT skills.

**UK Based Company / Work from home, Salary to be negotiate (depend on experience). Full time minimum 1to 2 plus year contract. 3 - 6 Month probation period.**

**Contact: Mr Saba**
**E mail: design@shcuk.co.uk**
**Phone no: +447462184536**

**Those who have interest in this role please contact me by WhatsApp,text or email withyour experience and CV. Interview will be conducted via Zoom.**



# உதயா ஜுவல்லர்ஸ்

## அக்ஷய திருதியை மே 14.2021

பொன் சேரும் பொன்னான நன்நாளாம் அக்ஷய திருதியை உங்கள் எண்ணம் போல் தரம், நம்பிக்கை. நவநாகரிகத்திற்கு ஏற்ப என்றும் மாறாத உதயா ஜுவல்லர்ஸ் உடன் கொண்டாடி மகிழ்ந்திடுங்கள்.
**அக்ஷய திருதியை அன்று நகை கொள்வனவு செய்யும் 3 அதிஸ்டசாலிகளுக்கு குழுக்கல் முறையில் தங்க நாணயங்கள் வழங்கப்படும். அன்று நகைகள் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளருக்கும் பெறுமதி மிக்க பரிசில்களும் காத்திருக்கின்றன.**



- ✓ அதி நவீன டிசைனுக்கேற்ப நம்பமுடியாத விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
- ✓ குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.



**வாடிக்கையாளர் நன்மை கருதி ஏப்ரல் 14 தொடக்கம் மே 13 வரை உங்களின் மனதிற்கு ஏற்றவாறு நகைகளை ஓடர் செய்து அக்ஷய திருதியை தினத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

**சுகாதார நடைமுறை காரணமாக வாடிக்கையாளர்கள் சிரமத்தை தவிர்க்கும் முகமாக முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.**

Email-uthayaa Jewellerss@gmail.com / Facebook - uthayaa Jewellerss / No - 074 069 4449 / 021 222 4434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூ[illegible]தில் உள்ள அவர்களது பணிமனையில் 09. 05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 16

சிறிய துணி கொண்டு உனது முகத்தை
மூடாவிடின் பெரிய துணி கொண்டு
உன்னை மூட வேண்டி வரும்

*கருணையூர் சிவா, கரவெட்டி.*

சஞ்சீவி

மலை :33 | வள்ளுவர் ஆண்டு : 2052 | சித்திரை 26 | ஞாயிற்றுக்கிழமை (09.05.2021) | சிகரம் : 47

# சோதனைகளே சாதனைகளாக...!

வறுமை போர் இழப்பு எல்லாவற்றையும் நேருக்கு நேர் எதிர்கொண்டு சவாலே வாழ்க்கையாகிப்போன மாணவன் ஒருவன் கல்வியில் சாதித்துக்காட்டிய உண்மைக் கதை இது. திரைப்படங்களை விஞ்சும் நம்பமுடியாத அவன் வாழ்வின் ஒரு குறுக்குவெட்டு முகம் இங்கே உங்களுக்காக...!

தொகுப்பு : டிலீப்அமுதன், கதிர்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் சில தினங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றிய மாணவன் தேசிய நிலையில் முதலிடம் பெற்றதால் பலரின் கவனமும் அங்கு தான். அதேவேளை உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பழைய பாடத்திட்டத்தில் தோற்றி, மாவட்ட நிலையில் முதலிடமும் தேசிய ரீதியில் 34ஆவது இடமும் பெற்றவன் பாஸ்கரன் பார்த்தீபன். இந்தச் சாதனையாளன் பெரிதாக எவராலும் கண்டுகொள்ளப்படவில்லை.

பார்த்தீபன் 1999ஆம் ஆண்டு உரும்பிராயில் பிறந்தவன். குடும்பத்தில் இவன் மூன்றாவது பிள்ளை. அண்ணா, அக்கா, தம்பி உண்டு. தாயுடனேயே நால்வரும் வளர்ந்தார்கள்.

"எனக்குச் சின்ன வயசு விசயங்கள் பெரிசா தெரியாது. அப்பாவைக் கண்டதில்லை" என்று பிஞ்சு மனதில் பதிந்த சோகங்களை இப்போதும் வேதனையுடன் பகிர்கின்றார் பார்த்தீபன்.

"2005ஆம் ஆண்டு வன்னிக்குப் போனாங்கள். அங்க அக்கராயனில சுபாஸ் குடியிருப்பில இருந்தனாங்கள்" என்று இடப்பெயர்வு வாழ்வை சொல்லத் தொடங்கினார் பார்த்தீபன்.

தரம் 1 உரும்பிராயில் தொடங்கிய அவரது கல்வி, பின்னர் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தது.

2006ஆம் ஆண்டு ஏ -9 வீதி மூடப்பட்டு போர்ச் சூழல் உருவாகியது. கிளிநொச்சியில் வசிக்கும்போது அக்காவுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். அண்ணா, பார்த்தீபன், தம்பி இவர்கள் மூவரையும் பார்த்துக் கொண்டார் தாயார்.

"கஷ்டம் என்று அண்ணை படிப்பை இடையில விட்டுட்டு வேலைக்கு போனவன். அம்மா அக்கராயன் சந்தியில கச்சான் வித்தவா. நாங்களும் போய் நிக்கிறனாங்கள். அம்மா விறகும் வெட்டி கடைகளுக்குப் போட்டவா" என்று சிறு வயதில் வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு அதில் வாழ்ந்த அனுபவங்களை விளக்கு கிறான் பார்த்தீபன்.

வறுமை வதைத்தாலும் நேர்மையாக வாழ்ந்தார்கள். சிறு உழைப்பில் அந்த 4 உயிர்களும் கஞ்சியைக் குடித்தாவது உயிர் வாழ்ந்தன. பார்த்தீபன் தரம் 3 படிக்கும்போதே இறுதிப்போர் இவர்களையும் உலுப்பியது. வறுமையில் கச்சான் விற்றுப் பிழைப்பு நடத்திய இவர்களுக்கு இடப்பெயர்வு ஒரு பெரும் சுமையாக மாறியது. மாத்தளன் வரையில் அவர்கள் குடும்பமாக நகர்ந்தார்கள்.

"இடம்பெயர்ந்து போகேக்க அம்மா சூசியம் சுட்டு வித்தவ. அவ சுட்டுத் தருவா. நான் வீடுகளுக்கு கொண்டு போய் குடுப்பன். சில வேளையில களைப்பில ரோட்டில மரங்களுக்கு கீழ படுத்திடுவன்' என்று போரும் வறுமையும் ஒன்று சேரத் தாக்கியபோது 9 வயதுச் சிறுவனாக அனுபவித்த வேதனைகளைச் சொல்கிறான் பார்த்தீபன்.

முள்ளிவாய்க்கால் போர் எல்லாவற்றையும் பார்த்தீபன் வாழ்க்கையை இன்னும் சிதைத்தது. தந்தையை இழந்திருந்த அந்த 9 வயதுச் சிறுவனுக்கு தாய்தான் எல்லாமே என்றிருந்த நிலையில், போர் அவன் கண்முன்னால் தாயையும் பறித்துச் சென்றது. "மாத்தளனில இருந்தனாங்கள். ஏப்ரல் மாசம் 16 ஆம் திகதி. எங்கட தறப்பாளுக்கு இருந்து காலமை அம்மா வெளியில முகம் கழுவப் போனவா. எங்கையோ இருந்து ரவுண்ட்ஸ் (துப்பாக்கிச் சன்னம்) வந்து பட்டுது. அம்மா அந்த இடத்திலேயே செத்துப்போனா" என்று கண் முன் நடந்த துயரத்தை கண்ணீருடன் பகிர்கிறான் பார்த்தீபன்.

9 வயதுச் சிறுவன் பார்த்தீபனும் அவனது 14 வயதான அண்ணனும் தம்பியும் சிறு பராயத்திலேயே இந்தப் பேரிடரை எதிர்கொண்டனர். தாயார் இறந்து 4 நாள்களில் இராணுவம் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து இருந்தபோது இவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தனர். இதன்போது திருமணமான அக்கா அவரது கணவர், அண்ணா, தம்பி என்று சகோதரங்களுடன் பார்த்தீபன் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் நுழைந்தான். ஆனால் இன்னும் அவன் சோதனை தீரவில்லை. இராணுவச் சோதனை நடவடிக்கையின்போது குடும்பத்தினர் அனைவரையும் தவறவிட்டான். தன்னந்தனியாக வவுனியா அருணாச்சலம் முகாமில் வாழத் தொடங்கினான் 10 வயதுச் சிறுவன் பார்த்தீபன். நல்லவேளையாக அக்கராயனில் இவர்கள் வசித்த வீட்டுக்கு அருகிலிருந்த ஒருவர் இவனைக் கண்டு முகாமில் தங்களுடன் வைத்துக் கொண்டார். அந்த முகாம் நெருக்கடிக்குள்ளும் கிடைத்த கல்வியை இவன் பெற்றுக்கொள்ளத் தவறவில்லை. புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினான். போர் இழப்பு அதன் வலிகளுக்கு மத்தியிலும் தோற்றி 132 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தான். (வெட்டுப்புள்ளி 111)

முகாமிலிருந்தவர்கள் படிப்படியாக விடுவிக்கப்பட்டனர். இதன்போது, தான் தங்கியிருந்தவர்களுடன் பார்த்தீபன் யாழ்ப்பாணத்துக்கு வந்து. பண்டத்தரிப்பில் அவர்களுடன் வசிக்கத் தொடங்கினான். கலைமகள் பாடசாலையில் சிறிது காலம் கல்வி தொடர்ந்தது. குடும்பத்தினரைக் கண்டுபிடிக்க பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தார்கள். அதற்குப் பலனும் கிடைத்து, தன் குடும்பத்துடன் இணைந்துகொண்டான் பார்த்தீபன்.

"முள்ளிவாய்க்கால் போர் எல்லாவற்றை யும் பார்த்தீபன் வாழ்க்கையை இன்னும் சிதைத்தது. தந்தையை இழந்திருந்த அந்த 9 வயதுச் சிறுவனுக்கு தாய்தான் எல்லாமே என்றிருந்த நிலையில், போர் அவன் கண்முன்னால் தாயையும் பறித்துச் சென்றது."



பாஸ்கரன் பார்த்தீபன்

அக்காவின் கணவர் தடுப்பில். அக்கா அவரது கைக் குழந்தை, அண்ணா, தம்பி, பார்த்தீபன் ஆகியோர் இப்போது ஒரு குடும்பமாகினர். அக்காவின் கணவரின் ஊரான வேலணை புளியங்கூடலில் 2010ஆம் ஆண்டு முதல் வசிக்கத் தொடங்கினர். வேலணை விஷ்ணுராசா பாடசாலையில் தரம் 6 இலிருந்து க.பொ.த. சாதாரண தரம் வரையில் கல்வி கற்றான்.

'அக்காதான் எல்லாம் செய்து தாறவா. அண்ணா கூலி வேலைக்குப் போறவர். அத்தான் முகாமில செய்யிற வேலையில வாற காசு அனுப்புறவர். 2013 தடுப்பில இருந்து வந்தவர். அதுக்குப் பிறகு அவர் கொன்ராக்ட் (ஒப்பந்த வேலைகள்) செய்யிறவர். அதுக்கு துணையா நானும், அண்ணாவும் போறனாங்கள். எங்களுக்கு வேற ஆக்களும் இல்லை. அந்தக் காசிலதான் வாழ்ந்தனாங்கள்'. நெருக்கடிக்குள்ளும் கல்வி கற்று சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றி 6ஏ ,2பி, சி என்ற சிறந்த பெறுபேற்றை பெற்றான் பார்த்தீபன்.

உயர்தரத்துக்கு யாழ். நகரை நாடவேண்டிய நிலை. தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகள் என்ற இரண்டையும் பூர்த்தி செய்யவேண்டும் என்பதற்காக நகருக்கு வந்தான்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரத்துக்குச் சேர்ந்தான். காலையில் வீட்டிலிருந்து 5.30 மணிக்கு புறப்பட வேண்டும். இரவு 7.30 மணிக்குத்தான் வீடு செல்ல முடியும். இவ்வளவு நேரத்துக்கும் அவனது சாப்பாடு காலையில் புறப்படும்போது குடிக்கும் தேநீர்தான். கையில் போக்குவரத்துக்கு மட்டும் 60 ரூபா இருக்கும். 'காலமைச் சாப்பாடு தேத்தணியோட முடிஞ்சிடும். சில வேளையில ஸ்கூல்ல மதியம் சாப்பாடு

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்

# தமிழகத்தைக் கையாள்வது?



தமிழகத்தில் புதிய ஆட்சி வந்திருக்கிறது. அது தமிழக மக்களின் தீர்ப்பு. இதில் ஈழத்தமிழர்கள் என்ன செய்ய வேண்டும்? ஒரே வரியில் சொன்னால், யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை தமது நோக்கு நிலைகளில் இருந்து எப்படி வெற்றிகரமாக கையாளலாம் என்று சிந்திப்பதே பொருத்தமாயிருக்கும். தமிழகம் எனப்படுவது தட்டையான பரிமாணம் கொண்ட ஒரு மக்கள்தொகுதி அல்ல. அது பல பரிமாணங்களைக் கொண்ட பல அடுக்குகளைக் கொண்ட ஒரு கலவை. முதலாவது அடுக்கு தமிழக அரசு. அது ஒரு மாநில அரசு. இந்திய மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரும் அரைச் சமஷ்டி கட்டமைப்பு. கவனியுங்கள் அது ஒரு முழுச் சமஷ்டி கட்டமைப்பு அல்ல.

இரண்டாவது தமிழகத்தில் உள்ள கட்சிகள். மூன்றாவதாக தமிழகத்திலுள்ள ஈழ உணர்வாளர்கள் அல்லது செயற்பாட்டாளர்களர்கள்.நாலாவது அடுக்கு , தமிழகத்தில் உள்ள சாதாரண ஜனங்கள். ஐந்தாவதாக சிவில் சமூகங்களையும் ஊடகங்களையும் கூறலாம். இந்த ஐந்து அடுக்குகளையும் ஒரே விதமாக அணுக முடியாது. ஒரே விதமாக கையாளவும் முடியாது.

முதலாவதாக மாநில அரசுக் கட்டமைப்பு. தமிழக அரசை அதன் வரையறைகளுக்குள் வைத்து விளங்கிக் கொள்ள வேண்டும். அது எதைச் செய்ய முடியுமோ அதைத்தான் எதிர்பார்க்கலாம்.ஒரு மாநில அரசாக அதற்கு இருக்கக் கூடிய வரையறைகளின் அடிப்படையில்தான் அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு எதையும் செய்யமுடியும்.

இரண்டாவது, தமிழகத்தில் உள்ள கட்சிகள். தமிழகத்திலுள்ள கட்சிகளில் ஈழத்தமிழர்களுக்கு நெருக்கமான கட்சிகளும் உண்டு. நெருக்கம் குறைந்த கட்சிகளும் உண்டு. எப்படியானாலும் இந்தக்கட்சிகள் யாவும் அங்கேயுள்ள தேர்தல் அரசியலுக்கு உட்பட்டவை. எனவே ஈழத் தமிழர் விவகாரத்தையும் அவர்கள் தேர்தல் அரசியலுக்கூடாகவே கையாள முயல்வார்கள். அதில் தேர்தல் நோக்குநிலையிலான நலன்கள் இருக்கும். அந்த நலன்களின் அடிப்படையில்தான் ஈழத் தமிழர் விவகாரம் கையாளப்படும். இதில் ஈழத் தமிழர்களுக்கு நெருக்கமான சில அரசியல்வாதிகள் உண்டு. அவர்கள் ஈழத் தமிழர்களுக்காக ஆபத்துக்களை சந்தித்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக ஈழத்தமிழர்கள் குறித்து மாறாத நிலைப்பாட்டோடு காணப்படுகிறார்கள்.அவர்களோடு ஈழத்தமிழர்கள் மானசீகமான உறவுகளை வைத்துக் கொள்ளலாம். ஆனால் கட்சி நலன் என்று வரும்பொழுது குறிப்பாக தேர்தல் அரசியல் என்று வரும் பொழுது அவர்கள் தமிழகத்தின் களயதார்த்தத்துக்கு ஏற்பவே முடிவெடுப்பார்கள். அதில் ஈழத்தமிழர்கள் தலையிட வேண்டிய அவசியம் இல்லை.

மூன்றாவது, தமிழகத்தில் உள்ள செயற்பாட்டாளர்கள். இவர்கள் தேர்தல் நோக்குநிலை அற்றவர்கள். கொள்கை ரீதியாக ஈழத் தமிழர்களோடு நெருங்கி வருவார்கள். இவர்களோடு கொள்கை அடிப்படையில் கூட்டு வைத்துக் கொள்ளலாம். அது ஒருவிதத்தில் மாறாத உறவாகவும் இருக்கும்.

நாலாவது, சாதாரண தமிழக மக்கள். இதுதான் பெரிய தொகை. எல்லா கட்சிகளிலும் இவர்கள் உண்டு. ஈழத் தமிழர்கள் என்றால் அவர்கள் இன ரீதியாக கொதித்து எழுவார்கள். மொழிரீதியாக கொதித்து எழுவார்கள். அவர்களுடைய கட்சித் தலைவர்கள் அவர்களை தேர்தல் நோக்கு நிலைகளில் இருந்து வழிநடத்தக் கூடும். ஆனால் ஈழத்தமிழர்களுக்கும் சாதாரண தமிழக மக்களுக்கும் இடையிலான உறவு என்பது தூய்மையானது. அரசியல் நலன்கள் அற்றது.சுயநலம் அற்றது.அதிலுள்ள உண்மை மற்றும் உணர்வு ஒருமைப்பாடு காரணமாகத்தான் தமிழகத்தில் இதுவரையிலும் 19 பேர் ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்திருக்கிறார்கள்.

எனவே தமிழகத்தின் சாதாரண ஜனங்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் ஒப்பீட்டளவில் புனிதமானவை. அந்த உறவை ஈழத்தமிழர்கள் மதிக்க வேண்டும். ஆனால் இந்த சாதாரண தமிழக மக்கள்தான் ஈழத் தமிழர்களால் விரும்பப்படுகின்ற அல்லது வெறுக்கப்படுகின்ற தலைவர்களைத் தெரிந்தெடுக்கிறார்கள். எனவே தமிழகத்தின் தலைவர்களை குறித்து கருத்துகூறும் பொழுதும் தமிழகத் தலைவர்களை அணுகும்போதும் சாதாரண தமிழக மக்களின் உணர்வுகளை மதித்தே எதையும் செய்ய வேண்டும். இதுவிடயத்தில் சாதாரண தமிழக மக்களை பகைநிலைக்கு தள்ளாத ஒரு நிதானப்போக்கை ஈழத்தமிழர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

ஐந்தாவது, ஊடகங்களும் சிவில் அமைப்புக்களும். கருத்துருவாக்கிகளும். இங்கேயும் ஈழத்தமிழர்களுக்காக நலன்சாராது விசுவாசமாக உழைப்பவர்கள் உண்டு.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் தொகுத்துச் சிந்தித்தால் ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இருந்து தமிழகத்தை எப்படிக் கையாள வேண்டும் என்ற ஒரு தெளிவான வழி வரைபடம் கிடைக்கும். துரதிர்ஷ்டவசமாக ஈழத்தமிழர்களிடம் அவ்வாறான வழிவரைபடம் எதுவும் கிடையாது. ஆயுதப் போராட்ட காலத்தில் இருந்து இன்றுவரையிலும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் தொடர்பாடல் மையங்கள் என்று கருதத்தக்க அலுவலகங்கள் அல்லது தகவல் வழங்கும் நிலையங்கள் தமிழகத்தில் இல்லை. குறைந்தபட்சம் ஈழத்தமிழ் அகதிகளின் நலன்களைக் கவனிப்பதற்குக்கூட கட்சிகளிடம் பொருத்தமான கட்டமைப்புக்கள் இல்லை.தமிழக ஊடகங்களுக்கும் ஈழத்தமிழ் ஊடகங்களுக்கும் இடையில் ஒரு பொதுவான தொழில்சார் இடையூடாட்டக் கட்டமைப்பும் இல்லை.தமிழகத்திலுள்ள கருத்துருவாக்கிகளுக்கும் ஈழத்தமிழ் கருத்துருவாக்கிகளுக்கும் இடையிலும் ஒரு இடையூடாட்டப் பரப்பு இல்லை.தமிழகத்து சிவில் அமைப்புகளுக்கும் ஈழுத்து சிவில்அமைப்புகளுக்கும் இடையிலும் பொதுவான ஒரு இடையூடாட்டத் தளம் கிடையாது.

எனவே கடந்த பல தசாப்தங்களாக ஈழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் இடையூடாடக்கூடிய பொதுப்பரப்புகளை கட்டமைப்புகளை ஈழத்தமிழர்கள் உருவாகியிருக்கவில்லை. தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் ஆதரவு செயற்பாட்டாளர்களும் கட்சிகளும் கூட அதைச் செய்திருக்கவில்லை. குறிப்பாக ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னர் மோசமாகச் சேதமடைந்த நிலைமைகளை சீர்செய்யும் விதத்தில் தீர்க்க தரிசனம் மிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. உதாரணமாக,ராஜீவ் காந்தி கொல்லப்பட முன்பு ஈழத் தமிழர்களுக்கு மிக ஆதரவாக காணப்பட்ட தமிழகத்தின் இடதுசாரிச் சிந்தனையாளர்களில் ஒருவரான எஸ்.வி. ராஜதுரை போன்றவர்கள் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபின் ஈழத்தமிழர்களை நோக்கி இன்றுவரையிலும் முன்னரளவுக்கு நெருங்கிவரவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டவேண்டும்.

இவ்வாறான பாரதூரமான ஒரு வெற்றிடத்தில் தமிழகத் தலைவர்கள் ஈழத் தமிழர்களுக்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்று ஒரு பகுதி ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.தமிழகத் தலைவர்கள் மட்டுமல்ல தென்னிலங்கையில் இருக்கும் கட்சித் தலைவர்கள், செயற்பாட்டாளர்கள் பொறுத்தும் ஒருபகுதி ஈழத் தமிழர்களின் நோக்குநிலை அணுகுமுறை அவ்வாறுதான் இருக்கிறது.உலகிலுள்ள எல்லோருமே எங்களை நேசிக்க வேண்டும் எங்களுக்காகத் தியாகம் செய்யவேண்டும் என்று ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினர் விரும்புகிறார்கள். ஆனால் அது ஒரு அப்பாவித்தனமான விருப்பம். ஏனெனில் தாயகத்துக்கு வெளியே இருப்பவர்களும் ஈழத்தமிழர்கள் அல்லாத வெளி இனத்தவர்களும் அவரவருக்கேயான அரசியல் சூழ்நிலைகளின் கைதிகளே.அவரவர் தங்களுடைய நிலைமைகளுக்குள்ளிருந்துதான் ஈழத்தமிழர்களுக்காக எதையும் செய்யமுடியும்.

உதாரணமாக மனோ கணேசன். அவர் ஒரு தென்னிலங்கை மைய அரசியல்வாதி.அவர் ஒரு தமிழ்த் தேசியவாதியாக இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை. அவர் இனவாதத்துக்கு எதிரான ஒரு தமிழ் அரசியல்வாதியாக இருந்தாலே போதும்.அதுவே ஈழத்தமிழர்களுக்கு ஒரு பலம். அடுத்த உதாரணம் சிங்கள திரைக்கலைஞர்கள் மற்றும் மனித உரிமைவாதிகள். இவர்கள் இனவாதத்துக்கு எதிராக நிலைப்பாடு எடுத்தாலே போதும். அவர்கள் தமிழ்த்தேசியவாதிகளாக இருக்கவேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

இது தமிழகத்துக்கும் பொருந்தும். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழகம் ஈழத் தமிழர்களுக்கு ஒரு பின்தளமாக இருந்தது.இது வரையிலும் 19 பேர் தமிழகத்தில் தீக்குளித்திருக்கிறார்கள்.இவைகாரணமாக ஈழத்தமிழர்கள் இந்தியாவை தாயகம் என்று அழைத்துக்கொண்டு அளவுக்குமிஞ்சி நம்பிக்கைகளை முதலீடு செய்கிறார்கள். அளவுக்கு மிஞ்சி தமிழகத் தலைவர்களிடம் எதிர்பார்க்கிறார்கள். இது ஒருவகையில் வெளியாருக்காக காத்திருக்கும் அரசியலில் ஒரு கிளைதான். வெளியாருக்காகக் காத்திருப்பது என்பதே தன் பலமிழந்து வெளிநோக்கி காத்திருப்பதுதான். அது அடிப்படையிலேயே பலவீனமான அரசியல். அந்த பலவீனம்தான் மற்றவர்கள் எல்லாரும் தங்களுக்காக தியாகம் செய்ய வேண்டும் என்று அளவுக்கு மிஞ்சி எதிர்பார்ப்பதும் ஆகும்.

ஆனால் அரசியல் உறவுகள் அவ்வாறு உண்மையானவை அல்ல. நலன்சாரா உறவுகளும் அல்ல. அவை முழுக்க முழுக்க நலன்சார் உறவுகளே. இதைப் புத்திபூர்வமாக விளங்கிக்கொண்டால் ஈழத்தமிழர்கள் தமிழகத் தலைவர்களிடம் அளவுக்குமிஞ்சி எதிர்பார்க்க மாட்டார்கள். அவ்வாறு எதிர்பார்த்து அதில் ஏமாற்றம் அடையும்போது அளவுக்குமிஞ்சி வெறுக்கவும் மாட்டார்கள். கடந்த 12 ஆண்டுகளாக சமூக வலைத்தளங்களில் நிகழும் உரையாடல்களை தொகுத்துப் பார்க்கும் எவருக்கும் இது தெளிவாகத் தெரியும்.சமூகவலைத்தளங்கள் இது விடயத்தில் முழுத் தமிழர்களையும் பிரதிபலிக்கவில்லை என்பதை இக்கட்டுரை ஏற்றுக் கொள்கிறது. எனினும் ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினரின் எதிர்பார்ப்பு அது என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

இவ்வாறான ஒரு பின்னணியில் இப்போது தமிழகத்தில் ஒரு புதிய அரசாங்கம் வந்திருக்கிறது.அந்த அரசாங்கத்தை எப்படி நெருங்க வேண்டும்? எந்த அடிப்படையில் நெருங்க வேண்டும்? யாருக்கூடாக நெருங்க வேண்டும்?யாரை வைத்து யாரைக் கையாளவேண்டும்? போன்ற எல்லா உபாயங்களையும் முதலில் ஈழத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் முதலில் ஈழத்தமிழர்கள் இதுதொடர்பில் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் தங்களுக்கிடையே ஐக்கியப்பட்டு ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அது ஒரு விதத்தில் எனது கட்டுரைகளில் நான் திரும்பத் திரும்பக் கூறுவது போல ஈழத்தமிழர்களுக்கான வெளியுறவு கட்டமைப்புத்தான். அந்த வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாக தமிழகத்தை எவ்வாறு கையாள்வது என்பதற்கும் ஒரு வழி வரைபடம் தெளிவாக உருவாக்கப்பட வேண்டும்.


தமிழகத்தின் புதிய அரசாங்கத்தில் ஈழத் தமிழர்களோடு தொடர்ச்சியாக நெருக்கமாக நிற்கும் வைகோவுக்கு நான்கு ஆசனங்கள் உண்டு. மற்றொருவர் திருமாவளவன். அவருடைய கட்சிக்கும் 4 ஆசனங்கள் உண்டு. இது தவிர தி.மு.க. வுக்குள்ளும் மருத்துவர் எழிலனைப் போல பலர் ஈழத்தமிழர்களோடு நெருக்கமான மானசீகமான உறவை கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்போல மேலும் புதிய ஆளுமைகளை எப்படி சம்பாதிக்கலாம் என்று ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

இடதுசாரி மரபில் வந்த ஒரு தமிழக நண்பர் அடிக்கடி கூறுவார் , "தமிழகத்தில் ஈழத்தமிழ் ஆதரவு என்பது ஒரு உள்ளுறையும் சக்தி. அதை ஒரு தூலமான சக்தியாக (மாஸ் போர்ஸ் ஆக ) மாற்ற வேண்டும்" என்று. ஆம்.அதை ஈழத் தமிழர்களின் ஒத்துழைப்போடு தமிழக தலைவர்களும் செயற்பாட்டாளர்களும்தான் செய்ய முடியும்.அதை ஈழத்தமிழர்கள் நேரடியாக செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6000 கிளிகளின் தந்தை





O மயூ

வீடுகளில் பறவைகளை வளர்ப்பவர்கள் இருக்கிறார்கள். செல்லப் பிராணிகள் வளர்ப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் 6 ஆயிரம் கிளிகளின் தந்தையாக ஒருவர் இருக்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா?.

சென்னை, சிந்தாரப்பேட்டையில் வசிப்பவர் சுந்தர்சன். 10 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் சிறு பிராணிகள் உண்பதற்காக சிறிதளவு சோறு, தானியங்களைத் தனது மொட்டை மாடியில் போடும் பழக்கத்தை ஆரம்பித்தார். அணில்கள் மற்றும் பறவைகள் என்பவை அவற்றை உண்பதற்காக அங்கு வரத் தொடங்கின. அது அவருக்குப் பிடித்துப்போக தினமும் அவ்வாறு செய்ய ஆரம்பித்திருக்கின்றார் சுந்தர்சன்.

"எனது கணவர் முதலில் இவ்வாறு செய்ய ஆரம்பித்தபோது நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் சில நாள்களிலேயே அணில்களும், சிறு பறவைகளும் அங்கு வரத் தொடங்கின. அது எனக்குப் புது அனுபவமாக இருந்தது. மன அமைதியைத் தந்தது. நானும் எனது கணவருக்கு உதவி செய்யத் தொடங்கினேன்" என்கிறார் சுந்தர்சனின் மனைவி வித்யா. சுந்தர்சன் உணவு போட ஆரம்பித்ததும், முதலில் அணில்கள், காகங்கள், புறாக்கள், சிறு பறவைகள் என தேடி வர ஆரம்பித்திருக்கின்றன. அதன் பின்னர் மெல்ல மெல்லக் கிளிகளும் வரத்தொடங்கின. இப்போது கிளிகள்தான் அங்கு தனி ராஜ்ஜியம். சுந்தர்சனின் உணவில் மயங்கிய கிளிகளின் வருகை படிப்படியாக அதிகரித்து ஒருகட்டத்தில் ஆயிரமாகி, பின்னர் இரண்டாயிரமாகி, இப்போது சுமார் ஆறாயிரம் கிளிகள் சுந்தர்சன் வீட்டை வட்டமிடுகின்றன. தினமும் உங்கள் வீட்டில் ஆயிரக்கணக்கான கிளிகள் வந்து சென்றால் எப்படி இருக்கும் கற்பனை செய்து பாருங்கள்.

"அதிகாலை 4 மணிக்கு எழுந்து அரிசியை ஊற வைப்பேன். அரிசி ஊறி ஒரு பதத்துக்கு வந்ததும் அவற்றை அவர்களுக்குப் பரிமாற ஆரம்பிப்பேன். அரிசியுடன் பச்சை கச்சானும் கொடுப்பேன். கச்சான் என்றால் கிளிகளுக்கு மிகப் பிடிக்கும். இப்போது காலையும், மாலையும் அவர்களுக்கு உணவு கொடுக்கின்றேன். எனது மனைவியும் இதற்கு உதவி செய்வார். வருடாவருடம் கிளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது"" என்கிறார் சுந்தர்சன்.

"அக்கம்பக்கம் இருப்பவர்கள் ஆரம்பத்தில் எங்கள் வீட்டுக்கு வரும் கிளிகளால் அழுக்கு ஏற்படுகின்றது என்று முறைப்பாடுகள் செய்தார்கள்தான். ஆனால் இப்போது ஆயிரக்கணக்கான கிளிகள் வரும்போது அவர்களும் சந்தோசமாகத்தான் உணருகின்றனர். அவர்களும் தங்கள் வீடுகளில் கிளிகளுக்கு தண்ணீர், உணவு போன்றவற்றை வைக்கின்றனர். எமக்கு அது மகிழ்ச்சியாக இருக்கின்றது. இப்போது அக்கம்பக்கத்தினரும் எமக்கு துணையாக இருக்கின்றனர்"" என்று கூறுகிறார் வித்யா.

"இப்போது நாங்கள் வெளியூர்களுக்குச் செல்வதில்லை. நாங்கள் இல்லாவிட்டால் அவர்கள்(கிளிகள்) உணவுக்கு கஷ்டப்படுவார்கள். ஒருமுறை வெளியூர் சென்றபோது உணவு வைக்கவில்லை. அவர்கள் வீட்டைச் சுற்றி ஒரே அட்டகாசம். அதன்பின்னர் நாங்கள் எங்கும் செல்வதில்லை. எனது அனைத்து அலுவல்களையும் ஒதுக்கிவிட்டு அவர்களுக்கு சரியான நேரத்தில் உணவு வழங்குவதை எனது முதலாவது கடமையாகச் செய்கின்றேன். நான் எனது உறவினர்களிடம் சொல்லுவேன், எனக்கு ஒரு மகள் இருக்கிறார், 6 ஆயிரம் மகன்கள் இருக்கின்றனர் என்று. எல்லாக்கிளிகளும் என் பிள்ளைகளே" " எனக் கூறிச் சிரிக்கின்றார் சுந்தர்சன்.

"எமக்கு நோய்கள் ஏற்படுவதற்கு முதல் காரணம் மனம்தான். ஆயிரக்கணக்கான கிளிகள் வந்து செல்வதைப் பார்க்கும் போதே மன அழுத்தம் குறைகின்றது. அதனால் நான் ஆரோக்கியமாக இருப்பதை உணர்கின்றேன். அவர்கள் வந்து சாப்பிடுவதைப் பார்க்கும்போது எந்தக் கவலை இருந்தாலும் மறந்து போகின்றது"" என்கின்றனர் அந்தத் தம்பதி.

"இதை நீங்கள் உங்கள் வீடுகளிலும் செய்து பாருங்கள். கட்டாயம் செய்யுங்கள். அதனால் உங்களில் ஏற்படும் மாற்றத்தை உணர்வீர்கள். வெயில் காலங்களில் நீர், மீதம் இருக்கும் உணவை பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் கொடுங்கள். மரங்கள் நடுங்கள். பறவைகள் வாழ்வதற்கு அவை பெரிதும் உதவும். செய்து பாருங்கள், அப்போது கிடைக்கும் மன நிறைவு எதற்கும் ஈடாகாது" என்று கூறியபடி, கிளிகளுக்கு மாலை நேர உணவைத் தயார் செய்ய புறப்படுகிறார் சுந்தர்சன். தூரத்தே அவரின் ஆறாயிரம் பிள்ளைகளின் கீச்சொலி வானமெங்கும் பரவுகின்றது. ■

# இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ நாச்சியாருக்கு....



## அவசரமா ஒரு கடுதாசி

வணக்கம்.

நீங்கள் போனகிழமை சொன்னதைப் பாக்க எனக்கு நெஞ்சுக்கை நொந்து போச்சுது. "இரண்டாம் கட்டமாக வழங்கத் தேவையான ஆறு லட்சம் தடுப்பூசிகளுக்குத் தட்டுப்பாடு. அதை ஒழுங்குபடுத்தாதது அரசாங்கத்தின்ரை பிழை இல்லை. பொது சனங்களாகிய உங்கடை பிழை . அதனாலை அரசாங்கத்தைத் தவறா நினைக்க வேண்டாம் " எண்ட மாதிரிச் சொல்லி இருக்கிறியள்.

ஒரு ஏழை வீட்டிலை உள்ள குழந்தை பாலுக்கு அழுததாம். அதைப் பார்த்த தாய் சொன்னாவாம் "பால் மாவை வேண்டி வைக்காதது எங்கடை பிழை இல்லை. அது உன்ரை பிழை.நீ உனக்குப் பசி வரும் எண்டு தெரிஞ்சு அதை வேண்டி வைச்சிருக்க வேணும்" எண்ட மாதிரிக் கிடக்கு உங்கட கதை.ஒரு பொறுப்புள்ள தாய் அப்பிடிச் சொல்லமாட்டாள். போக்கி ரிக் குணமுள்ளவளுக்குத்தான் உப்பிடிச் சொல்ல மனம் வரும் எண்டு அப்பு அடிக்கடி சொல்லுறவர்.

இந்தியாவிட்டை முதல் தரம் ஆறு லட்சம் ஊசியளை வேண்டேக்கை இரண்டாவது ஊசியையும் வேண்டி வைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தின்ரை இல்லை எண்டு சொல்லுவியளோ? சரி, இந்தியாவிலை தொற்றுக் கூடி அவையளே திண்டாடினமாம். எங்களுக்குத் தருவினமோ? எண்டு கேட்கலாம். நியாயந்தான். ஆனால் அதுக்கு வேறை வழியைப் பாக்க வேணும்.இதை எல்லாம் பொறுப்பெடுப்பம் எண்டு சொல்லித்தான் ஆட்சிக்கு வந்தனியள்.அதை மறந்திட்டியளோ?

முதலாந்தரம் இந்தியாவிட்டை ஊசி வேண்டேக்கையே உங்களுக்குச் சீனாக்காரன் கல்லுக் குத்திப் போட்டான். அதாலைதான் இரண்டாவது ஊசியை வேண்டப் பின்னடிச்சனியளே ஒழிய வேறை ஒண்டும் இல்லை. அதுக்காக இந்தியாவிலை தொற்றுக் கூடிப்போச்சுது. அதாலை கேக்க ஒரு மாதிரி இருக்கெண்டு சொல்லாதையுங்கோ.

மேற்குப் பக்கமுள்ள அரசாங்கங்கள் தங்கடை நாட்டிலை தொற்று இருந்தும் ஏலக்கூடிய மாதிரி மற்றவைக்கும் அள்ளிக் குடுக்கிறாங்கள். எங்கடை நாடு சின்ன நாடு. அவைக்கு எங்கடை நாட்டிலை உள்ளவைக்கு மருந்து தாறதில்லை எந்தவிதத் தடங்கலும் இருக்காது. ஆனால் அவைக்குத் தர விருப்பமில்லை. ஏன்? அது உங்கடை மூன்றாந்தர அரசியல் போக்காலை தான். தாறவனும் தரப் பஞ்சிப்படுகிறான் எண்டதை வடிவா விளங்கிக் கொள்ளுங்கோ. என்ரை அப்பு சொல்லுறவர் சம்பந்தம் செய்யேக்கை சண்டை சச்சரவில்லாத இடமாப் பாத்துச் சம்பந்தம் செய்ய வேணும் எண்டு. அப்பதான் நாலுபேர் மதிப்பாங்கள். அது மட்டுமில்லை போறவளும் சந்தோஷமாச் சீவிக்கலாம். அவையும் மனமா உதவியும் செய்வினம்.மொத்தத்திலை குடும்பத்துக்கே நல்லது எண்டு.

இது நீங்கள் சம்பந்தமில்லாத ஆக்களோடை அதுவும் உலக வளத்தை எல்லாம் 'ஸ்ரோ' குழாய் வைச்சு உறிஞ்சுறவன் எண்டு சொல்லுற சீனாக்காரனோடை சம்பந்தம் வைச்சதாலை தான் எல்லாச் சீத்துவக்கேடும் வந்திருக்கு. நீங்கள் அவனோடை சம்பந்தம் வைச்சியள். கனபேற்றை எதிர்ப்பைச் சம்பாதிச்சுக் கொண்டியள். அதை விளங்காமல் "தடுப்பூசி வேண்டி வைக்காதது அரசாங்கத்தின்ரை பிழை இல்லை. அது பொதுமக்களின்ரை பிழை" எண்ட மாதிரிச்சொல்லப்பிடாது. அப்பிடிச் சொல்லுற உங்களுக்கு மனச்சாட்சி இருக்கோ? அதை ஒருக்கா ஒப்பிரேசன் செய்துதான் பாக்க வேணும்போலை கிடக்கு. ஏதோ கவனமா இருங்கோ. கொரோனா ஏழை, பணக்காரன் எண்டு பாக்கிறதில்லையாம். அரசன் மந்திரி எண்டும் பாராதாம். மூக்குக்கை போனால் போனதுதான். ஆனபடியால் எல்லாத்திலையும் கவனமா இருங்கோ.

அன்புடன்,
அப்பாவி அன்னமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி 46 இற்கான கவிதைகள்



சுற்றிவரும் பூமி எங்கும்
பற்றில் வந்து பாசம் பொங்கும்
நன்றி என்ற பண்பு காத்து
வாலை ஆட்டும் வார்த்தை தாங்கும்
காயம் ஒரு கடுகு அளவு
காலம், கருணை கடல் அளவு
வாடும் இரு மலர் உருகி
வாழ்த்தி நிற்கும் மன உறுதி

**வி.சாத்வீகன்**
முல்லைத்தீவு

**பரிசு பெறும் கவிதை**

பிறர் துன்பம் பலித்திருக்கும்
சுயநலம் மிக்க வையத்திலே ஓர்
நாயின் துன்பம் தீர வேண்டி
புண்பார்த்து மருந்துமிக்கும்
அவ்விரண்டு பொக்கிஷங்கள்
சொன்னதொரு செய்தி ஒன்று
தாதி அன்னை திரேசா அவள்
உறங்கவில்லை என்றுமே தான்....

**சதாசிவம் கபிஷன்**
மானிப்பாய் இந்துக் கல்லூரி

பாதையில் விரையும் ஊர்திகள் வேகம்
பாடையில் அனுப்பும் நாளும் அவலம்
விதிகளை மீறும் பயணங்கள் துயரம்
விலங்குகள் கூட வீதியில் மரணம்
காயம் அடைந்து வலியில் துடிக்கும்
நாயின் உயிரை காக்கும் தோழர்
கருணை நெஞ்சம் காக்கும் கரங்கள்
இருளை விரட்டும் ஒளிரும் தீபங்கள்

**சரண்குமார்**, வற்றாப்பளை

**பஞ்சு மெத்தையில் படுத்துறங்கும்**
**பணக்கார செல்லப் பிராணிகளின் மத்தியில்**
**தெருவினில் தேடுவோர்**
**யாருமின்றி தவிக்கையில்**
**தன் நிலை மறந்து தரையிலே அமர்ந்து**
**மடியிலே அணைத்து**
**அன்பினை கலந்து**
**வைத்தியம் பார்க்கும் இவர்களுக்கு**
**ஈடாய் மருத்துவர் உண்டோ?**

**ர.லக்சனா**, நெல்லியடி

47




காரின் சில்லின் முன்னால்
கவலையுடன் உட்கார்ந்து
சிறிய நாயின் காயத்துக்கு மருந்திடும்
சின்னஞ்சிறிய மழலைகளே
தாயையே பேணாத இவ் வுலகில்
நாயைப் பேணிக் காத்து
இலகுவாய் மருந்திட்டு
ஓர் ஜீவனின் வலி போக்கிடும்
சிறந்த உள்ளம் கொண்டவர்களே
நீங்கள் நலமெல்லாம் பெற்று வாழ்க

**பி.ஆதிரை**
யா/மகாஜனாக் கல்லூரி

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**

**14.05.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *sanjeevi@uthayan.com*
0773165555

நேயமான சிறுவரின் ஆழமான காருண்யம்
வாய்பேசாத ஜீவனை மடிமேல் இருத்தி
மருந்தளிக்கும் மகத்துவம் மனிதம் சாகவில்லை
புனிதம் கெடாமல்தான் இன்னமும் இருக்கிறது

**அம்பனூர் ஜங்கரன்**

பிற உயிர்களையும் மதிப்போம் என்று
சொல்லிக் கொடுத்த பெரியோர்கள்....
நாய்தானே என்று சிலவேளை
நடுத்தெருவில் விட்டுப் போய்விடலாம்
ஆனால் சிறுவர்கள் பிற உயிர்களின் துன்பம்
கண்டு துடிக்கின்றனர்....

**த.சிவா**
அல்வாய்



# இளவழகன் எனும் அப்பாவு

## தமிழின விடுதலைக்கும் இலக்கிய மகிமைக்கும் அரும்பெரும் பணிகள் புரிந்த மாமனிதன்

○ அ.நிக்ஸன்

வல்லாதிக்க நாடுகளின் முழுமையான ஒத்துழைப்போடு இலங்கை அரசு ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தைச் சிதைத்தது. இந்த நாடுகள் தலையிடாமல் இருந்திருந்தால், இன்று சர்வதேச அரங்கில் தமிழ் இனத்துக்கு என்றொரு இடம் பொறிக்கப்பட்டிருக்கும் என்பதைத் தமிழ் நாட்டில் துணிவோடு வெளிப்படுத்தியவர்தான் தமிழ் மண் பதிப்பகத்தின் நிறுவுநர் கோவிந்தசாமி இளவழகன்.

"தமிழகத்தைச் சேர்ந்த உணர்வு மிக்க தலைவர்கள் என்று கூறப்படுவோர் தம் அரசியல் இலாபத்துக்காக வட வேரோடு இணங்கியும், பதுங்கியும், தன்னல உணர்வு மேலோங்கி இருந்தமையும் ஈழப்போர் 2009ஆம் ஆண்டு மே மாதம் இல்லாதொழிக்கப்பட்டமைக்கான காரணங்களில் ஒன்றாக இருந்தது" என்று பகிரங்கமாகவே கூறியவர் இளவழகன். அன்று கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி மீதே இவர் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருந்தார். அ.தி.மு.க.வும் ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் வடவேரோடு ஒட்டி அந்த வடவேரின் ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொள்கைக்கு ஏற்பவே செயற்பட்டிருந்தது என்பதையும் இளவழகன் வெளிப்படையாகச் சொல்லியிருந்தார்.

தமிழர் மருத்துவக் களஞ்சியம் வெளியிடுதல், தமிழ்க் குழந்தைகளின் அறிவை வளர்த்தெடுக்கப் பன்முகச் செய்திகளை உள்ளடக்கிய குழந்தைகள் கலைக் களஞ்சியம் என்பவற்றை தமிழ்மண் பதிவாகவும், சுவடாகவும் கொண்டு வந்தார். அத்தோடு தமிழ்- தமிழ் அகராதி ஆங்கிலம் தமிழ் அகராதி பிறமொழிச் சொல் கலவாத தனித்தமிழ் நடையில் உருவாக்கும் திட்டங்களையும் வகுத்துச் செயற்பட்டு வந்த இளவழகன் கடந்த செவ்வாய்க்கிழமை மே மாதம் நான்காம் திகதி கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இயற்கை எய்தினார். இளவழகனின் சொந்தப் பெயர் அப்பாவு. தமிழ்ப் புலவர்கள் சிலர் அவர் மீது செலுத்திய ஆதிக்கத்தால் அவர் தனது பெயரை இளவழகன் என்று மாற்றினார். இளவழகன் இலக்கியப் படைப்பாளியோ, எழுத்தாளனோ அல்லர். அரசியல் விமர்சகரும் அல்லர். மாறாகப் பழந்தமிழ் நூல்களையும், உலக மொழிகளில் தமிழ் மொழி மேன்மை பெற்றது என்பதையும் வெளிப்படுத்தும் நோக்கில் தமிழியல் ஆய்வு நூல்களை அடுக்கடுக்காக வெளியிட்டு உறுதிப்படுத்தியவர். உலக அளவில் தமிழர்களுக்கென்றொரு தனி அரசு இருக்க வேண்டுமென்ற பேரவா இவரிடம் இருந்தது. இதனாலேயே தமிழ் மொழிக்கான சர்வதேச அந்தஸ்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கில், தமிழ் இதழியல் ஆய்வு நூல்களை வெளியிடுவதில் இவர் அக்கறை செலுத்தியிருந்தார்.

### இளவழகனின் தலைமையில் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம்

1965இல் மத்திய அரசு இந்தி மொழியைக் கட்டாய பாடமாகப் புகுத்தியது. இதனை எதிர்த்துத் தமிழகம் தழுவிய அளவில் மாணவர் போராட்டம் நடந்தபோது, ஒரு பகுதியில் இவர் தலைமை ஏற்று ஹிந்தி மொழியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்.

அப்போது இளவழகனார் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தார். போராட்டத்தில் ஈடுபட்டதால், இவர் கைது செய்யப்பட்டு 48 நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டார். இவருடைய இந்தத் தியாகத்துக்காக தமிழ்நாடு அரசு இவருக்கு தமிழ்மொழிக் காவலர் என்ற விருது வழங்கிக் கௌரவித்தது. பாவாணர் உள்ளிட்ட தமிழ்ப் புலவர்களால் நிறுவப்பட்ட உலகத்தமிழ்க் கழகத்தில் இணைந்து மாவட்டப் பொருளாளராகப் பதவி வகித்தபோது, தமிழ் நாட்டில் இலக்கியத்துறை சார்ந்த அனைவரினதும் தொடர்புகள் இவருக்குக் கிடைத்தன.

1982ஆம் ஆண்டு ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகளோடு இவருக்குத் தொடர்புகள் ஏற்பட்டன. ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த சிந்தனைகளில், இவர் மிகுந்த தெளிவோடு செயற்பட்டிருந்தார். சர்வதேச அரங்கில் பேசப்படுகின்ற ஈழத்தமிழர்களின் அரசியல் போராட்டத்தில், பழ. நெடுமாறனுடன் இணைந்து உலகத்தமிழ் பேரமைப்பின் பொதுச் செயலாளராகவும் பதவி வகித்துக் கொண்டு இறக்கும்வரை ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தமிழகத்தில் முள்ளிவாய்க்கால் முற்றம் கட்டுவதற்குத் தூணாக இருந்தவரும் இவர்தான்.

### பதிப்புத்துறையில் இளவழகன்

19ஆம் நூற்றாண்டின் இறுதியியும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பமும் தமிழ், தமிழர் வரலாற்றின் மறுமலர்ச்சிக் காலமாகும். இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் மொழிக்காகவும், இனத்துக்காகவும் பெரும் பங்காற்றிய அறிஞர்களின் நூல்கள் அனைத்தையும் தொகுத்து காலவரிசையில் பொருள் வழி பிரித்து ஒரே நேரத்தில் வெளியிட வேண்டும் என நினைத்தே தமிழ்மண் என்ற பதிப்பகத்தை இளவழகன் நிறுவினார். 1955ஆம் ஆண்டு சாமிநாத சர்மா, என்ற வரலாற்று அறிஞர் எழுதிய சீன வரலாறு, ரஷ்ய வரலாறு, துருக்கி வரலாறு, இத்தாலிய வரலாறு போன்ற வரலாற்று நூல்களையும் இவர் வெளியிட்டார். வரலாற்றறிஞர் வெ.சாமிநாத சர்மா எழுதிய 78 நூல்களையும் 31 தொகுதிகளாக வெளியிட்டமை இளவழகனின் மாபெரும் பணியாகும்.

தமிழ் உலகில் வாழ்ந்து மறைந்த பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையாரின் 40க்கும் மேற்பட்ட நூல்களையும் இவர் வெளியிட்டார். 1965ஆம் ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த யாழ்ப்பாண அகராதி என்னும் மானிப்பாய் அகராதி (இரண்டு தொகுதிகள்) மற்றும் 70 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த வெள்ளி விழா தமிழ் பேரகராதி (மூன்று தொகுதிகள்) ஆகிய அகராதிகளை ஒரே நேரத்தில் வெளியிட்ட பெருமை இவருக்குரியதாகும்.

இவ்வாறு தமிழர்தம் அரசியலுக்கும், அவர்களின் இலக்கியத்துக்கும் அரும்பெரும் பணியாற்றிய அன்னாருடைய இழப்பு தமிழக மற்றும் ஈழத்தமிழர்களுக்கு மாத்திரமல்ல உலகத் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரனர்த்த நீக்கத்துக்கான வாழ்தலைப் பேசும்

## சுசிமன் நிர்மலவாசனது ஓவிய இயக்கம்









○ கலாநிதி சி.ஜெயசங்கர்

எந்தவகையிலான ஊடகங்களிலும், எந்த விதமான இடங்களிலும் ஓவியப்படைப்புக் களை– காண்பியக்கலை ஆக்கங்களை – உருவாக்கவும், காட்சிப்படுத்தவுமான இயல்பு சுசிமன் நிர்மாலவாசனுக்குரி யது.

அவரது படைப்பாக்கத்துக்கான கருவூலங்கள், மக்களதும் சூழலதும் இணைவைப் பேணுவதில் கவனம் கொண்டிருப்பதை அவருடைய ஓவியக்காட்சிப்படுத்தல்கள் புலப்படுத்தி நிற்கின்றன.

அதேவேளை காலனியம் அறிமுகப்படுத்திய நவீன ஓவியம் வரிக்கின்ற 'தராதரங்களிலும்' தடம்பதித்தவராக ஆனால் அதனால் தீர்மானிக்கப்படாதவராக அவர் இயங்குவதையும் காணமுடிகின்றது.

நவீன ஓவிய உலகின் அதிகார அல்லது அங்கீகார பீடமாகக் கொள்ளப்படுகின்ற கலைக்கூடங்களில் காட்சிப்படுத்தலுக்கான அவாவற்ற இளம் ஆளுமையாக சுசிமன் நிர்மலவாசன் இயங்குவது மிகுந்த கவனத்துக்கும், கற்றலுக்கும் உரியது.

சிறுவர்கள், இளையவர்கள், மூத்தோர்களுடன் இணைந்து ஓவிய, காண்பியக்கலை உருவாக்கங்களை முன்னெடுப்பது, காட்சிப்படுத்துவது என்பதும் நிர்மலவாசனது கலையாக இருக்கின்றது.

காட்சிப்படுத்தல்களின்போது மீளுருவாக்கம் பெறும், விரிவாக்கம்பெறும், முழுமைபெறும் ஓவிய ஆக்கங்களது உரித்தாளராகவும் நிர்மலவாசன் விளங்குகின்றார்.

இந்தவகையில் படைப்பாக்க ஆதிக்க நீக்கம் பற்றிய சிந்தனைக்கான அறிவியல் வளமாக வாசனின் ஓவிய ஆக்க முன்னெடுப்புக்கள் காணப்படுகின்றன.

இத்தகைய வித்தியாசமானதும் சிறப்புத் தன்மை வாய்ந்ததுமான இயக்கத்தின் மூலம் பற்றிச் சிந்திக்கும்பொழுது ஓவியர் அ.மாற்கு முன்வந்து நிற்கின்றார். முற்றுகைக் காலங்களிலும், பொருளாதாரத் தடைக்காலங்களிலும் பாடசாலைப் பிள்ளைகள் பயன்படுத்தும் ஓவியம் வரைதலுக்கான குறைந்த பட்ச ஊடகங்களோ, வளங்களோ கிடைக்காத சூழலிலும் பால்மாப் பொருள்கள், பிஸ்கட்டுக்கள் என்பவை பொதி செய்யப்பட்டு வரும் கார்ட்போட்மட்டைகளில் கரித்துண்டுகளால் ஓவியங்கள் வரைந்து சுவர்களிலோ, வேலிகளிலோ தொங்க விட்டு உரையாடல்களை உருவாக்கியவர் ஓவியர் அ.மாற்கு.

ஓவியர் அ.மாற்குவின் மாணவர்களும் இந்த வகையினரே. ஓவியர் கமலா வாசுகியினது ஓவிய முன்னெடுப்புக்கள் இதன் தொடர்ச்சியும் விரிவாக்கமும் கொண்டவை. பெண்களுடன் இணைந்து கூட்டுக்கலை ஆக்கங்களை நிகழ்த்துவது காட்சிப்படுத்துவது உரையாடல்களை முன்னெடுப்பது என்பதாக இந்தச் செயற்பாடுகள் காணப்படும். கைவிடப்பட்ட, சூழலுக்கு நட்பான பொருள்களைக் கையாண்டு காண்பியக்கலை ஆக்கங்களும், காட்சிப்படுத்தல்களும் நிகழ்த்தப்படும்.

இவை பொது அல்லது வெகுசன உரையாடலுக்கானதாக வடிவமைக்கப்பட்டிருக்கும். வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களுடன் இணைந்து உளஆற்றுப்படுத்தலாகவும், உணர்வுவெளிப்பாடாகவும், எதிர்ப்புக் குரலாகவும் உருவாக்கப்பட்டு காட்சிப்படுத்தலுக்குக் கொண்டுவரப்படும் ஆக்கங்கள் பொதுவெளிகளிலேயே உருவாக்கப்படும் ஆக்கங்கள் என்பவை வாசனது வித்தியாசமான உருவாக்கத்துக்கும் இயக்கத்துக்குமான முன்னோட்டங்களாக இருந்திருக்கின்றன.இத்தகைய செயற்பாடுகளின் முக்கியமான முன்னெடுப்பாளராகவும் வாசனது இயக்கம் விரிவாக்கம் பெற்றிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடலும், வயல்வெளியும், வாவியும், கண்ணாக்காடுகளும் சூழ்ந்த இயற்கைச் சூழலில் மனிதராலும் இயற்கையாலும் ஏற்பட்ட ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற பேரனர்த்தங்களின் சிதைவுகளிடையே வாழ்தலைப் பேசுவதையும், அனர்த்த, பேரனர்த்த நீக்கத்துக்கான வாழ்தலைப் பேசுவதையும் வாசனது ஓவிய இயக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

'மூன்றாவது கண்' உள்ளூர் அறிவுதிறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள்குழாம், வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர் குழாம் என்பவற்றில் ஆழ்ந்த ஈடுபாடும் இயக்கமும் வாசனது பார்வையையும் நிலைப்பாட்டையும் தீர்மானித்திருக்கின்றன என்பதை அவரது ஓவியங்கள், ஓவியஆக்க முறைமைகள் காட்சிப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் முறைகளில் கண்டுகொள்ளலாம்.

வாசனின் தேடல் அவரது கலைவாண்மையையும் ஆளுமையையும் தீர்மானித்திருக்கின்றது. கலை நிறுவனமொன்றுக் கூடாக எத்தகைய ஆளுமைகள் அல்லது பட்டதாரிகள் உருவாக்கப்படுகிறார்கள்? வாசனைப் போன்ற ஆளுமைகளைக் கலை நிறுவனங்களுக்கூடாக உருவாக்கமுடியுமா? முடியுமாயின் அதன் முறைமை எத்தகையதாக இருக்கவேண்டும், என்பவை முக்கியமான உரையாடலுக்குரியவை.

வாசனது ஓவியங்களில் மீன்களும், கருவாடும், கண்ணாக்காடும் முக்கிய இடம்பிடித்திருப்பவை. மனிதர்களின் அனுபவங்களை, கதைகளை அவர்கள் வாழும் இயற்கைச் சூழலின் உருவங்கள், படிமங்கள் மூலம் முழுமை பெறச் செய்து படைப்பாக்கியுள்ளார்.

காட்சிப்படுத்தும் வெளியையும் ஓவிய ஆக்கங்களையும் இணைத்து நினைவுகூருதலூடாக ஓவியக் கதைகளை எழுதுபவர் ஓவியர் சுசிமன் நிர்மலவாசன். பன்குடா வெளி கண்ணாடிப் போடியாரின் பாழடைந்த வீட்டில் காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்கள் இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

நவீன ஓவியத்தின் அதிகார அல்லது அங்கீகாரபீடமான ஓவியகூடங்களுக்கு சவாலானதும் படிப்பினையுமான ஓவியக்காட்சிப்படுத்தலாக வாசனது 'பன்குடாவெளி 90' கண்ணாடிப் போடியாரின் பாழடைந்த வீட்டு ஓவியக்காட்சிப்படுத்தல் அமைகின்றது. வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியக் குழாத்தின் காட்சிப்படுத்தல்களின் நீட்சியாக இது அமைகின்றது. கலை ஆக்கங்களின் வலிமை, கலைக் காட்சிப்படுத்தல்களின் வலிமை அதிகாரமிக்க இடங்களில் அவை வைக்கப்படுவதில் அல்ல, அப்படைப்புகள் கிளர்த்தும், தொடர்புபடுத்தும், இணைக்கும் பல அனுபவங்களைக் கொண்டு வரும் சூழலையும் சூழ்நிலையையும் உருவாக்குவதில் தங்கியிருக்கிறது என்பதை மேற்படி காட்சிப்படுத்தல்கள் உணர்த்தி இருக்கின்றன.

இந்த வகையில் சுசிமன் நிர்மலவாசனின் 'நினைவுகோருதல்' என்ற தலைப்பிலான 21 ஓவியங்களை உள்ளடக்கிய ஓவியக்காட்சிப்படுத்தல் அவரது இன்னொரு பரிமாணமாகக் காணப்படுகின்றது.

சிறு வயதில் அவரறிந்த கதைகள், அவர் விளையாடிய விளையாட்டுகள் அவர் வாழ்ந்த சுற்றம் சூழல் என்பவற்றுக்குப் பின்னாளில் என்ன நடந்து விட்டிருக்கிறது என்பதை அவரது சிறுபராயத்து நினைவுகள், சிறுபராயத்து வெளிப்பாட்டு முறைமைகள், சுற்றுச்சூழலும் சுற்றமும் என்பதாக ஓவியங்கள் சமகாலத்துக் கதைகளை வண்ணங்களின் வழிபேசுகின்றன.

இந்த ஓவியக்காட்சி 2021 ஏப்ரல் 29 முதல் தினமும் காலை 10 மணி தொடக்கம்; நள்ளிரவு வரை கொழும்பு பரடைஸ்ரோட்கலரியில் இடம்பெற்று வருகின்றது.

இலங்கையின் சமகால ஓவியப் பின்புலத்தில் மிகவும் வித்தியாசமான ஓவியங்களின் காட்சியாக இது அமைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்துமா/ இழுப்பு






**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
**(யாழ்.போதனா மருத்துவமனை,**
**– சிலாபம் மாவட்டப்**
**பொது மருத்துவமனை)**



**எனது மகனுக்கு 10 வயது. முட்டு வருத்தம். 3 வருடமாக உள்ளது. டாக்டர் பம் பாவிக்கும் படி கூறியுள்ளார். எனக்கு பயமாக உள்ளது. பம் அடிக்ட் ஆகிவிடும் அபாயமுள்ளது என அயலவர் கூறுகின்றனர். இது உண்மையா? ஏன் இந்த நோய் ஏற்படுகிறது. தயவு செய்து பதிலளியுங்கள்.**

அர்ச்சனா, கந்தர்மடம்

## ஆஸ்துமா அல்லது இழுப்பு

இது நுரையீரலில் ஏற்படும் நாள்பட்ட அழற்சியால் மீண்டும் மீண்டும் (Recurrent) வரக்கூடிய மூச்சுத் திணறல் நிலையாகும். இதற்கு முக்கிய காரணம்

1. சுவாசக் குழாய்களை சுற்றியுள்ள தசைகளில் ஏற்படும் சுருக்கம்/ இறுக்கம்
2. சுவாசக் குழாயின் உட்படலத்தில் ஏற்படும் வீக்கத்தால் காற்று உட்சென்று வெளியேறும் பாதையில் ஒடுக்கமேற்பட்டு காற்றோட்டம் குறைதல்

இந்நோயின் தீவிரம் மனிதருக்கு மனிதர் வேறுபடும். வயதுபாகுபாடின்றி எல்லோரும் பாதிக்கப்பட்டினும் பொதுவாக குழந்தைகளிலேயே இது ஆரம்பிக்கின்றது. குழந்தைகளில் உள்ள நாள்பட்ட நோய்களில் முதலிடம் வகிப்பது ஆஸ்துமா.



## அறிகுறிகள்

1.இந்நோய்க்கான ஆரம்பநிலை அறிகுறிகள்

இரவில் இருமல் அதிகரித்தல்
உடற்தொழிற்பாடுகளின்போது இருமலும், மூச்சிரைப்பும்
இலகுவாகச் செய்யக்கூடிய வேலைகளின் போதுகூட களைப்பை உணர்தல்
முறையற்ற தூக்கமும், எழும்பும்போது களைப்பை உணர்தலும்
மூக்கு ஒழுகுதல், கண்களின் அடிப்பகுதியில் கருவளையம், தோலரிப்பு போன்ற ஒவ்வாமைக்கான (allergy) அறிகுறிகள் காணப்படல்

இவ்வகை அறிகுறிகளை கண்டுகொள்வதன் மூலம் தீவிர மான ஈழை நோய்த் தாக்கத்தை தவிர்க்கலாம்.

2.இந்நோய் ஆரம்ப நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு அதிகரிக்கும்போது சுவாசக் குழாய்கள் சுருக்கமடைந்து அழற்சிக்குட்பட்டு சளியால் நிரப்பப்படும். அப்படித் தோன்றும் அறிகுறிகளாவன:

நெஞ்சு இறுக்கம்
தீவிரமான, நீடித்த இருமல்
குறுகிய மூச்சு
மூச்சிரைப்பு

இவற்றைக் கவனித்து சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிடின் சுவாசக் குழாய்களில் மேலும் ஏற்படும் ஒடுக்கமானது நோயாளி சாதாரண தொழிற்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளிவிடும்.

3.அத்துடன் சில தீவிரமான அறிகுறிகளும் தோன்றும்.

மூச்சிரைப்பால் உண்டாகும் சத்தத்தை நோயாளி தானே கேட்கக் கூடியதாக இருக்கும்.
இரவு, பகல் தொடர்ச்சியான நீடித்த இருமல் இருக்கும்.
தூக்கமின்மையும், ஓய்வு கொள்ள முடியாத நிலையும் ஏற்படும்.

உடனடியாக சிகிச்சை அளிக்கவல்ல மருந்துகளால் நோயைக் குணப்படுத்த முடியாத நிலை தோன்றலாம். எனவே ஆரம்ப நிலையிலேயே சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுதல் இங்கே அவசியமாகின்றது.

## ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்தும் மருந்துகள்

ஒரு கட்டுப்படுத்தும் மருந்தானது மூச்சுக்குழாய்களின் உள் உறை வீங்குவதைத் தடுக்கின்றது. தினசரி உபயோகிக்கப்படும்போது உங்கள் பிள்ளைக்கு குறைந்த அளவான வீக்கமும் சளியுமே ஏற்படுகின்றது. பெக்ளோமெதசோன் (கியுவர்), மற்றும் பியூடசோனைட் (பள்மிகோர்ட்) சில உதாரணங்களாகும்.

உங்கள் பிள்ளை நலமானதாகத் தோற்றமளித்தால்க்கூட கட்டுப்படுத்தும் மருந்தை தினமும் உப்யோகிக்க வேண்டும். உங்கள் வைத்தியர் நிறுத்தச் சொல்லும்வரை உங்கள் பிள்ளை இந்தக் கட்டுப்படுத்தும் மருந்தை உபயோகிப்பதை நிச்சயப்படுத்துங்கள்.




மிகத் தீவிரமான ஈழை நோய்த்தாக்கத்தின் போது போதியளவு ஒட்சிசன் கிடைக்கப் பெறாமையால் நோயாளி நீல நிறத்துக்கு மாறக் கூடும். அத்துடன் நெஞ்சுவலியால் பாதிக்கப்படுவதுடன் தன்னுணர்விழந்த நிலைக்குச் செல்லவும் நேரும். இந்நிலை மேலும் தீவிரமடையும்போது வழமையான சிகிச்சைகள் எதுவும் பலனளிக்காத நிலையையடைந்து சுவாசம் முற்றிலுமாக நின்று இறப்பு நிலைக்குப் போக வேண்டி நேரலாம்.

## ஆஸ்துமா அறிகுறிகளுக்கு நிவாரணம் அளிக்கும் மருந்துகள்

இருமல் அல்லது மூச்சிரைப்பு போன்ற ஆஸ்துமாவுக்கான அறிகுறிகளுக்கு, நிவாரணி மருந்து சிகிச்சையளிக்கின்றது.

மூச்சுக்குழாயை சூழ்ந்து செல்லும் தசைகளை நிவாரணி மருந்து இளைப்பாறச் செய்கின்றது. தசைகள் இளைப்பாறும்போது மூச்சுக்குழாய் திறக்கின்றது. மூச்சுக்குழாய்கள் திறக்கும்போது உங்கள் பிள்ளையால் மேலும் இலகுவாக சுவாசிக்க முடிகின்றது. சல்பூட்டமோல் (எயாறொமிர் அல்லது வென்டோலின்) மற்றும் டர்புடலின் (பிரிக்கனில்) என்பவை நிவாரணி மருந்துகளுக்கான உதாரணங்களாகும்.

ஆஸ்துமா பிரச்சனை வரும்போது உங்கள் பிள்ளை நிவாரணி மருந்தை பயன்படுத்த வேண்டும்.

ஒரு நொடியில் வேகமாக வெளிவிடக் கூடிய மூச்சின் அளவு, மூச்சு விடும் வீதத்தின் உச்சநிலை. இவ் இரண்டினடிப்படையில் ஆஸ்துமாவின் தீவிரத்தன்மை வகைப்படுத்தப்படும்.

| நோயின் தீவிரத்தன்மை | அறிகுறி நிகழ்வெண் | இரவுநேர அறிகுறிகள் | மூச்சுவிடுதல் வீதத்தின் உச்சநிலை அல்லது FEV1 குறித்து முன்னுரைத்தல் | மூச்சுவிடுதல் வீதத்தின் உச்சநிலை அல்லது FEV1 ளின் மாறுபடும் தன்மை |
|---|---|---|---|---|
| இடைவிட்டு நிகழுதல் | < ஒரு வாரத்துக்கு ஒருமுறை | ≤ ஒரு மாதத்தில் இருமுறை | ≤ 80 % | < 20 % |
| லேசாக தொடர்ந்து இருத்தல் | < ஒரு வாரத்துக்கு ஒருமுறை அல்லது < ஒரு நாளில் ஒருமுறை | < ஒரு மாதத்தில் இருமுறை | < 80 % | 20–30 % |
| மிதமாக தொடர்ந்து இருத்தல் | தினமும் (நோயின் தீவிரம் வழமையான தொழில்பாடுகளைப் பாதிக்கும்) | < ஒரு வாரத்துக்கு ஒருமுறை (தூக்கத்தைக் குழம்பலாம்) | 60–80 % வரை முன்னுரைக்கப்படுகிறது | 30 % |
| நோயின் தீவிரத் தன்மை தொடர்ந்து இருத்தல் | தினமும் (நோயின் தீவிரம் அடிக்கடி தெரியும். வழமையான தொழிற்பாடுகள் குறைந்துவிடும்) | அடிக்கடி (இரவில் ஏற்படும் அசௌகரியம் அதிகரிக்கும்) | < 60 % முன்னுரைக்கப்படுகிறது | 30 % |

ஆஸ்துமாவுக்கான அடிப்படைக் காரணம் சரியாக இன்னும் வரையறுக்கப்படவில்லை. மரபியல் காரணிகளும் சுற்றுப்புறச் சூழல் காரணிகளும் காரணமாக அமையலாமென கருதப்படுகின்றது. அவ்வாறான சூழற் காரணிகள் பின்வருமாறு

## சூழலியல் காரணிகள்

**பொதுவான காரணங்கள்:**

- ஒவ்வாமை ஊக்கிகள் (allergens) தூசு, சிற்றுண்ணிகள், மகரந்தம், பூஞ்சை
- புகையிலையிலிருந்து வரும் புகை.
- வேலைத் தளங்களில் பயன்படும் வேதிப்பொருள்கள்
- மாசடைந்த காற்று, வாகனங்களால் ஏற்படும் தூய்மைக்கேடு

**மேலும் இந்நோயைத் தீவிரப்படுத்தக் கூடிய காரணிகளாவன:**

குளிர் காற்று
கோபம், கவலை, பயம் போன்ற உணர்ச்சிவசப்படும் நிலைகள் மன அழுத்தம்.
அதிகரித்த உடற் தொழிற்பாடுகள்/உடற்பயிற்சி
தடிமல் மற்றும் ப்ளூ போன்ற நோய்த்தொற்றுகள்
விறகு மற்றும் எண்ணெய்ப் புகை
செல்லப்பிராணிகள்
ஈரப்பதமான காலநிலை
குளிரான காலநிலை
ASA (ஆஸ்பிரின்) அல்லது ஐபியூபுரோஃபென் போன்ற மருந்துகள்
பலமான மணங்கள் அல்லது ஸ்பிரேகள்

## ஆஸ்துமாவில் உபயோகப்படும் மருந்துகள்

ஆஸ்துமாவுக்கான மருந்துகள் உங்கள் பிள்ளையின் சுவாசப்பையை ஆரோக்கியமாக வைக்க உதவுவதோடு பிள்ளையின் ஆஸ்துமா நோய் மோசமடையாமலும் வைத்துக்கொள்ளும். இந்த மருந்துகள் ஆஸ்துமாவைக் குணப்படுத்தாது, ஆனால் அவை உங்கள் பிள்ளையின் சுவாசப்பையை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

ஆஸ்துமாவுக்காக உங்கள் பிள்ளை எடுக்கும் மருந்துகளில் அநேகமானவை மூச்சில் உள்வாங்குபவையாகும். இன்ஹேலர் மருந்துகள்!!!!

கோர்ட்டிகொஸ்டீரொயிட் என அழைக்கப்படுகின்றன. மூச்சுவழியாக உட்கொள்ளும் மருந்துகள் ஆஸ்துமா உள்ள பிள்ளைகளுக்கு மிகவும் பாதுகாப்பானவை என காட்டப்பட்டுள்ளன. உங்கள் பிள்ளை அவற்றை பல வருடங்களுக்கு உபயோகிக்கலாம். அதோடு ஒரு சாதாரண மனித உயரத்துக்கு வளரலாம்.

ஆஸ்துமாவுக்காக உங்கள் பிள்ளை மூச்சுவழியாக உட்கொள்ளும் மருந்து வகைகளில் முதன்மையானவை கன்ட்ரோளர்ஸ் அதாவது கட்டுப்படுத்திகள் அல்லது ரிலீவர்ஸ் அதாவது நிவாரணிகள் என அழைக்கப்படுகின்றன.

## உங்கள் பிள்ளையின் ஆஸ்துமா மோசமடைவதற்கான எச்சரிக்கை அறிகுறிகள்

**பிள்ளையிடம் காண/ கேட்க கூடிய விடயங்கள்**

- விட்டு அகலாத இருமல்
- வாந்தி எடுக்கும்வரை இருமுதல்
- இரவில் இருமுதல்
- மூச்சிரைப்பு (வீசிங்)
- மூச்செடுக்க முடியாமை
- விளையாட அல்லது உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்ததும் களைப்படைதல்
- வழக்கத்தைவிட விரைவாக சுவாசிப்பது
- சிணங்கொள்ளுதல், கோபமடைதல்,
- வழமைக்கு மாறான நிலை
- தடுமலுக்கான அறிகுறிகள்
- தும்முதல்

**உங்கள் பிள்ளை சொல்லக் கூடியவை**

- "நான் களைப்பாக இருக்கின்றேன்"
- "எனது நெஞ்சு வலிக்கின்றது"
- "மூச்செடுக்கக் கடினமாக உள்ளது"
- "நான் மூச்செடுக்கும் போது ஒரு வினோதமான சத்தம் (வீசிங்) கேட்கின்றது."

## ஆஸ்துமா நோயாளி ஒருவர் அவசர சிகிச்சை பிரிவை நாட வேண்டிய சந்தர்ப்பங்கள்

1.அறிகுறிகளின் காரணமாக உங்கள் பிள்ளையால் சாப்பிட, நித்திரைகொள்ள அல்லது பேசமுடியாமலிருக்கின்றது,
2.உங்கள் பிள்ளையின் சுவாசம் ஒழுங்கின்றிக் காணப்படுவது அல்லது தொண்டையில் அல்லது விலா எலும்புகளுக்குக் கீழ் உள் இழுக்கப்பட்டிருகின்றது
3.மேலதிக நிவாரண மருந்து வேலை செய்யாமலிருக்கின்றது
4.ஆஸ்துமாவிற்கான அபாய அறிகுறிகள் பேசுவதில் சிரமம், வழக்கத்திற்குமாறான தூக்கக்கலக்கம் அல்லது விழித்தெழுவதில் சிரமம், உதடுகள் அல்லது சருமம் நீல நிறமாகக் காணப்படுதல்,

இவற்றில் ஏதாவது ஒரு அறிகுறியை நீங்கள் பார்த்தால், ஆஸ்துமா அறிகுறிகளுக்கு நிவாரணமளிக்கும் மருந்தை உங்கள் பிள்ளை உட்கொள்ளச் செய்யுங்கள். மிக அருகாமையிலுள்ள அவசர சிகிச்சைப்பகுதிக்கு செல்லுங்கள் அல்லது அம்பியூலன்ஸை அழையுங்கள்.

இப்பொழுது உங்கள் கேள்விக்கு வருவோம்.

உங்கள் அயலவர்களிடமிருந்து எந்த மருத்துவ லைசென்ஸ் இருக்கிறது என்பதை அறியத்தரவும் ஆஸ்துமா பம் Inhalers பாவிப்பதால் எவ்வித அடிக்சனும் ஏற்படாது. மாறாக உங்கள் பிள்ளையின் இறுகிய மூச்சுக்குழல் தசைகளை தளர்த்தி மூச்சு விடுவதை இலகுவாக்கும். குளுசை/ ஊசி போல இது மருந்தை உட்செலுத்தும் முறை மட்டுமே என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போனாள்?



சஞ்சீவி சிறுகதை

○ கோகிலவாணி

ஜப்பான் தேசத்தின் தலைநகர் ரோக்கியோவில் இதமானதொரு இளங்காலை வேளை.

மனதிலும் உடலிலும் உற்சாகம் குமிழியிட, இது நாள்வரை, கொடுங்குளிர்காலத்துக்கு அஞ்சி இறுக அடைத்திருந்த எனது அறையின் யன்னல்களை மெதுவாகத் திறந்தேன் . வெளியே மெல்ல வருடும் இதமான காற்றும், கோடைகாலம் கொலுவிருக்கப் போவதற்கான இனிய காட்சிகளும் மனதை வசீகரித்தன. கட்டடங்களின் காடான போதும், ஆங்காங்கே பச்சைக்கம்பளங்களாய் விரிந்து செழித்துக் கிடக்கும் புல்வெளிகளும்,அவை ஏந்திநிற்கும் வண்ணமலர்க் குவியல்களும், நகரை அரவணைத்தபடி தூரமாக அணிவகுத்துத் தெரியும் மலைத் தொடர்களும் நகரை மெருகூட்டின.

நானிருப்பது, ரோக்கியோ பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு மாணவிகளுக்கான ஒரு விடுதி. இங்கு ஜப்பானிய அரசின் புலமைப் பரிசில்களைப் பெற்று, உலகநாடுகள் பலவற்றிலுமிருந்து வந்து தங்கியிருந்து, பலர் தமது உயர்கல்வியை மேற்கொள்கிறார்கள். விடுதியின் அறைகள் சிறியவை, ஆனால் இருவர் பகிர்ந்து கொள்வதற்கேற்ப சகல வசதிகளும்கொண்டவை. இப்போது, அவை கொரோனா தொற்று பாதுகாப்புக்காக ஒருவருக்கு ஒன்று என மாற்றப்பட்டிருந்தன. தனியே இருப்பதிலும் சில சௌகரியங்களுண்டு. எனினும், கூடவே இன்னொரு தோழியுடன் சேர்ந்து வாழ்வது, தனிமையைப் போக்கி மனதுக்கு ஆறுதலாக இருக்கும். மேலும்அந்நியநாடு, புதியமொழி, பரிச்சயமற்ற சூழல் என எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிப்பதற்கும் இலகுவாக இருக்கும்.

வகுப்புக்குச் செல்வதற்கு நேரமானதால் எனது அறையிலிருந்து வெளியே வந்தேன். எப்போதும் அமைதிப்பூங்காவான விடுதி, வழமைக்கு மாறாக பரபரப்பாகத் தெரிந்தது. தம் அறைகளுக்கு வெளியே மாணவிகள் சிலர் காணப்பட்டனர். அதே வேளை விடுதிப் பொறுப்பாளர்கள், அதிகாரி கள், பொலிஸார் எனச்சிலர் குறிப்பிட்டதொரு மாணவியின் அறையிலிருந்து வெளியேறிச் சென்று கொண்டிருந்தனர். அச்சமும் ஆர்வமும் தூண்ட , சக மாணவர்களிடம் விசாரித்தேன். அந்த அறையிலிருந்த, தாய்லாந்து மாணவி பரீதா காணாமற்போய்விட்டாள்!

மனிதர்களுக்கே உரித்தான ஆர்வக்கோளாறு தூண்ட, விடயத்தை மேலும் அறிந்துகொள்ள முற்பட்டேன். உயர்கல்விக்கான ஆய்வுக் கட்டுரை தொடர்பில், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி, சில முக்கியமான விடயங்களைக் கலந்துரையாட, பரீதாவின் பேராசிரியை தொலைபேசியில் பல தடவைகள் தொடர்புகொள்ள முயன்றிருக்கிறார். ஆனால் தொடர்புகொள்ள முடியாதபடி, தொலைபேசி நிறுத்திவைக்கப்பட்டி ருந்தமை அவருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. எனினும் ஏதாவது சொந்தத் தேவை கருதி எங்கேனும் போயிருக்கலாம் என நினைத்து அப்போது அதனை மறந்து விட்டார். ஆனால் தொடர்ந்தும் அவளிடமிருந்து எந்தப் பதிலும் தொலைபேசியில் கிடைக்காமல் போகவே, விடுதி நிர்வாகத்திடம் பேராசிரியை தனது சந்தேகத்தைத் தெரிவித்திருக்கிறார். பல்கலைக்கழகம் மாணவியைத் தேடும் நடவடிக்கையில் இறங்கியது. சக மாணவர்க்கும் தகவல் பரவியது. விசாரணைக்கென வந்தவர்கள் அந்த அறைக்குத் தாய்லாந்து மாணவியர் சிலரையும் தம்மோடுகூட அழைத்துச் சென்றிருந்தனர்.

பரீதாவின் அறை மிகவும் நேர்த்தியாக இருந்தது. அறையில், 'ஓப்' செய்து வைக்கப்பட்ட நிலையில் கணனியும் கைபேசியும் காணப்பட்டன. காணாமற்போன பரீதா, மத ஆசாரங்களை இறுக்கமாகப் பின்பற்றும் ஓர் இஸ்லாமியப் பெண். மற்றவர்களுடன் சகஜமாக பேசிப்பழகும் சுபாவமில்லாதவள். தானும் தன் படிப்புமென ஒதுங்கி வாழ்பவள். குடும்பத்தினருடன் மட்டும் எப்போதாவது பேசுவதுண்டு. ஆனால் படிப்பில் படுசுட்டி. இவை மட்டுமே பரீதா தொடர்பில் மற்றவர்கள் அறிந்துகொண்ட தகவல்கள். இதற்கு மேல் அவள் பற்றிய செய்திகளெவையும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், இந்த விடயம் ஏனைய மாணவர் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது. நாளும் பொழுதும் இதுவே பேசுபொருளானது. தனிப்பட்ட ஒருவரின் நடவடிக்கைகள் என்பதால், இரகசிய கமரா போன்றவற்றின் பரிசீலனை விபரங்களை நிர்வாகம் வெளியிட மறுத்தது. இன்றோடு பரீதா காணாமற்போய் ஏழுநாட்கள். பெற்றோருக்கும் தூதரகத்துக்கும் அறிவித்துவிட்டு, சாதாரணமாக ஒருவர் காணாமற்போனால் மேற்கொள்ளும் சம்பிரதாய நடவடிக்கைகளோடு பொலிஸாரும் தமது தேடுதலை மட்டுப்படுத்திக் கொண்டனர். பொதுவாகவே, ஜப்பானில் தனிமனித சுதந்திரம் முக்கியப்படுத்தப்படுவதால் ஊடகங்களும் இத்தகைய விடயங்களை ஊதிஊதிப் பெருப்பித்து பரபரப்பாக்குவதில்லை. மாணவர்கள் மத்தியில் மட்டும் தீராக் குழப்பம்.

"என்ன நடந்திருக்கும்?

பரீதா கேளிக்கைக்காகவோ, உல்லாசமாகவோ நண்பர்கள் எவருடனும் சென்றிருக்க வழியில்லை. ஏனெனில் அவர்கள் அறிந்த மட்டில் அவளுக்கு அப்படி யாருமே இல்லை. பரீதாவின் ஒல்லியான தோற்றமும், பயந்த சுபாவமும் பர்தாவால் மறைக்கப்பட்ட முகத்தில் தெரியும் மிரட்சியான கண்களும், நினைவை விட்டகலாமல் பரிதாபம் கொள்ளவைத்தன. இறுதியாக, பரீதா எதற்காகவோ, எங்கோ சென்று தற்கொலை செய்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு மாணவர்கள் வந்தனர். ஆற்றிலோ, கடலிலோ மலை மீதிலிருந்து குதித்தோ இறந்திருக்கலாம். ஏன்? உலகப் பிரசித்தி பெற்ற ஜப்பானின் தற்கொலைக்காட்டுக்குச் சென்று கூட அவள் தன்னை மாய்த்திருக்கலாம். இப்படி நிறைய ஊகங்கள்.

நாள்கள் நகரநகர, பரபரப்பும் ஓய்ந்து போனது. ஏனெனில் பரீதாவைப் போலவே அங்குள்ள ஒவ்வொருவருக்கும் தனிமையும் கவலைகளும் அதிகம். பத்தாம்நாள் காலைப்பொழுது விடுதியின் பொதுச் சமையலறையில் மாணவிகள் சிலர் சமையலில் ஈடுபட்டிருந்தனர். சமையலறையை ஒட்டியிருந்த நடைபாதையோரம் பரீதாவின் சாயலில் யாரோ நடந்துபோவது போலத் தெரிந்தது. அவர்கள் வியப்பு மேலிட, உன்னிப்பாக அவதானித்தனர். சந்தேகமேயில்லை, அது பரீதாவே தான். பரீதா, மிகவும் இயல்பாக நடந்து சென்று, தன் அறைக்கதவைத் திறந்து உள்ளே போனாள். பரபரப்போ பதற்றமோ எதுவும் அவளிடம் இல்லை. ஆனால் , அவளைப் பார்த்தவர்களும் ஏனையவர்களுமே ஆச்சரியப்பட்டார்கள். இதுவரை அவர்களது மனதில் அச்சத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்திய ஒரு விடயம், ஊசி தைத்த பலூன் போல, சற்று நேரத்தில் ஒன்றுமில்லை என்று ஆகிப்போனது. எதுவும் நடக்காதது போலிருந்த பரீதா, ஒரு புதிராகத் தோன்றினாள். என்ன நடந்திருந்தாலும் அவள் மீண்டு வந்துவிட்டாள் . எல்லோருக்கும் மகிழ்ச்சி, நிம்மதி. இத்தனை நாள் அவள் எங்கு சென்றாள்?, என்ன நடந்திருக்கும் என்பதை அறிய, பரீதாவுடன் ஓரளவு நட்பிலிருந்தவர்களுடன் நானும் சேர்ந்துகொண்டு, அவரைப் பார்க்க ஆவலுடன் அறைக்குள் நுழைந்தோம். அங்கே அவரது பேராசிரியை உடன் இருந்ததால் உள்ளே செல்லாது வெளியே காத்திருந்தோம்.. நீண்ட நேரத்தின் பின்பே பேராசிரியர் பரீதாவின் அறையைவிட்டு வெளியேறிச் சென்றார். இத்தனை நாள் பரீதா காணாமற் போயிருந்தமை தொடர்பில் விசாரிக்கப் பொலிஸார் வருகை தராதது வியப்பளித்தது. எனினும், மாணவிகள் ஒவ்வொருவராக அறைக்குள்ளே சென்றோம்.

எந்தப் பதற்றமோ கூச்சமோ இன்றி பரீதா எங்களை எதிர் கொண்டாள். கட்டிலில் உட்காரும்படியும் கேட்டுக்கொண்டாள். எனினும் முகம்வாடிப்போய்ச் சோர்வாக இருந்தாள். எதுவுமே பேசாமல் எமக்காக உயிரற்ற புன்னகையை வலிந்து வரவழைத்திருந்தமை புரிந்தது. அவளைப் பார்க்கையில் காயம்பட்ட சிறுமுயலைப் பார்ப்பது போல மனம் வலித்தது. ஆனால் என்னோடு வந்தவர்கள் பரீதாவைக் கேள்விகளால் துளைக்கத் தொடங்கினர். அவளும் ஏதோ இயந்திரம் போல ஏதேதோ பதில்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வேண்டாத விருந்தாளிகளாக, ஒருவரின் அறையை மட்டுமல்ல, அந்தரங்கத்தையே எட்டிப் பார்ப்பது போன்ற அநாகரீகம் என்னைக் கூசவைத்தது. பரீதாவுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதையும் அனுபவபூர்வமாக என்னால் உணர முடிந்தது.

மன அழுத்தம்!

இந்த அழுத்தம் என்னையும் அவ்வப்போது புரட்டிப் போட்டதுண்டு .ஆனால் பரீதாவின் நொய்தலான மனம் அதைத் தாங்கமுடியாமல் அவளைத் தத்தளிக்க வைத்திருக்கிறது. வேடிக்கைப் பொருளாக்கி மற்றவர் முன்நிற்க வைத்திருக்கிறது. இது ஒரு நோயல்ல. அன்பு, பரிவு, மகிழ்ச்சி மட்டுமே இதற்கு மருந்து. நமது மனம் விந்தையான முரண்கள் நிறைந்தது. காரணமில்லாமல் மற்றவர்கள் மீது ஏற்படும் கோபம், பயம், வெறுப்பு விளிம்பு நிலையில் உணர்ச்சிச் சிதறலாக மடை மாறுகிறது. இதுதான் பரீதாவுக்கும்நேர்ந்திருக்கும். பரீதாவுக்கும் மற்றவர்களுக்குமிடையில் தொடர்ந்த உரையாடல் இதை உறுதிசெய்தது.

"எங்கே போயிருந்தாய்? என்ன செய்தாய்? என்ற கேள்விகளுக்கு

"விடுதியிலேயே இருந்தேன்.படித்துக் கொண்டிருந்தேன்,படிக்கும் அறையில் மறைந்திருந்தேன். பேராசிரியருடன் பேசிக்கொண்டிருந்தேன்"

இப்படிப் பரீதா ஏதேதோ தன்பாட்டில் பேசிக்கொண்டிருந்ததைப் பார்க்கையில் விசித்திரமாக இருந்தது. அமைதி இழந்து பதற்றப்படுவதும் தெரிந்தது.

திடீரென உரத்தகுரலில். "நான் எங்கும் போய் விடவில்லை. உங்கள் எவரையும் பார்க்கப் பிடிக்காததால் இங்கேயே மறைந்திருந்தேன். இப்போதே எல்லோரும் போய் விடுங்கள். என்னை விட்டு விடுங்கள். தயவு செய்து என்னைத் தனியே விட்டுவிடுங்கள். எனக்கு அமைதி வேண்டும். தனிமைதான் வேண்டும். மன்றாடிக் கேட்கிறேன் என்னை விட்டுப் போய்விடுங்கள்" ஆவேசமாக ஆரம்பித்து அழுகையோடு முடித்தாள் பரீதா. நாம் பார்த்து திகைத்துப்போனோம். தாளாத குற்றஉணர்ச்சியில் தயங்கித் தயங்கி அறையை விட்டு வெளியேறினோம். உள்ளே விம்மல் பொருமலோடு தன் மன அழுத்தம் எல்லாம் கரைந்து போகும்படி வாய் விட்டு அழும் பரீதாவின் அழுகை ஒலி எங்களைப் பின்தொடர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தட்டிக் கே
# குத்திக் கொ



கொலை செய்யும
ளவுக்கு அப்படி
என்ன முன்பகை?

10.03.2021 இரவு 7.10 மணி.
வட்டக்கச்சி.

அன்றைக்கு துஷ்யந்தனின் பிறந்த நாள். மாலையில் உறவினர்களோடு இணைந்து கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண்டாடி விட்டு, இரவு வருபவர்களுக்குச் சாப்பாடு கொடுக்க நினைத்தார் துஷ்யந்தன். அதற்காக சில பொருட்கள் வாங்க வேண்டியிருந்தது. மோட்டார் சைக்கிளில் கடைப்பக்கமாகப் புறப்பட்டார். போகும் வழியில் உள்ள அவரின் தாயாரின் வீட்டில் கண்ட காட்சி துஷ்யந்தனின் பயணத்துக்கு முட்டுக்கட்டை போட்டது. அவரின் தாயாரோடு இருவர் வாக்குவாதப்பட்டுக் கொண்டு நின்றனர். " உங்கட மகன் என்ர பிள்ளைக்கு அடிச்சுப் போட்டான். ஏன் அடிச்சவன் எண்டு நியாயம் கேக்கத் தான் வந்தம். அவன் அடிச்சதுக்கு எங்களிட்ட வீடியோவும் இருக்கு. பாருங்கோ" துஷ்யந்தனின் தாயார் அவர்கள் கொடுத்த போனை வாங்கிப் பார்த்தார்.

" அப்பிடி அவன் அடிக்கிற மாதிரி ஒண்டுமில்லையே" என்று அவர் பதில் சொல்ல, வந்தவர்கள் இன்னும் குரலை உயர்த்தினர். அடி வாங்கியதாகச் சொல்லப்படும் 18 வயதான இளைஞன் ஜீவராஜ், அடித்ததற்காக நியாயம் கேட்ட வந்த அவனது தாய் இருவரும் வாதாடிக்கொண்டு நிற்கையில் . இன்னுமொரு மோட்டார் சைக்கிள் அந்த வீட்டின் முன்னால் வந்து நின்றது. அதிலிருந்து இரு இளைஞர்கள் இறங்கினர். அப்போது துஷ்யந்தனும் தாய் வீட்டுக்குள் நுழைந்தார்.

" எங்கட அம்மா வீட்டில உங்களுக்கு என்ன அலுவல்?" என்று கேட்டவாறே, வந்தவர்களை அடித்து விரட்ட வேலியில் இருந்த தடியொன்றை முறிக்க முயன்றார். அவசரத்துக்கு தடியை முறிக்க முடியவில்லை. அதனால் நின்றவர்களைத் தள்ளினார் துஷ்யந்தன். ஆனால் அதன் போது சடாரென ஜீவராஜ், துஷ்யந்தனுக்கு அடித்துவிட்டான். துஷ்யந்த னுக்கு கோபம் தலைக்கேற, ஆவேசத்தோடு தாக்க முற்பட்டார். ஆனால் சண்டையை நிறுத்துவதற்காக அங்கிருந்தவர்கள் அவரைப் பிடித்துக் கொண்டனர்.

ஆனால் அப்படி அவர்கள் பிடித்துக் கொண்டதுதான் துஷ்யந்தனுக்கு எமனாக மாறியது.

இதுவரை இந்த சச்சரவில் கலந்துகொள்ளாமல் கைகட்டியபடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கிரன்ராஜ் என்ற இளைஞன் ( இரண்டாவதாக வந்த மோட்டார் சைக்கிளில் சகோதரனோடு அங்கு வந்து சேர்ந்தவன் ) எவரும் எதிர்பாராத அந்தக் காரியத்தைக் கண்ணிமைக்கும் நேரத்தில் செய்துவிட்டான். அவன் மறைத்து வைத்திருந்த கத்தியை வெளியே எடுத்தான். அதேவேகத்தோடு, பல்லைக் கடித்தபடி, துஷ்யந்தனின் உடலில் கத்தியால் சடுதியாக நாலைந்து முறை குத்தினான்.

அவன் தாமதிக்கவில்லை. சரேலென கத்தியையும் உருவிக்கொண்டு தப்பியோடினான்.

கத்திக்குத்துப் பட்ட துஷ்யந்தன் அப்படியே சரிந்தார். ஆனால் காயங்களில் இருந்து குருதி வெளியேறவேயில்லை. உடனடியாக அருகில் உள்ள வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனைக்கு துஷ்யந்தனைக் கொண்டோடினார்கள். எந்த கிரன்ராஜ் , துஷ்யந்தனைக் கத்தியால் குத்தினானோ அவனது தந்தையே தனது மோட்டார் சைக்கிளில் துஷ்யந்தனை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல உதவினார்.

துஷ்யந்தனின் கெட்ட காலம். அங்கு அம்புலன்ஸ் சாரதி இருக்கவில்லை. அதனால் ஓட்டோ ஒன்றில் ஏற்றப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனைக்கு துஷ்யந்தனைக் கொண்டு சென்றார்கள்.

அடுத்தநாள் காலை (11.03.2021) 10.30 மணியளவில் துஷ்யந்தன் இறந்துவிட்டாரென மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது. ஆனால் 11 ஆம் திகதி விடிகாலை 4.30 க்கே துஷ்யந்தனின் உயிர் பிரிந்துவிட்டது. பிறந்தநாள் கொண்டாடிக் கொண்டிருந்த துஷ்யந்தனை, கிரன்ராஜ் என்ற இளைஞன் ஏன் அவ்வளவு வெறித்தனமாகக் கத்தியால் குத்தினான்?

## ஊருக்காக உழைத்தவன்

அருளம்பலம் துஷ்யந்தன் என்ற 34 வயதான இளம் குடும்பஸ்தரே இந்தச் சம்பவத்தில் கொலையுண்டவர்.

கிளிநொச்சி வட்டக்கச்சி தான் அவரின் சொந்த இடம். துஷ்யந்தனுக்கு 5 தங்கைகள். 2003 ஆம் ஆண்டு அவரது தந்தை , நோய் உபாதை காரணாமாக தற்கொலை செய்து கொள்ள, குடும்பச் சுமையை துஷ்யந்தன் தன் தோளில் ஏந்திக் கொண்டார். வயலை குத்தகைக்கு கொடுத்துவிட்டு, கூலி வேலைக்கு போய் வந்தார். கடுமையான உழைப்பாளி. தந்தை இறந்த சோகத்தில் இருந்து மீள்வதற்கிடையில், புற்றுநோய் உபாதையால் தங்கை ஒருவரும் தன்னுயிரை தானே மாய்த்துக் கொண்டார். அந்த வேதனைகளில் இருந்து மனதை மாற்றிய துஷ்யந்தன் , அவ்வூர் பெண்ணொருவரை 2016 ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்துகொண்டார். துஷ்யந்தனுக்கு இரு பிள்ளைகள். 4 வயதான மகளும், 11 மாதங்களேயான மகனுமே துஷ்யந்தனின் உலகமாக மாறியிருந்தனர். பிள்ளைகளில் மட்டுமல்லாது ஊரிலும் பாசம் கொண்டவர் துஷ்யந்தன். திருமணத்தின் பின்னர் தாயார் கொடுத்த காணியில் தற்காலிக வீடமைத்துத் தனிக்குடித்தனம் போயிருந்தார் துஷ்யந்தன். கிராமத்தில் யாருக்கும் ஏதாவது பிரச்சினை என்றால் அந்த இடத்தில் கட்டாயம் துஷ்யந்தன் பிரசன்னமாகி விடுவார், எதற்கும் அஞ்சமாட்டார். வட்டக்கச்சிப் பகுதியில் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனைக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கிய இளைஞர்களில் முன்னின்று செயற்பட்டவரும் துஷ்யந்தனே. இதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த சட்டவிரோத மது விற்பனையாளர்கள் துஷ்யந்தன் மீது கொலைவெறியில் இருந்தனர்.

தன்னுடைய வீட்டைப் போலவே ஊரையும் நேசிக்கும் துஷ்யந்தனுக்கு அவனது பிறந்ததினத்தன்றும் ஒரு பிரச்சினை வலியத் தேடி வந்தது.

## தேடி வந்த பிரச்சினை

10.03. 2021

சாதாரணதரப் பரீட்சையின் இறுதி நாள்.

பரீட்சை எழுதச் சென்றிருந்த தன் சகோதரியை ஏற்றிவரச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தான் ஒரு சிறுவன். அப்போது வீதியோரமாக நின்றிருந்த கிரன் ராஜும், ஜீவராஜும் அந்தச் சிறுவனை வம்புக்கிழுத்தனர்.

" என்னடா எங்களை முறைச்சுப் பார்த்துக் கொண்டு போறாய்?" என்று அவர்கள் கேட்க, சிறுவனும் பதிலுக்கு "நான் றோட்டைத் தானே பார்த்துக்கொண்டு போறேன்" என்று சொல்லியிருக்கிறான். தங்களை எதிர்த்து அவன் கதைத்தது இவர்கள் இருவருக்கும் ஆத்திரத்தை உண்டு பண்ண, அந்தச் சிறுவனை நடுவீதியில் வைத்து தாக்கியுள்ளனர். அடி தாங்க முடியாமல் அழுதபடி வீட்டுக்கு ஓடிய சிறுவன் , தன்னை ஜீவனும், கிரனும் அடித்த விடயத்தைச் சொல்லியுள்ளான்.

சிறுவனின் தந்தை போரில் காயமடைந்து இடுப்புக்கு கீழே இயங்காத நிலை. ஆனாலும் அவர் உழைத்தே குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றார். சிறுவன் அழுதுகொண்டு வீட்டுக்கு போன சமயத்தில், தந்தை வீட்டில் இருக்கவில்லை. அவர் வேலை விடயமாக மாங்குளம் சென்றிருந்தார். எனவே சிறுவனுக்கு வீதியில் இருவர் அடித்த விடயத்தை தாயார், போன் மூலம் தந்தைக்குச் சொல்லியுள்ளார்.

உடனே அவர் இந்த விடயத்தை கிராம சேவகரிடம் சொல்லி முறையிட, "நீங்கள் போய் பொலிஸில முறைப்பாடு செய்யுங்கோ" என ஆலோசனை வழங்கினார் கிராம சேவகர். பின்னர் ஓட்டோ ஒன்றில் சிறுவனும், தாயாரும், சகோதரியும் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யப் புறப்பட்டனர். அப்போதுதான் இந்த விடயம் துஷ்யந்தனுக்கு தெரியவர, தன் நண்பர் ஒருவரை அழைத்துக் கொண்டு கிரன்ராஜ் வீட்டுக்கு சென்றார். ஆனால் அப்போது அவன் வீட்டில் இருக்கவில்லை. "உங்கட பெடியனால ஊரில ஒரே பிரச்சினை. வளர்க்கிறதெண்டால் பெடியனை ஒழுங்கா வளருங்கோ" என கிரன்ராஜின் தாயாரிடம் கோபமாகக் கூறிவிட்டு அங்கிருந்து தன் நண்பரோடு சென்றுவிட்டார் துஷ்யந்தன். அதன் பின்னர் துஷ்யந்தனும், நண்பரும் வேறு வேறு பக்கமாக தத்தம் அலுவலைப் பார்க்கப் புறப்பட்டனர்.

ஆனால் துஷ்யந்தனின் நண்பரின் கண்ணில் தற்செயலாக அகப்பட்டான் ஜீவராஜ். சிறுவனை அடித்தவர்களில் அவனும் ஒருவன். " பத்தாம் வீட்டுத் திட்டத்தில இருந்து இஞ்ச வந்து சின்னப்பிள்ளையளுக்கு அடிக்கிறியோ?" என்று கேட்டு, லேசாக 'கவனித்து' அனுப்ப, அவன் ஓடத் தொடங்கினான்.

### போகச் சொன்னது மருத்துவமனைக்கு; சென்றதோ துஷ்யந்தன் வீட்டுக்கு!

இதற்கிடையில் சிறுவனை இருவர் தாக்கிய முறைப்பாடு தொடர்பில் விசாரிக்க வட்டக்கச்சிக்குள் வந்தனர் பொலிஸார். அவர்களுக்கு கிரன்ராஜ் வீட்டை துஷ்யந்தனே அடையாளம் காட்டி உதவிவிட்டு, பிறந்தநாள் அலுவலைப் பார்க்கச் சென்றுவிட்டார். பொலிஸார் சென்றபோதும், கிரன்ராஜ் அங்கிருக்கவில்லை. "ஆளை பொலிஸ் ஸ்ரேசனுக்கு கூட்டியாங்கோ. விசாரிக்க வேணும்"

சொல்லிவிட்டு பொலிஸார் போய்விட்டனர். அதன் பின்னர் கிரன்ராஜை அழைத்துக் கொண்டு அவரது தந்தை பொலிஸ் நிலையம் சென்றார். அங்கு விசாரணை முடிந்து அன்று மாலையே வீடு திரும்பினர்.

ஆனால் சிறுவனைத் தாக்கியவர்களில் மற்றொருவரான ஜீவராஜ் புத்திசாலித்தனமாக தன்னைத் தேடி பொலிஸ் வரமுதலே , தானாகவே அங்கு சென்றார்.

" எனக்கு அடிச்சுப் போட்டாங்கள்" என்று அவர் ஒரு முறைப்பாடு செய்யப்போக,

"அப்பிடியெண்டால் முதல்ல கிளிநொச்சி ஹொஸ்பிட்டலுக்கு போய் மெடிக்கல் ரிப்போர்ட் எடுத்துக் கொண்டு வாங்க" என்று பொலிஸ் தரப்பால் அறிவுறுத்தப்பட்டு, அங்கிருந்து அனுப்பப்பட்டனர். ஆனால் அவன் மருத்துவமனைக்கு செல்லாமல், தன் தாயாரோடு துஷ்யந்தனின் வீட்டுக்குச் சென்றான். அவன் சென்ற சில கணங்களிலேயே சொல்லிவைத்தாற் போல, கிரன்ராஜும் தன் அண்ணனோடு அங்கு வந்து சேர்ந்தான். அப்போதுதான் தற்செயலாக அங்கு வந்த துஷ்யந்தன் அவர்களை வெளியேற்ற முனைய, கிரன்ராஜ் மறைத்து வைத்திருந்த கத்தியால் துஷ்யந்தனைக் குத்திவிட்டு தப்பியோடியிருந்தான்.

### தப்பித்த கொலையாளி

கிரன்ராஜ் தப்பித்தபோதும், அவனை ஏற்றி வந்த அண்ணன் அங்கிருந்தவர்களிடம் மாட்டிக்கொண்டான். அவனை ஒரு மரத்தோடு கட்டி வைத்தனர் ஊரவர்கள்.

மூத்த மகனை மீட்க அங்கு வந்து சேர்ந்த கிரன்ராஜின் தந்தை ஊரவர்களோடு முரண்படத் தொடங்கினார். சிலரைக் கடிக்கவும் செய்தார். இந்த அமளிக்கிடையில் துஷ்யந்தனின் நண்பர் ,

" "பத்தாம் வட்டார பெடியனுனை (ஜீவனை) கலைச்சது நான் தான். துஷ்யந்தன் அடிக்கேலையே. பிறகேன் அவன்ர வீட்ட வந்து சண்டை பிடிச்சனியள்?" என்று கேட்க, அதற்கு கிரன்ராஜின் தாயார் ,

"அடுத்தது நீ தான்" என்று திமிரோடு சொல்லியிருக்கிறார். அப்படி அவர் சொன்ன பதில் அங்கிருந்தவர்களை இன்னும் ஆத்திரமூட்டியது.

கிரன்ராஜ் ...ன் அங்கிருந்த ஒருவர் போனில் தொடர்பு கொண்டார்.


"உன்ர அப்பாவையும் அண்ணாவையும் பிடிச்சு வச்சிருக்கிறம். நீ வந்தால் தான் விடுவம். எங்க நிற்கிறாய்?" எனக் கேட்க "நான் பன்னங்கண்டியில நிக்கிறன். நீங்கள் புடுங்கிறத புடுங்குங்கோ" என்று கூறிவிட்டு அவன் போனைக் 'கட்' பண்ணிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டதால் கொலை!

## அந்தரிக்கும் குடும்பம்

## பற்றியெரிந்த வட்டக்கச்சி



## பக்கச் சார்பாக நடக்கும் பொலிஸ்

### ஒளிந்தது எங்கே?

ஆனால் கிரன்ராஜ் பன்னங்கண்டிக்கு போகவில்லை. அவன் வட்டக்கச்சியில் தான் பதுங்கி இருந்துள்ளான். துஷ்யந்தனைக் குத்திவிட்டு, அப்படியே தனக்கு நெருக்கமான ஒருவரின் வீட்டுக்கு ஓடிச் சென்றுள்ளான் கிரன்ராஜ். ஒரு கையில் செருப்பும், களைப்புமாக போய்ச் சேர்ந்த கிரன் ராஜ், " "நான் துஷியனைக் குத்திப் போட்டன் " என்று சொல்லியிருக்கிறான்.

" அவனைக் குத்திப் போட்டு ஏன் இஞ்ச வாறாய்?" என்று அவர்கள் விரட்டியதாகவும், அதனால் அங்கிருந்து அவன் சென்றுவிட்டதாகவும் அந்த வீட்டார் சொல்கிறார்கள். ஆனால் அன்றிரவு வரை அந்த வீட்டில் ஒளித்திருந்துவிட்டே , மறுநாள் பொலிஸில் கிரன்ராஜ் சரணடைந்தான் என்று அடித்துச் சொல்கிறார்கள் ஊரவர்கள் சிலர். அதேசமயம் வேறொரு வீட்டில் தங்கி விட்டே அவன் பொலிஸில் சரணடைந்தான் என்றும் இன்னொரு தரப்பு சொல்கிறது.

### முன்னரே பகை

கிரன் ராஜுக்கும் துஷ்யந்தனுக்கும் இடையில் முதலே சில முரண்பாடுகள் இருந்துள்ளன, வெளிநாட்டில் உள்ள உறவினர் ஒருவரின் காணியை துஷ்யந்தன் பராமரித்து வந்துள்ளார். அந்தக் காணியில் இருந்து தேங்காய்களை கிரன்ராஜின் தம்பி பலமுறை திருடியதாகவும், அதைக் கண்டுபிடித்த துஷ்யந்தன் ஒரு சில தடவைகள் அவனை அடித்து கலைத்ததாகவும் ஊரவர்கள் சொல்கின்றனர். ஆனால் அதைவிட இன்னொரு முரண்பாடும் உண்டு. அது கிரன்ராஜுக்கு உள்ள போதைப்பழக்கத்தால் உண்டானது. கிரன்ராஜ் கஞ்சா ,கசிப்பு என்பவற்றுக்கு இந்த வயதிலேயே அடிமையான ஒருவன். இதனால் குற்றச் செயல்களில் ஈடுபட்டு அதனால் பல தடவை பொலிஸ் நிலையத்துக்கும் சென்றுவந்தவன்.

வட்டக்கச்சியில் பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றுள்ளது. பெயருக்குத்தான் அது பல்பொருள் விற்பனை நிலையமே தவிர, அங்கு கஞ்சா, கசிப்பு என்பவற்றின் விற்பனைதான் அமோகம். அங்கு அத்தியாவசிய பொருட்கள் இல்லாவிட்டாலும் கூட, கட்டாயம் கசிப்பும் கஞ்சாவும் தேவையானளவு இருக்கும் என்கிறார்கள் அவ்வூர் மக்கள். இந்தச் சட்டவிரோத நடவடிக்கை தடையாக இருந்தவர்களில் துஷ்யந்தன் முதன்மையானவர். அந்தக் கடைக்கு பலமுறை சென்று "இப்பிடியான எளிய வேலையள் செய்து ஊரைக் கெடுக்காதீங்கோ. எல்லாத்தையும் நிப்பாட்டுங்கோ " என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.ஆனால் அவரது எச்சரிக்கையை போதை வியாபாரத்தில் ஈடுபடும் தரப்பு கண்டு கொள்ளவேயில்லை. அவர்களுக்கு 'மேல்மட்ட' செல்வாக்கு இருப்பதாலேயே, எந்தவித தங்குதடையும் இல்லாமல் இப்போதும் போதை வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர் என்ற சந்தேகம் ஊர் மக்களுக்கு நிறையவே உண்டு.

ஒருமுறை கசிப்பு உற்பத்திக்கு எதிராக அவ்வூர் இளைஞர்கள் களமிறங்கினர். ஆனால் அவர்களில் ஒருவர் மீது முகத்தை மறைத்தபடி வந்த மூவர் வாளால் வெட்டித் தாக்கினர். ஆனால் தாக்குதலாளிகள் வந்த மோட்டார் சைக்கிளை ஊர்க்கூர இளைஞர்கள் கண்டுபிடித்து விட்டனர். அந்தக் கசிப்பு வியாபாரக் கடைக்காரரின் மோட்டார் சைக்கிள் தான் அது. எனவே பதிலடியாக, அடுத்த நாள், கடை என்ற பெயரில் இயங்கி வந்த போதைப்பொருள் விற்பனை நிலையத்துக்கு வந்த கடைக்காரர் இளைஞர் குழுவால் வெட்டப்பட்டு, படுகாயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வெட்டிய இளைஞர்கள் பின்னர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இப்படி வெட்டிய பின்னரும் அந்தக் கடையில் கசிப்பு, கஞ்சா விற்பனை அமோகமாக நடக்கவே செய்கின்றது. இந்தக் கடையில் அதிக நேரம் நிற்பவர்களில் கிரன்ராஜும் ஒருவன். போதை விற்பனை செய்பவர், கள்ளமண் ஏற்றும் சட்டவிரோதக் காரியத்திலும் ஈடுபடுகின்றார். அந்த வேலைக்குத்தான் கிரன்ராஜ் சென்றுவந்து கொண்டிருந்தான். எனவே போதைப்பொருள் வியாபாரத்துக்கு எதிராகச் செயற்பட்ட இளைஞனை எப்படி ஆளை வைத்து வெட்டினார்களோ, அதேபோன்று தமக்கு தடைக்கல்லாக இருக்கும் துஷ்யந்தனையும் கிரன் ராஜை வைத்து போதை வியாபாரிகள் கொன்றிருக்கலாம் என்பதே ஊரவர்களின் சந்தேகமாக இருக்கின்றது. அதற்கு அவர்கள் ஒரு ஆதாரத்தையும் சொல்கிறார்கள். துஷ்யந்தனைக் குத்துவதற்காக கிரன்ராஜ் கொண்டு வந்த கத்தி, அவனுடையது அல்ல, அந்தக் கத்தி போதைப்பொருள் வியாபாரியுடையது.

### கொலைக்கத்தி!

துஷ்யந்தனைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட கத்தி சாதாரணமாக கடைகளில் வாங்குவதைப் போன்றதல்ல. இரு பக்கமும் கூரானதாகவும் ஒரு பக்கத்தில் விளிம்புகள் கொண்டதாகவும் இருக்கும். ஒருவரது உடலில் 'குத்தி இழுக்கும் போது,உடலின் உட்புறத்தில் கொழுவி அறுத்துக்கொண்டு வரக்கூடியது. "இரண்டு பக்கமும் பயங்கர கூரான கத்தி தான் வச்சிருந்தவன்" என கிரன்ராஜின் சகோதரன் , சிலருக்கு கூறியுள்ளான். .அந்தக் கத்தி போதைப்பொருள் வியாபாரியுடையது என்றும் அவன் சொல்லியிருக்கிறான்.

கிரன் ராஜ் சரணடைந்த போதும், கொலை செய்யப் பயன்படுத்திய கத்தி இதுவரை மீட்கப்படவில்லை.

" கத்தியை எடுத்துவிட்டீர்களா?" என துஷ்யந்தனின் குடும்பத்தினர் பொலிஸாரிடம் கேட்டபோது,

"அவன் எறிஞ்சிட்டு போக, ஆரும் எடுத்திருப்பினம். அவன் குத்தினதுக்கு சாட்சி இருக்கு தானே. பிறகேன் கத்தி?" என அலட்சியமாகப் பதில் சொல்லியிருக்கின்றனர் பொலிஸார்.

குற்றம் நடந்தால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்ட பின்னரோ அல்லது சரணடைந்த பின்னரோ சந்தேகநபரை கூட்டிவந்து தாக்குதலிற்கு பயன்படுத்திய ஆயுதம், தடயப் பொருட்கள் என்பவற்றை மீட்பது வழமை. ஆனால் துஷ்யந்தன் கொலை விசாரணையில் பொலிஸார் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கத்தியை மீட்க பொலிஸார் ஏன் ஆர்வம் காட்டவில்லை? எல்லாம் 'கடவுளுக்கே' வெளிச்சம்.

- ஜீவன் ராஜ் வந்த அதேசமயத்தில் கிரன்ராஜும் அங்கு வந்தது எப்படி? அப்படியானால் எல்லாமே திட்ட மிடப்பட்டு நடந்த கொலையா இது?
- சந்தேகநபர் கொலை செய்வதற்கு பயன்படுத்திய கத்தி தொடர்பில் பொலிஸார் அக்கறை காட்டாதது ஏன்?
- இந்தக் கொலை தனியே அன்றைய முரண்பாட்டில் அடிப்படையில் நடக்கவில்லை எனவும், போதைப்பொருளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததாலேயே அவர் கொல்லப்பட்டார் என்றும் ஊரவர்கள் சொல்கிறார்கள். அந்தக் கோணத்தில் ஏன் இன்னும் பொலிஸார் விசாரிக்க வில்லை?
- கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தியின் சொந்தக்காரர் என்று சொல்லப்படும் . கசிப்பு, கஞ்சா விற்பனையில் ஈடுபடும் நபரை இன்னும் கைது செய்து விசாரணை செய்யாதது ஏன்?

### பொலிஸ் அராஜகம்

துஷ்யந்தன் உயிரிழந்து ஐந்தாவது நாள் பொலிஸாரின் வாகனம் வட்டக்கச்சிக்குள் புகுந்தது. கொலை செய்தவரின் தாயார், தந்தை, தமையனும் கைது செய்யப்பட்டிருந்ததால் அவர்களின் வீடு ஆளரவமற்று பூட்டப்பட்ட நிலையில் இருந்தது. அந்த வீட்டுக்கு முன்னால் பொலிஸ் வாகனம் அவந்து நிற்க , என்ன, ஏதென்று அறிய அங்கு சென்ற ஊர்மக்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

பொலிஸ் வாகனத்தில் இருந்து கிரன்ராஜின் தாத்தாவும், பாட்டியும் இறங்கி, வீட்டுக்குள் இருந்த கிரன்ராஜின் பாஸ்போர்ட் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை எடுத்துச் செல்ல முயன்றனர். அப்படி நடந்து கொண்டது ஊர் மக்களுக்கு பல சந்தேகங்களை தோற்றுவிக்க ,அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். ஆனால் பொலிஸாரோ சந்தேகநபருக்கு சார்பாக நடக்கத் தொடங்கினர். ஊர் மக்கள் மீது, குறிப்பாக கொலையுண்ட துஷ்யந்தனின் மனைவி மீது தாக்குதல் நடத்த அவர் மயங்கிச் சரிந்தார். அப்படி பொலிஸார் அராஜகமாக நடந்து கொள்ள, மக்களின் கோபக்கனல் இன்னும் உக்கிரமானது. அந்தக் கோபத்தோடு கிரன்ராஜின் வீட்டுக்கு தீ வைத்தனர் மக்கள். எனினும் பொலிஸார் தீயை அணைத்து விட்டனர்.

இப்போது, கிரன் ராஜின் பெற்றோர் பிணையில் விடுவிக்கப்பட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்து தங்கியுள்ளனர். ஆனால் இன்னமும் வட்டக்கச்சியில் உள்ள கிரன்ராஜின் வீட்டுக்கு தீ வைத்தது யார்? என்று அடிக்கடி அங்கு சென்று விசாரிக்கும் பொலிஸார், கொலையாளி பயன்படுத்திய கத்தியை மீட்பதில் பாராமுகமாகவே இருக்கின்றனர்.

### தடுப்பார்களா உரியவர்கள்?

கிளிநொச்சியில் அண்மைக்காலமாக பெருகிவரும் குற்றச்செயல்களின் பின்னணிக் காரணியாக இருப்பது, கஞ்சா , கசிப்பு, ஹெறோயின் போன்ற போதைப்பொருள் விற்பனையும் பாவனையுமே. அதேபோல் கள்ளமண் வியாபாரமும் குற்றச்செயல்களுக்கான இன்னொரு காரணம். இவற்றைக் கட்டுப்படுத்தினாலே பெருமளவு குற்றங்கள் குறைந்துவிடும்.

ஆனால் இவற்றைத் தடுக்க வேண்டிய அதிகாரிகளுக்கும், சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கும் இடையே சில 'கொடுக்கல் வாங்கல்' உறவுகள் இருப்பதால் , அவர்கள் கண்டும் காணாமல் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சில அதிகாரிகள் லீசிங்கில் வாங்கிய வாகனங்களுக்கு , இந்த சட்டவிரோதிகளே மாதாந்தத் தவணைப்பணத்தைக் கட்டுகிறார்களாம்.

இதனால் எல்லாவற்றையும் கண்டும் காணாமல் இருப்பதால், குற்றங்களின் தேசமாக கிளிநொச்சி குறிப்பாக வட்டக்கச்சி மாறி வருகின்றது. அதிகாரிகள் சரியாகச் செயற்பட்டு குற்றங்களை அடக்கியிருந்தால் , துஷ்யந்தன் போன்ற இளம் குடும்பஸ்தரின் உயிர் பறிபோயிருக்காதே! அவரின் குடும்பத்தின் எதிர்காலம் இருண்டிருக்காதே!! இனியும் இதுபோல அப்பாவிகளின் உயிர்களைக் காவு கொடுக்காமல், உரியவர்கள் மனச்சாட்சிப்படி கருமமாற்றி, குற்றங்களை ஒடுக்க வேண்டும். நடக்குமா அது?

### சந்தேகங்கள்

- தன்னை அடித்ததாகப் பொலிஸில் முறைப்பாடு செய்துவிட்டு ஜீவன்ராஜும், தாயாரும் மருத்துவமனைக்கு போகாமல் ஏன் துஷ்யந்தன் வீட்டுக்கு வந்தனர்? உண்மையா [illegible] ஜீவன்ராஜுக்கு துஷ்யந்தன் அடிக்கவில்லை. அப்படியிருந்தாலும் அடித்தவரின் வீட்டுக்குத் தானே போயிருக்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
09 மே 2021

# தனிமையின் தீராப்பக்கங்கள்



இயல்வாணன்




ம.பா. மகாலிங்கசிவம்

இலங்கையில் போரால் விதவையானவர்கள் இருதரப்பிலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுடன் விபத்து, நோய்கள், விவகாரத்துப் போன்றவற்றால் கணவனை இழந்தவர்களும் சேரும் போது இந்த எண்ணிக்கை மேலும் பல மடங்காக அதிகரிக்கவே செய்யும்.

இத்தகைய விதவைகள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளோ பல வகைப்பட்டவையாக உள்ளன. வறுமை, பாதுகாப்பின்மை, பாலியல் ரீதியான சுரண்டல்கள் ஒரு புறம்.

வாழ்வின் வசந்தங்களை, இன்பங்களை அனுபவித்துத் திளைத்து விட்டுத் திடீரென ஒரே நாளில் எதுவுமற்ற வெறுமை, இவற்றினிடையே அல்லாடும் துயரம் தோய்ந்த தனிமையான வாழ்க்கை விதவை வாழ்க்கை அவர்களின் 'தனிமையின் தீராப் பக்கங்கள்' என்ற கவிதை உயிர்த்துடிப்போடு வெளிப்படுத்துகிறது.

இந்த இரவில்
தனிமையின் தீராப் பக்கங்களை
அவள் எழுதிக் கொண்டிருந்தாள்.

வாழ்வு காற்றெனவானது.
காலமுழுதும் வீசியாடுவது

தென்றலாய் வீசிப் பின்
புயலெனச் சுழன்றடித்து
ஓய்ந்து நீள்வது.

வசந்தங்களைத் தந்து
பிடுங்கிச் சுழல்வது.

இலைகள் உதிரும் காலத்தைப்
பரிசளித்து மறைவது.

ஒவ்வொரு இரவிலும்
உதிர்கின்றன இலைகள்.

தனிமையின் பக்கங்களில்
நிறைகின்றன
ஏக்கங்களும் துயரங்களும்.

சபிக்கப்பட்ட வாழ்வு குறித்தான
பாடல்களைக் கடந்தாயிற்று.
இன்றைய இரவு கொடுமையானது!
இனிவரும் இரவுகளும் அவ்வாறே.

ஒற்றைப் புரவியில் வரும்
இராஜகுமாரர்கள்
காணாமல் போகும் செய்தியுடன்
காலைகள் விடிகின்றன.

தூக்கம் மறவாக் குழந்தைகளின்
சலனமற்ற முகங்களில்
நாளைய கனவுகள் நெளிகின்றன.

புதிரான வாழ்வின் முடிச்சை
அவிழ்க்கும் வகையற்று
தலையணையில்
கண்ணீர் உறைகிறது.

தனிமையின் தீராத பக்கங்களை
அவள் தொடர்ந்தும் எழுதிக்
கொண்டிருக்கிறாள்.

என்று காத்திருக்க விடிவதற்கான அறிகுறியான சேவல் கூவும் ஒலியைக் கேட்கவில்லையே. சேவலின் வாயுள் மண் அடைத்துக் கொண்டதோ?

ஊழிக் காலம் எல்லாம் திரண்டு தான் இரவுப் பொழுது நீண்டதோ சூரியனும் தேரும் பாதாளத்துள் உருண்டு விட்டனவா? என்று காதலி இரவை எண்ணி புலம்புகிறாள். தற்காலிகமாக காதலனை பிரிந்த பெண்ணுக்கே இந்த நிலை என்றால் நிரந்தரமாக கணவனை பிரிந்த பெண்ணின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கும். இயல்வாணன் வாழ்க்கையை மரமாகவும் இன்ப துன்பங்களை காற்றாகவும் படிமப்படுத்தி பெண்ணின் துயரை நுட்பமாக சித்திரிக்கிறார்.

*"வாழ்வு காற்றெனவானது*
*காலமுழுவதும் வீசியடுவது*
*தென்றலாய் வீசி பின்*
*புயலென சுழன்றடித்து*
*ஓய்ந்து நீள்வது*
*வசந்தங்களைத் தந்து*
*பிடுங்கிச் செல்வது"*

சுண்ணாகத்தில் பிறந்தவர் இயல்வாணன். இவரது இயற்பெயர் சு. ஸ்ரீகுமரன். சங்கிலிகுமாரன் பத்ம மகன், ஏகலைவன், சிநேகன், விழிச்சான் குஞ்சு முதலிய பல புனைபெயர்களில் எழுதியிருந்தாலும் இயல்வாணன் என்னும் புனைபெயரிலேயே அதிகம் அறியப்படுபவர். கவிதை, சிறுகதை, விமர்சனம், பத்திரிகைத்துறை, புகைப்படத்துறை முதலிய பல துறைகளில் தனது திறமையை வெளிப்படுத்தி வருபவர். 'சுவடுகள்' என்ற நாவலையும் 'அற்றுப் போன அழகுகள்' என்ற கட்டுக்கதைத் தொகுதி, 'செல்லையா தாத்தாவின் செல்லக் குழந்தைகளும்' என்னும் சிறுவர் நூல் என்பவற்றையும் வெளியிட்டவர்.

அடுத்து 'தனிமையின் தீராப் பக்கங்கள்' என்ற கவிதைக்குட் செல்வோம். "இந்த இரவில் தனிமையின் தீராப்பக்கங்களை அவள் எழுதிக் கொண்டிருந்தாள்" எனக் கவிதை தொடங்[illegible] கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்க்கை [illegible] இருந்தாலும் இரவுப் பொழுது [illegible]

இலைகள் உதிரும் காலத்தை பரிசளித்தும் மறைவது என்னும் பகுதி குறித்த விதவைப் பெண் கணவனுடன் மகிழ்ச்சியாக இருந்த வசந்த காலத்தையும் கணவனை இழந்த இலையுதிர் காலத்தையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

*"ஒவ்வொரு இரவிலும்*
*உதிர்கின்றன இலைகள்* என்னும் பாடலடிகள் ஒவ்வொரு இரவிலும் இழந்து போகின்ற இளமையை தனிமைத்துயர் நிறைவேறாத ஏக்கங்கள் எனப் பல தளங்களில் பொருள் தருகின்றன.

ஒற்றைப் புரவியில் வரும் இராஜகுமாரர்கள் காணாமல் போகும் செய்தியுடன் காலைகள் விடிகின்றன என்னும் பாடற்பகுதி சிக்மன் பிறைட்டின் உளப் பகுப்புக் கொள்கையை நினைவூட்டுகின்றது. ஆஸ்திரிய உளவியலாளரான சிக்மன் பிறைட் மனிதனின் எல்லா செயற்பாடுகளுக்கும் பால் உணர்வு தொடர்பான உந்தல்களே அடிப்படையாக இருக்கின்றன எனக் கூறினார்.

ஹிஸ்ரீரியா நோயினால் பாதிக்கப்பட்ட திருமணமாகாத முதிர்கன்னிகள் பற்றி ஆய்வு செய்த இவர் பெரும்பாலான எல்லா பெண்களின் கனவுகளிலும் பாம்பு அடிக்கடி வருவதை அவதானித்தார்.

[illegible] தொடர்பான [illegible] இவைகண்ட [illegible] குறித்த பெண்களின் நிறைவேறாத பாலியல் [illegible] நிறைவேறும் [illegible] கனவு [illegible] நிறைவேறாத [illegible]

சிக்மன்பிறைட்டின் இக் கருத்து தமிழ் இலக்கிய உலகில் ஏற்கனவே இருந்தது என்பதை சோழர் காலத்தில் எழுந்த கலிங்கத்துப் பரணி காட்டுகிறது.

*"எனது அடங்க இனி வளவதுங்கள் அருள்*
*என மகிழ்ந்து இரவு கனவிடை*
*தன தடங்கல் மிகை நகநுடந்த குறி*
*தடவுவீர் கதவம் திறமினோ"* என்னும் பாடலில் இவ்விடயத்தைக் காணலாம். சோழ மன்னன் மேல் காதல் கொண்ட சோழநாட்டுப் பெண்கள் அவனுடன் கூடுவதற்கு விரும்புகின்றனர். ஆனால் அது நடக்கவில்லை. அந்தக் கவலையை தீர்ப்பது போல் இரவில் சோழ மன்னன் கனவில் வந்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்துகிறான். அவன் வந்தது கனவிலா? நனவிலா? என்று அறிய அவர்கள் தமது மார்பகங்களில் சோழனின் நகங்களால் ஏற்பட்ட காயங்கள் இருக்கின்றனவா எனத் தடவிப் பார்க்கின்றனர் எனப் புலவர் காமத் தணிப்புக்கான வாயிலாக கனவை முன்வைக்கிறார்.


இக்கவிதையிலும் கவிஞர் இயல்வாணன் ஒற்றைப் புரவியில் வரும் இராஜகுமாரர்கள் காணாமல் போகும் செய்தியுடன் காலைகள் விடிகின்றன என்பதை ஊடாக கனவில் அவர்களின் பாலியல் தேவைகள் நிறைவுசெய்யப்படுவதையும் கனவு கலைந்தவுடன் நிஜத்தில் தனிமையும் ஏமாற்றமுமே எஞ்சுவதையும் காட்டுகின்றது.

*தூக்கம் மறவா குழந்தைகளின்*
*சலனமற்ற முகங்களில்*
*நாளைய கனவுகள் நெளிகின்றன* என இன்னொரு புறம் தாயின் தாபங்கள் துயரங்கள் எவற்றையும் அறியாத குழந்தைகள் பற்றிய படிமத்தை முன்வைக்கிறார். எனவே இயல்வாணனின் கவிதை ஒரு புறம் தனிமைத்துயருடன் கூடிய விரகதாபத்துக்கும் மறுபுறம் எதிர்கால நம்பிக்கையான குழந்தைகளின் கடமைக்கும் இடையே ஊசல் ஆடும் [illegible]தலைவியின் நிலையை அழகுபட [illegible] சித்திரிக்கின்றது எனலாம்.



## திருவள்ளுவரின் தேநீர்க்கடை

இ.சு.முரளிதரன்




15

உடலின் தலைமைச் செயலகமாக மூளை அமைகின்றது. கரு உருவான மூன்றாவது வாரத்தில் புள்ளியாகத் தோன்றி, இருபது வயதிலே மொத்த வளர்ச்சியையும் நிறைவு செய்துவிடுகின்றது. தலைமுடி, தோல், மண்டையோடு, மெனின்ஜெஸ் போர்வை, மூளைய முண்ணான் பாய்பொருள் என்னும் ஐந்தடுக்குப் பாதுகாப்போடு அமைகின்றது. மூளையம், மூளி, நீள்வளைய மையவிழையம், முண்ணான் எனப் பல பகுதிகளைக் கொண்டமைகிறது. முண்ணானிலிருந்து 31 சோடி நரம்புகள் உடல் முழுவதும் செய்திகளைப் பரிமாறுகின்றன.

இடுப்பிலிருந்து வேட்டியானது நழுவும் போது, உணர்ச்சி நரம்பானது கணத்தாக்கத்தைப் பெற்று மைய நரம்புத் தொகுதிக்குக் கடத்துகிறது. இத்தருணத்தில் இடைத்தூது நரம்புக்கலத்துடன் நரம்புப்பிணைப்பு நிகழ்கிறது. கணத்தாக்கமானது இயக்க நரம்புக்குக் கடத்தப்பட, இயக்க நரம்பானது கையிற்குக் கட்டளையை அனுப்புகிறது. உடனே கை சென்று வேட்டியினைப் பிடித்துக் கொள்கிறது. இச்செய்திப் பரிமாற்றப் படிநிலைகள் மிகமிக வேகமாக நடந்துவிடுகின்றன.

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு"**

என 788 ஆவது குறட்பாவில், நண்பனுக்குத் துன்பம் நேரும் போது, இடுப்பில் ஆடை நழுவக்கை சென்று தடுப்பது போன்ற வேகத்திலே உதவி புரிய வேண்டும் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஆடை நழுவும் போது கை வந்து மானங்காத்த வேகமான செயற்பாட்டினை, நட்புக்கான உதவியோடு திருவள்ளுவர் பிணைந்துள்ளமை அற்புதமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிஞ்சு தூரிகைகள்



ச.கபிசன்,
கிளி/கிளிநொச்சி
இந்து ஆரம்பப் பாடசாலை.
அ.இல.117




ச.கபிசன்,
கிளி/கிளிநொச்சி
இந்து ஆரம்பப் பாடசாலை.
அ.இல.117







# அன்பின் மதிப்பு

குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய்வாய்ப்பட்டு, பல நாள்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான். அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன.

அவன் மன்னனிடம், "அரசே........உங்கள் உடல் தேறவேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்துமாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்கு பரிசாக அளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப் போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்த பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங்கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான். அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது" என்று கூறினான். எமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.

**மின்மினி**



# அம்மா!

பத்து மாதம் என்னை
உற்ற கருவில் சுமந்து
என்னை பெற்றுப் பாலூட்டி
சீராட்டி வளர்த்தபோது
நான் வளர்ந்து பரீட்சையில்
சாதித்த வேளையில்,
தெரியுதே அம்மாவின்
ஆனந்த கண்ணீரிலும்
மகிழ்ச்சி!

**செ.ஷஸ்டிகா**
*தரம் 06*
*யா/வேம்படி மகளிர்*
*உயர்தரப் பாடசாலை*



# சோதனைகளே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும். இரவுதான் வீட்ட போய்ச் சாப்பிடேலும். கிடைக்கிற நேரத்தில அத்தானோட வேலைக்குப் போறது. படிக்கிறதுக்கு நேரம் குறைவு. தூர இடங்களுக்கு ஹன்ரர்களில சில வேளையில வேலைக்குப் போவம். அப்பிடிப் போகேக்க ஹன்ரருக்கு இருந்து சில நேரம் படிப்பன். ஸ்கூல் படிப்பும், ரியூசன் படிப்பும் மட்டும்தான். அதால முதல் தரம் 'ஏ.பி.சி' தான் ரிசல்ட் வந்தது. மாவட்ட நிலை 192' என்கிறார் பார்த்தீபன்.

பார்த்தீபனின் நிலையறிந்து அவனுக்கு தனியார் கல்வி நிறுவனம் முழுமையாக உதவி புரிந்தது. இந்த நிலையில் இரண்டாம் தரம் படிக்க அவனது அத்தான் அனுமதிகொடுத்தார். இரண்டாவது தடவை பரீட்சைக்கு தோற்றும்போதும் பழைய நிலைதான். தனியார் கல்வி நிறுவனத்தில் மாத்திரமே படிப்புக்கு நேரம். எஞ்சிய நேரத்தில் கூலி வேலை. முதல் தடவையை விட இப்போது அதிக வேலை. பொருளாதாரச் சுமையை தாங்கவேண்டிய கட்டாயம். அதையும் தாக்குப்பிடித்துக் கொண்டு கற்றான். இரண்டாவது தடவை தோற்றியபோது 'ஏ 2பி' பெறுபேறு கிடைத்தது. ஆனால் மாவட்ட நிலை 54. தேசிய நிலை 972.

'ரீயூசனில இலவசமாகத்தான் படிப்பிச்சவ. இலவசமா படிக்கிறாக்கள கூட கவனிப்பினம். மார்க்ஸ் குறையேக்க கேப்பினம். "கொஞ்சநாள்தான் படிச்சுப்போட்டு வேலைக்குபோ. இடையில குழப்பாதை" எண்டு சொல்லிச்சினம். அதை வீட்ட சொல்லேலாது. நான் வேலைக்குப் போனன். அதால நல்ல ரிசல்ட் இரண்டாம் தரத்திலும் எடுக்கேலாம போய்ட்டு' என்றான்.

பெறுபேறு வரும்போதும் கல் அரியும் இடத்தில் வேலை செய்து கொண்டிருந்தான் பார்த்தீபன். குடும்ப வறுமைச் சூழல் அவனது வாழ்க்கை அதிகமாகவே தடம் புரட்டியிருந்தது. வேலையில்லாவிட்டால் வாழ்க்கை இல்லை என்ற நெருக்குவாரம். இரண்டாம் தரப் பரீட்சைப் பெறுபேற்றை இலவசமாக கற்பித்த தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்குச் சொல்லப் போனபோது, மருத்துவபீடம் கிடைப்பது கடினம். அதனால் மீண்டும் படிக்க அறிவுறுத்தினார்கள். பார்த்தீபனின் நிலை தெரியும் என்பதால், தனியார் கல்வி நிலையத்திலேயே தங்கிப் படிக்க வாய்ப்பளித்தார்கள். ஆசிரியர்களின் ஓய்வு அறை அவனது தங்குமிடமாகியது.

'குமரன் சேர், குகன் சேர், டயஸ் சேர் மூன்றாம் தரம் எடுக்கச் சொன்னவை. அங்க தங்கியிருந்து படிக்கச் சொன்னவ. நான் அங்க தங்கியிருந்தனான். சாப்பாடு எல்லாம் அவையோடதான். முழுமையா படிக்கக் கூடியதா இருந்தது. வேலைக்கு போகேல்ல' என்றான். கல்வியே சதா சிந்தனையாக கற்றதால் மூன்றாம் தடவை தோற்றி '3 ஏ' பெறுபேறு. மாவட்ட நிலையில் முதலாம்

> **பெறுபேறு வரும்போதும் கல் அரியும் இடத்தில் வேலை செய்து கொண்டிருந்தான் பார்த்தீபன். குடும்ப வறுமைச் சூழல் அவனது வாழ்க்கை அதிகமாகவே தடம்புரட்டியிருந்தது. வேலையில்லாவிட்டால் வாழ்க்கை இல்லை என்ற நெருக்குவாரம்.**

இடம். தேசிய ரீதியில் 34ஆவது இடம்.

வறுமை போர் இழப்பு என்று எல்லாம் வதைக்கும்போது அவனுக்கு துரதிர்ஷ்டமும் சேர்ந்து உதைத்தது.

இரண்டாவது தரம் பரீட்சைக்குத் தோற்றிக் கிடைத்த பெறுபேறு போதாது என்று மூன்றாவது தடவை பரீட்சைக்குத் தயாராகி பரீட்சை எழுதிக் கொண்டிருந்தான் பார்த்தீபன். ஆங்கில பாடப் பரீட்சை முடிந்த அன்று, வெட்டுப்புள்ளி வெளியாகினது. இரண்டாவது தடவைப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் கிடைக்கின்றது. மூன்றாவது தடவை பரீட்சை எழுதிக்கொண்டிருந்தாலும், கிடைத்த வாய்ப்பை வீணாக்க விரும்பாமல் மருத்துவபீடத்துக்கு நுழைகின்றான். இப்போது அவன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன். மூன்றாவது தடவைப் பெறுபேற்றின் அடிப்படையில் கொழும்பு மருத்துவபீடத்துக்கு தெரிவாகியிருப்பான். ஆனாலும் அவனுக்கு அது கொடுத்து வைக்கவில்லை. மருத்துவராக வரவேண்டும் என்ற இலட்சியத்துக்கு பலரும் பல காரணங்கள் சொல்வார்கள். ஆனால் பார்த்தீபனின் காரணத்தில் ஓர் ஓர்மம் இருக்கின்றது. அமைதியான சுபாவம். மெல்லிய பேச்சுச் சத்தம். முகத்தில் வலிந்து அழைக்கும் சிரிப்பு. இப்படி இருக்கும் அவன், மருத்துவராக ஏன் வரவேண்டும் என்ற கேள்விக்கு தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு பதில் கூறினான்.

'நேசறிக் காலம் (முன்பள்ளி) எனக்கு நினைவில்லை. அந்தக் காலத்தில நாங்கள் எப்படி வளர்ந்தம் என்று நான் பெரிசா விசாரிப்பதில்லை. அம்மா கூட இருப்பா என்ற நம்பிக்கையிலதான் கேக்கேல்ல. (கண்கள் பனிக்கின்றன)'

'நான் 5ஆம் ஆண்டு படிக்கேக்கையே மருத்துவராக வரவேணும் என்று முடிவு செய்ததனான். எங்களிட்ட பேர்த் சேர்ட்டிப்பிக்கட்(பிறப்புச்சான்றிதழ்) தவிர வேற டொக்கியூமெண்ட் (ஆவணங்கள்) ஒண்டும் இல்லை. அதில அம்மாட பிறந்த இடம் பதுளை எண்டு இருந்திச்சு. அம்மாவைப்பற்றி அவ்வளவுதான் தெரியும். தன்னை அங்க இருந்து கடத்தி வந்தவை எண்டு அவா முந்தி சொல்லியிருக்கிறா. அம்மாட சொந்தக்காரர் பற்றி எதுவும் தெரியா. அவா பிறந்த இடம் பதுளை. அதை வைச்சு நான் தேடுறது எண்டா மருத்துவமனையிலதான் போய் தேடலாம். மருத்துவமனைக்கு போய் இன்னொரு மருத்துவரிட்ட கேட்டு தேடுறத விட, நான் மருத்துவராகினால் தேடலாம். அதாலதான் 5ஆம் ஆண்டு படிக்கேக்க மருத்துவராய் வரவேணும் என்று நினைச்சன். மருத்துவராகி என்ர அம்மான்ர பூர்வீகத்தை தேடுவன்' என்று உறுதியுடன் பதிலளித்தான் பார்த்தீபன். 'என்னை படிப்பிச்சது என்ர ஊர். வேலணை மேற்கு நடராஜா மகாவித்தியாலயத்தில் ஓ.எல். வரைக்கும் படிச்சன். வெளிநாட்டில இருக்கிற ஆக்கள் உதவி செய்து நடத்திய அமைப்பால என்ர படிப்புக்கு உதவி செய்தவை. நான் மருத்துவராகி என்ர ஊரிலதான் சேவை செய்வன்' என்று எதிர்கால இலட்சியத்தையும் கூறினான். பார்த்தீபனின் தாயாரின் பெயர் யமுனாதேவி. பிறந்த இடம் பதுளை. இவ்வளவு விவரங்கள் மாத்திரமே அவனுக்குத் தெரியும். அவன் தேடல் தொடர்கிறது, வாழ்வில் மட்டுமல்ல, தன் பூர்விகம் பற்றியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்துவான் பதில்கள்!

**வித்தூ... ஹொட்டல் சாப்பாடு நல்லதா?**
**சியாவன்**, துன்னாலை.

கிருமித் தொற்றில்லாத சுத்தமான சாப்பாடாக இருந்தால் சாப்பிடலாம். ஆனால் வீட்டுச் சாப்பாடே சிறந்தது.

**வித்துவானே ஊர் மாடு சவாரிக்கு உதவுமா?**
**பரமன், ஊரெழு**

ஒரு கைப் பாவனையாக இருந்தால் சவாரி செய்து பார்க்கலாம்.



**வித்தூ... மீசை நரைத்த பின்னரும் காதலிக்கின்றார்களே?**
கனகாம்பரி, அச்செழு.

மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கவில்லைப் போலும். நரை திரை விழக்கூடாத பகுதிகள் கம்பீரமாக இருந்தால் மீசையை எதற்குத் தூக்கிப் பிடிக்க வேண்டும்?.

**வித்ஸ் கண்ட பெண்ணைக் காதலிப்பவர் குறித்து?**
கஸ்ரோ, இணுவில்.

காணாத பெண்ணைக் காதலிப்பதை விடக் கண்ட பெண்ணைக் காதலிப்பது பரவாயில்லைத் தானே?

**வித்தூஸ்... வயதில் இளையவரைக் கைபிடிக்கலாமா?**
செவ்வந்தி, உடுவில்.

கல்யாணத்துக்கு வயது முட்டுக்கட்டையாக அமையாது. எனக்கென ஏற்கனவே பிறந்தவன் இவளா என மணமகன் பாட முடியும் அல்லவா?





**வித்துவான்! நீங்கள் நல்ல ஓட்ட வீரனாமே?**
தமிழரசி, துணுக்காய்.

இளம் வயதில் காதலியை அழைத்துக் கொண்டு வன்னிக்கு ஓடியதன் மூலம் சமூகத்துக்கு அதை நிரூபித்துள்ளேன்.

**மனிதனின் வெற்றி அவனது இரண்டு கைகளிலும்தான் உள்ளது என்பது உண்மையா?**
சுமோரியன், ஓட்டுமடம்.

ஆம் தமது தலைவிதியைச் சொந்தக் கைகளில் எடுத்துக்கொண்டவர்கள் தான் வாழ்வில் வெற்றி பெற்றுள்ளனர்.

**பத்திரிகைகளில் எந்த விசயத்தை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறீர்கள் வித்தூ...?**
அருணா, கொக்குவில்.

என்னது காந்தி செத்துட்டாரா? என்ற ரேஞ்சில இருக்கும் பழைய செய்திகளை பிரசுரம் செய்வதை தவிர்க்க வேண்டும்.

**வித்தூ... என்னுடைய நண்பன் ஒருவன் இலட்சணமான பெண்ணைத் தேடுகின்றானே?**
சுவர்த்திகன், உரும்பிராய்.

இலட்சணங்கள் வெளிச்சத்தில் தான் தெரியும். இருட்டுக்குள் தெரியாது என்று சொல்லுங்கள்.



# சொற்சிலம்பம் போட்டி

46

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | |
| | ■ | 6 | | 7 | | | ■ |
| 8 | 9 | | ■ | 10 | | ■ | 11 |
| 12 | | ■ | 13 | | | 14 | |
| ■ | 15 | 16 | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | ■ |
| 20 | | ■ | 21 | 22 | | ■ | 23 |
| | ■ | 24 | | | | | |

அனுப்புபவர் பெயர்:.....................................
முழுமையான தபால் விலாசம்: ...........................
.........................................................
கையொப்பம்:...............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. பிழைத்துப் போவது 4. பத்திரிகை தங்கியிருப்பது இவனில் 7. சுமத்தல் 8. ஒன்றாக்கு 9. மயானம் 10. காலில் அணிவது 12. கை 13. பாவனை/ நடனத்தில் அலங்கரிப்பு 15. புலவன் 16. இதைக் கண்டால் கடவுள் தெரியாது. கடவுளைக் கண்டால் இது தெரியாது. 17. அணி 18. கூ 20. பச்சு தரும் செடி 22. மீண்டு வரல் 23. இரும்பில் பிடிப்பது.

## மேலிருந்து கீழ்

1. பேய் 2. ஆசிரியன் 3. பூக்கொய்யும் கூடை. 5. அனைத்தும் 6. உடலின் மிகச் சிறிய அலகு/நீரில் நிலத்தில் அல்லது விண்ணில் பயணிக்கத்தக்க ஒரு வாகனம். 10. தலை 11. குதிரை 12. கொண்டை மீன் 13. தலைவன் 14. பட்டணம் 15. தலையை உடலோடு இணைப்பது. 17. சீடர்களை வழிப்படுத்துபவர் 19. உயிர்ப்பின் ஆரம்ப நிலை 20. தந்தம் 21. செல்வம்.

### சொற்சிலம்பம் போட்டி 44 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.விமரிசை, 4.சந்தி, 6.சாண், 7.வடம், 8.கடிதம், 10.பகு, 12.குளம்பு, 14.அபசாரம், 16.திகட்டல், 17.சதி, 18.கண்டல், 19.அகர, 20.திடம், 21.சகலன்

**மேலிருந்து கீழ்**

1.விசாகம், 2.மண்டி, 3.சைவம், 4சம்பளம், 5.திரை, 9.தம்பட்டம், 11.கும், 12.குரல், 13.புத்திரன், 14.அகண்ட, 15.சாடல், 16.திகதி, 17.சகல, 19.அக

**சொற்சிலம்பம் போட்டி இல.46**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**24.04.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 44இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**திருமதி.இராசமுத்து மஞ்சுளா**
சர்வோதய வீதி, ஆவரங்கால் மேற்கு.

**2 ஆம் பரிசு**
**வே.சரவணபவானந்தமூர்த்தி**
3ஆம் குறுக்கு வீதி, இரத்தினபுரம், கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**
**தி.தாரிணி**
33, பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு**
க.அமலதாசன்
969/4, வளன்புரம், கொழும்புத்துறை.

**5 ஆம் பரிசு**
**இரா சந்திரசேகரன்**
மாசியப்புலம் வீதி, ஏழாலை வடக்கு, ஏழாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II குழைக்காட்டு கதைகள்

கோகுலராகவன்



சின்ன வயதில் கதை கேட்பதற்கு பெரியவர்களை போட்டு வறுத்து எடுத்து விடுவோம். கதை கேட்பதில் இருந்த ஆர்வம் படிப்பதில் இருந்ததேயில்லை. அம்மாவின் தகப்பனான கதிர்காமு செல்லத்துரையரை நாங்கள் 'பப்பா' என்றே கூப்பிடுவோம்.

"பப்பா ஒரு கதை சொல்லுங்கோ"

"கதையோ ?"

"ஒரு கதை"

"நான் என்ன கொட்டப் பெட்டியிக்கையே வைச்சிருக்கிறேன் பார்த்துச் சொல்ல?"

கொட்டப் பெட்டி என்பது பணம், காசு வைக்கும் சிறிய பன்னோலைப் பை, ஒன்றைக் கழற்றி பிறகு மூடலாம் மூடி இருக்கும். ஒரு வகை காசுப் பைதான். சாயம் போட்ட பன்னோலையால் இழைத்திருப்பார்கள்.

"ம் கதை, கதை"

"கதை கேட்டிட்டு படிப்பீரோ?"

நிபந்தனைக்குட்பட்ட கதை கேட்பு முறை.

"ஓ படிப்பன்"

யார் படிக்கிறது, சாப்பிட்டு படுக்கிறதுதான் வேலை.

பப்பா குரலை செருகிக் கொண்டு தொடங்குவார்.

"ஒரு ஊரிலை...."

நாங்களும் ஆர்வமாக பப்பாவை சுற்றி வட்டமாக இருந்து கொள்வோம்.

"ஒரு பாட்டி வடை சுட்டுக்கொண்டு இருந்தாவாம்"

"உது வேண்டாம். வேண்டாம். கேட்ட கதை, கேட்ட கதை"

பப்பா பார்த்து சிரிப்பார்.

"இதுதான் தெரியும். வேணுமெண்டால் கேள். இல்லாட்டா போய்ப்படி"

"இல்லை பப்பா வேறகதை சொல்லுங்கோ"

பப்பாவிடம் இன்னொரு கதை நிச்சயமாக இருக்கும். எத்தனை ஆயிரம் கதை சொல்லி இருப்பார். அவரிடம் கேட்ட கதைகளில் ஒரு பத்துக் கூட இப்போது ஞாபகத்தில் இல்லை. தன்னுடைய 'ஆச்சி' தனக்கு இந்தக் கதைகளை சொல்லித் தந்தார் என அவர் சொல்வார்.

"ம்ம் ! பப்பா கதை கதை!!!"

நாங்கள் அவரைப் பாடாய்ப்படுத்துவோம். எங்களுக்கு அந்தக் காலம் இரவில் இருந்த ஒரு பொழுதுபோக்கு அம்சம் இது மட்டும்தான்.

"கதை கதையாம் காரணமாம்
சட்டியில் புக்கையாம்
சுட்ட கருவாடாம்
உள்ளிலையில் திண்டால் கண்டிடும்
எண்டு புற இலையில் திண்ட
கள்ளப் பெண்ணே தள்ளிப் படி"

கதை சொல்லாமல் பாட்டு பாடிக் கொண்டிருப்பார். சரி, பப்பா ஏமாத்திற மாதிரி நானும் உங்களை ஏமாற்றவில்லை. பப்பா சொன்ன ஒரு கதையை சொல்கின்றேன்.

## கதை 1

ஒருநாள் ஒரு பெண் தான் அடை வைத்த முட்டைகளை எடுத்துப் பார்க்கும் போது அதில் ஒன்று கூழ் முட்டையாகிவிட தூக்கி வீசி விட்டாள். அந்த உடைந்த கூழ் முட்டையில் இருந்து ஒரு குள்ள மனிதன் தோன்றினான். எழும்பினவன் நேரே அரண்மனைக்குச் சென்று அரசன் முன்னே நின்றான்.

"யார் நீ ? உனக்கு என்ன வேண்டும்?"

"உங்கள் மகளை எனக்கு திருமணம் செய்து தரவேண்டும்"

"அடேய்! கையும் காலும் சேர்த்தாலே ஒரு சாண் வராது. உனக்கு இளவரசி வேண்டுமோ? யாரங்கே! இவனை தூக்கி சிங்கத்தின் கூட்டில் போடுங்கள்" மன்னன் ஆணையிட்டான்.

சேவகர்கள் குள்ள மனிதனை தூக்கி சிங்கத்தின் கூட்டில் போட, குள்ள மனிதன் ஒரே அடியில் சிங்கத்தைக் கொன்றுவிட்டான். பயந்து போன அரசன்

" இவனை புலிக் கூட்டில் போடுங்கள்" எனக் கத்தினான்.

சேவகர்கள் குள்ள மனிதனை புலிக் கூண்டில் போட அவன் புலியையும் ஒரே அடியில் கொன்று விட்டான்.

"இவனை பட்டத்து யானையின் காலில் போட்டுக் கொல்லுங்கள்"

குள்ள மனிதன் யானையை ஒரே மூச்சில் புரட்டி எடுத்துவிட்டான். யானை அலறிக்கொண்டு ஓடி விட்டது.

இதனால் பயந்து போன அரசன் இவனில் ஏதோ இருக்கிறது என எண்ணி இளவரசிக்கு மணம் முடித்து கொடுத்தான். திருமணம் முடிந்த கையோடு குள்ள மனிதன் அழகிய இளவரசனாக மாறி எல்லோரையும் திகைக்க வைத்தான்.

இதுதான் கதை. ஒரு அம்புலி மாமாக் கதைதான்.

ஆனால் கதை கேட்ட திருப்தியோடு படிக்க தொடங்குவோம். கொஞ்ச நாள் அம்மா அடை வைத்த முட்டையில் கூழ் முட்டை வந்தால் உற்றுப் பார்ப்பேன். புத்தகத்துக்குள் வைத்த மயில் இறகு குட்டி போடும் என்பது போல கூழ் முட்டைக்குள் இருந்து குள்ள மனிதன் வருவானா என்று. எங்கள் வீட்டில் மட்டுமல்ல அந்தக் காலம் இவ்வாறான கதை சொல்லிகள் எல்லா வீடுகளிலும் இருந்தார்கள். தாத்தா, பாட்டி சொல்லும் கதைகள் வாழ்வை புடம் போட்டு எடுப்பதற்கு அடிப்படையாக இருந்தன. எனக்கு என்னவோ நான் கதை சொல்லியாக மாறியதற்கு பப்பாவிடம் கேட்ட கதைகளே காரணம் என்பதில் உறுதியாக இருக்கின்றேன். ஆனால் இப்போது பிள்ளைகளும் பெரியவர்களும் ஒன்று தொலைக்காட்சிக்கு முன்னால் அல்லது தொலைபேசியோடு காலத்தைக் கழிக்கின்றார்கள்.

"கதை சொல்லிகள் "காணாமல் போய் நீண்ட நாள்களாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் தொலைந்த மூக்கு

அகமது பைசல்



ஒரு 'நிமிடக்கதை'

நாம் நடந்து நடந்து முன் செல்வதால் எம் வயதும் முன் செல்கிறது. நாம் நடந்து பின் சென்றோமானால் எம் வயதும் பின்னேதான் செல்லும். உயரமானவனின் வயது உயரமாகவே இருக்கிறது குள்ளமானவனின் வயது குள்ளமாகவே இருக்கிறது. எங்கள் ஊரில் ஒருவர் இருக்கிறார். அவரைக் கேட்டால் தினமும் அவர் வயதைக் கைகளால் தொட்டுப்பார்ப்பதாகச் சொல்வார். இரவில்தான் வயது வளர்வதாகவும், பகலில் அது வளராமல் இருக்கிறது எனவும் சொல்வார். அவர் திருமணமாகி இரண்டாண்டுகள் கழித்து நெற்றியில் மூக்குடன் ஒரு குழந்தை பிறந்தது. அவருக்கும் அவர் மனைவிக்கும் குழந்தையின் நெற்றியில் மூக்கு இருப்பது பிடிக்கவே யில்லை. இருவரும் குழந்தையின் முகத்தை அருவருப்பாகவே உணர்ந்தனர். திருமணமான புதிதில் அவர் மனைவிக்கு அதிசயக் கதைகளையே தினமும் சொல்லிக்கொண்டு வந்தார். ஒவ்வொரு மாலை நேரமும் வாசலில் சென்று இருவரும் அருகருகே அமர்ந்துகொள்வர். அவர் கதை சொல்லத் தொடங்குவார். அவள் ஆர்வமாக கேட்கத் தொடங்குவாள்.

ஒரு முறை அவர் மனைவியின் மடியில் தலையை வைத்துச் சாய்ந்துகொண்டு ஒரு கதை சொன்னார். "திருமணமாகி பல ஆண்டுகள் போயும் குழந்தை கிடைக்காத ஒரு தம்பதியினருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அப்படிப் பிறந்த குழந்தையின் மூக்கு நெற்றியில் இருந்தது. அந்தக் குழந்தையைத் தாய்க்கு பிடிக்கவேயில்லை. தந்தைக்கு மிகவும் பிடித்துப்போய்விட்டது. குழந்தை பிறந்து மூன்று ஆண்டு கள் கழித்து அவர்கள் இருவரும் நெற்றியில் மூக்குள்ள தம் குழந்தையை எடுத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றார்கள். குழந்தை அணிந்திருந்த ஆடைகளை கழற்றிவிட்டு கடலில் குழந்தையை முங்கிமுங்கி எடுத்தார்கள். கடல் அலையில் வந்தேறிய வெண் நுரையை அவர் மனைவி அள்ளி குழந்தையின் முகத்தில் நன்றாகத் தடவிவிட்டாள். கடலில் குழந்தையைக் கழுவத் தொடங்கி பத்து நிமிடங்கள்தான் இருக்கும் திடீரென குழந்தையின் நெற்றியில் இருந்த அந்த மூக்கைக் காணவில்லை. சந்தோசத்திலும், அதிர்ச்சியிலும் அவர் மனைவி வாயடைத்துப் போனாள். ஆனால் அவருக்கு கவலையாகவே இருந்தது. உயர்ந்தும், தாழ்ந்தும் அடித்துக்கொண்டு வருகிற அலைகளை உற்று உற்றுப் பார்த்து அந்த மூக்கைத் தேடிப் பார்த்தார் கிடைக்கவில்லை. சிறிது நேரம் சென்றது. இருவரும் வீடு வந்து சேர்ந்தனர். வீடு சேர்ந்த கையோடு தன் குழந்தையை எல்லோர் முன்னிலையிலும் காட்டத் தொடங்கிவிட்டாள். வீடு வீடாக குழந்தையை எடுத்துக்கொண்டு சென்றாள் அவர் மனைவி. குழந்தையும் சிரித்துக் கொண்டேயிருந்தது. மனதில் கவலையோடு அன்று இரவு உறங்கியவர்தான், கனவில், குழந்தையைக் கழுவிய அந்தக் கடல் பெரும் மூக்காக உரு மாறியிருப்பதைக் கண்டார். அதிர்ச்சியில் எழுந்திருந்தவர் விடியும்வரை உறங்கவேயில்லை"

என அன்று அவர் சொல்லி முடித்த கதை இன்று ஞாபகம் வரவே தன் மனைவியையும், குழந்தையையும் அவசரமாக ஊர்க் கடற்கரைக்குக் கூட்டிச் சென்றார். கதையில் வந்த குழந்தையைப் போலவே தன் குழந்தையையும் கடலில் முங்கி முங்கி எடுத்தார். அலையில் வந்த வெண் நுரையை அள்ளி குழந்தையின் முகத்திலும், அந்த மூக்கிலும் தடவியெடுத்தார். திரும்பவும் குழந்தையை நீரில் முங்கியெடுத்தார். நெற்றியை அவதானித்தார். மூக்கு அப்படியே இருந்தது. ஆனால் குழந்தை மூச்சுத் திணறி இறந்திருந்தது. அது ஒரு வயது பூர்த்தியடைந்த குழந்தை. இறந்துபோய் கழுத்து ஒரு பக்கம் தொங்கியபடி அவர் கையிலே கிடந்தது. குழந்தை இறந்ததை இருவரும் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. இறந்த குழந்தையை பக்கத்து மையவாடியில் அடக்கம் செய்துவிட்டு இருவரும் வீடு வந்து சேர்ந்ததும் யாருக்கும் தெரியாது.

அன்று இரவு தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தவர் சாமத்தில் சிறிது கண் அயர்ந்தார். கடல் பெரும் குழந்தையாக உரு மாறி மல்லாக்கக் கிடந்து கால்களை அடித்துக்கொண்டு கிடந்தது. திடீரெனக் கண் விழித்து எழுந்து வீட்டுக்குள்ளே அங்கும் இங்குமாக உலாவித் திரிந்தார். உடனே போய் கடலைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது அவருக்கு.

# சொல்வதும் செய்வதும்



ம.மயூரபாலன்

நாம் எமது வாழ்க்கையில் பலவற்றைச் சந்திக்கிறோம். பலவற்றையும் பார்க்கிறோம். இன்னும் பலவற்றைக் கேட்கிறோம். அவற்றில் சிலவற்றை உடனடியாக மறந்து போய் விடுகிறோம். மற்றும் பல விசயங்கள் காலம் செல்லச் செல்லத் தாமாகவே மனதைவிட்டு மறைந்து போய் விடுகின்றன. அல்லது நாமே அவற்றை மறந்து போகிறோம்.

ஆனால் சில விசயங்கள் நம் மனதின் ஆழத்தில் நிலையாகப் படிந்து போகின்றன. அத்தகைய விசயங்கள் எமது வாழ்க்கையில் பல மாற்றங்களையும் ஏற்படுத்தி விடுகின்றன. அவ்வாறு எமது வாழ்க்கையில் உன்னதமான மாற்றங்களை ஏற்படுத்திய சில விசயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருப்பது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

எனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கி மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது தமிழ் மொழிப் பாடத்தில் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும் முறையை ஆசிரியர் கற்பித்தார். " கட + உள் என்பது கடவுள் "என ஆசிரியர் கற்பித்தார். அதாவது உன்னைக் கடந்து உள்ளே சென்று உணர்ந்து கொள்ளப்படுவதே கடவுள் என அவர் விளக்கினார். பின்னர் பல இடங்களிலும் பல சந்தர்ப்பங்களிலும் "கடவுள் இங்கே உள்ளார், அங்கே உள்ளார்" என ஆசிரியர் கற்பித்தார். அப்பொழுது ஆசிரியரிடம் "நீங்கள் கற்பித்த விசயத்துக்கும் நாம் செய்கின்ற விசயத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லையே" என்று கேட்டபோது, "கேள்வி கேட்காதே நீ அதிகப் பிரசங்கியாக இருக்கிறாய்" என்று கூறி அடக்கி விட்டார்.

ஐந்தாம் தரத்தில் கற்றுக்கொண்டிருந்த போது ஆசிரியர் கரும்பலகையில் "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்னும் திருக்குறளை எழுதினார். நாம் கற்க வேண்டிய விசயங்களை சந்தேகமின்றிக் கற்க வேண்டும். பின்னர் நாம் கற்றுக் கொண்ட நெறிமுறைகளின் வழியே வாழ வேண்டும் என்பதே அதன் பொருள் என்று கூறினார். முன்னர் மூன்றாம் வகுப்பில் படித்த கடவுள் பற்றிய விசயம் நினைவுக்கு வந்தது. கடந்து உள்ளே சென்று கடவுளை உணர வேண்டும் என்றுதானே படித்தேன். அதனைத்தானே எனது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்று கூறிய போதும், "கேள்வி கேட்காதே" என்று கூறி அடக்கி விட்டார்கள்.


நாம் வாழ்விலே என்ன செய்தாலும், காலம் எதையும் பொருட்படுத்துவதில்லை. அது தன் பாட்டில் ஓடிக்கொண்டிருக்கும். ஆரம்பக் கல்வியை முடித்து அடுத்த படிநிலைக்கு நான் சென்ற போது அங்கு விசயங்கள் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டன. அப்பொழுது இந்து சமயப்பாட ஆசிரியர் ஒன்றைக் கற்பித்தார். பின்னர் அதற்கான விளக்கத்தைக் கூற ஆரம்பித்தார். அந்த விளக்கத்தை வெறுமனே படிப்பதற்காக படித்தேனேயன்றி, அது வாழ்க்கையிலே மகான்களும் ஞானிகளும் கொடுத்த ஒரு எச்சரிக்கை மணிதான் என்பதை அப்பொழுது நான் உணர்ந்து கொள்ளவில்லை.

ஆசிரியர் கற்பித்த பாடலின் உட்பொருள் இதுதான். "ஒரு ஆமையைக் கொல்ல விரும்புகிறவர்கள் அதனை நீர் நிரப்பப்பட்ட ஒரு பெரிய பாத்திரத்தினுள்ளே போட்டு அந்தப் பாத்திரத்தின் அடியில் நெருப்பைப் பற்ற வைப்பார்கள். குளிரான நீரில் இருப்பதை பெரிதாக விரும்பாத ஆமை, நீரின் சூடு ஏற ஏற அது ஆனந்தமாக அந்த இதமான வெப்ப நீரில் நீந்தித் திரிய ஆரம்பிக்கும். என்ன நடக்கப் போகிறது என்பதை உணர முடியாத ஆமை வெப்பம் அதிகரிக்கத் தொடங்கும்போது மிகுந்த சிரமப்பட்டும், துன்பப்பட்டும் வேதனையில் துடிக்க ஆரம்பிக்கும். நீரின் கொதிநிலை உச்சமாகும்போது துன்பம் தாளாமல் அது மெதுவாக இறந்து போகும். இது போன்றுதான் எமது வாழ்க்கையும்" என ஆசிரியர் கூறி முடித்தார்.

சிறு பிராயத்தில் அந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் பக்குவம் இருக்கவில்லை. அதற்கான தேவையும் இருக்கவில்லை. அந்த நாள்களில் எமது கவனம் முழுவதும் விளையாட்டில் இருந்தது. பின்னர் வாலிப வயது வந்தபோது எல்லாமே மிகவும் நன்றாக இதமாக இருந்தன. மரணம் நோய் முதலான விசயங்களும் அடுத்தவர்களுக்கு மட்டும் நடப்பன போலத் தெரிந்தன. பின்னர் மெதுவாக மெதுவாக வாழ்க்கையில் சூடு ஏறத் தொடங்குகிறது. மெதுவாக மெதுவாக நம்மீது சுமைகள் ஏறத் தொடங்குகின்றன. அல்லது நாமாகவே முன்வந்து சுமைகளை ஏற்றுக் கொள்கிறோம். பின்னர் அந்த சுமைகளின் காரணமாகத் துன்பத்தில் அழுந்தத் தொடங்குகிறோம். அப்பொழுதுதான் எல்லாமே சுகமாக இருந்த காலத்தை எண்ணிப்பார்ப்போம். இப்பொழுது மூட்டுவலி முதுகுவலி, கால்வலி என எல்லா விதமான வலிகளும் சேர்ந்து மனிதனைத் துன்பத்தினுள்ளே ஆழ்த்தி விடுகின்றன. உடலிலே துன்பம் ஏதும் இல்லாதிருந்தால் அதுவே போதும் என்பது போல வாழ்க்கை ஆகிவிடுகிறது. "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என ஔவையார் சொல்லிட் போன வாசகங்கள் அர்த்தம் இல்லாதவை போலத் தோன்ற ஆரம்பிக்கின்றன.

இருப்பினும் நாம் இளையவரோ, முதியவரோ, படித்தவர்களோ, படிக்காதவர்களோ யாராக இருந்தாலும் நம் எல்லோருக்குமே அந்த துன்பங்களிலிருந்து விடுபட்டு உள்ளத்திலே உள்ள ஆனந்தத்தை அனுபவிக்கக் கூடிய சாத்தியம் எப்பொழுதும் உள்ளது. உள்ளே உள்ள பரமானந்தத்தை அனுபவிக்க வேண்டும் என்ற தாகம் இருப்பின் அந்தத் தாகம்தான் நமது தேடுதலுக்கு வித்தாக அமைகிறது.

"ஒரு வேடன் காட்டுக்குச் சென்று பறவைகளைப் பிடிப்பதற்கான இடங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அதனைக் கண்ட பறவைகளின் தலைவன் வேடன் சென்ற பின்னர் உடனடியாக எல்லாப் பறவைகளையும் ஒன்று திரட்டி, வேடன் வந்து இடங்களைப் பார்த்துச் சென்றதைப் பற்றிய தகவல்களைக் கூறியது.



பின்னர் "வேடன் நாளை வந்து வலையை விரித்து தானியங்களைப் போடுவான், ஆனால் நாங்கள் அதன் உள்ளே சென்று சிக்கி விடக் கூடாது" என்று கூறியது.

எல்லா பறவைகளும் ஒத்த குரலில் "வேடன் வருவான், வலையை விரிப்பான், தானியங்களைப் போடுவான், ஆனால் நாங்கள் அதன் உள்ளே சென்று சிக்கிக் கொள்ள மாட்டோம்," என்று கூறிக்கொண்டன. அதனை எல்லா பறவைகளும் மனப் பாடம் செய்து கொண்டன. மறுநாள் வேடன் வந்து வலைகளை விரித்தான், எல்லா பறவைகளும் "வேடன் வருவான், வலையை விரிப்பான் ஆனால் நாங்கள் அதனுள் சிக்கமாட்டோம்" என்று சொல்லிக் கொண்டே அந்த வலையில் சென்று சிக்கிக் கொண்டன. எமது கதையும் இவ்வாறு ஆகிவிடக்கூடாது.

"தேடித் தேடித் தேடொணாத் தேவனைத் தேடிக் கண்டு கொண்டேன். என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என மாணிக்கவாசகர் கூறினார். அத்துடன் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" எனவும் கூறினார். அறிந்து அல்ல, உணர்ந்து சொல்லுவார் என்று திருவாசகத்திலே கூறுகிறார். இவ்வாறு ஞானிகளும் மகான்களும் உங்களின் உள்ளே உள்ள கடவுளை உணருங்கள் என்று கூறிச் சென்றுள்ளார்கள். நாம் அவற்றைப் படிக்கின்றோம் பாராயணம் செய்கின்றோம் ஆனால் செயல்முறையில் செய்கின்றோமா என்பது கேள்வியாகவே உள்ளது.

---

சூரியன்

# அறிந்தும் அறியாமலும்



## அதிகாலை வாழ்த்துமழை

ஆளுங்கட்சியினர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுக்கு பிறந்தநாளெனில், அவர்களுக்கான முதல் வாழ்த்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவினதாகவே இருக்கும்.

அதிகாலையிலேயே எழுந்து உடற்பயிற்சி, தியானம் என சுகாதார நடைமுறைகளை சரிவர பின்பற்றும் மஹிந்த ராஜபக்ச, காலை 5 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் வாழ்த்துகளை தெரிவித்துவிடுவாராம். அரசியல் ரீதியில் என்னதான் கோபம் இருந்தாலும் வாழ்த்து தெரிவிப்பதிலும், பாராட்டுவதிலும் மஹிந்தவை விஞ்சுவதற்கு எவருமில்லை என்றே அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு கடந்த மூன்றாம் திகதி பிறந்தநாள். அன்று காலை 5 மணிக்கே அழைப்பை ஏற்படுத்திய பிரதமர், அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அத்துடன், சனத் நிஷாந்தவின் பிள்ளைகள் இருவரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சுகநலம் பற்றியும் விசாரித்துள்ளாராம்.

## சமரசமான யானைகள்



ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறாவிட்டாலும், ரணிலுடன் மோதல் போக்கையே நவீன் திஸாநாயக்க கடைப்பிடிக்கின்றார் எனவும், ரணில் நாடாளுமன்றம் செல்வதற்கு நவீனே முட்டுக்கட்டையாக இருக்கிறார் எனவும் தகவல்கள் வெளியாகின.

அதுமட்டுமல்ல ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து நவீன் திஸாநாயக்க அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார் எனவும், மாகாணசபைத் தேர்தலில் மத்திய மாகாணத்தில் அவர் முதல்வர் வேட்பாளராகக் களமிறங்கக்கூடும் எனவும் அரசியல் களத்தில் கதை அடிபட்டது. எனினும், தேசிய மட்டத்திலான தலைமைத்துவமொன்றை எதிர்பார்ப்பதால் மாகாண மட்டத்திலான தேர்தலில் நவீன் களமிறங்கமாட்டார் என அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவும், நவீன் திஸாநாயக்கவும் அண்மையில் ஒரு மணிநேரத்துக்கு மேல் மனம்விட்டு பேசியுள்ளனர். திருமண நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்தவேளையிலேயே இவர்கள் இவ்வாறு கலந்துரையாடியுள்ளனர் என அறியமுடிகின்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு பின்னர் நவீன் சமரசத்துக்கு வந்துள்ளார் எனவும் தகவல் கசிந்துள்ளது.

## தளபதிகளின் சொற்போர்





அமைச்சர் சரத் வீரசேகரவும், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவும் தற்போது அரசியல் களத்தில் வெளிப்படையாகவே மோதிக்கொள்கின்றனர்.


இருவருக்கிடையில் கடும் சொற்போர் மூண்டுள்ள நிலையில், பல இரகசியமான சங்கதிகள் சந்திக்கு வரத்தொடங்கியுள்ளன. மிருசுவில் படுகொலையுடன் தொடர்புடைய படை அதிகாரி சுனில் ரத்னாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை தவறு எனவும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எப்படி விடுவிக்கப்பட்டார்கள் என்பது வியப்பாகவே இருக்கின்றது எனவும் நாடாளுமன்றத்தில் வைத்தே பொன்சேகா கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கு பதிலடி கொடுக்கு வகையில் சரத்வீரசேகர,

"புலம்பெயர் தமிழர்களிடமிருந்து டொலரைப் பெற்றுக்கொண்டே பொன்சேகா இவ்வாறு கதைக்கின்றார் எனவும், படையினரைக் காட்டிக்கொடுக்கும் அவர், பீல்ட் மார்ஷல் பதவியை வகிக்க தகுதியற்றவர் எனவும் விளாசித்தள்ளினார்.

இதற்கு பொன்சேகாவும் மறுத்தார், அடித்தார். "எங்களிடம் டொலர் இல்லை. ஜெனிவா தொடருக்கு சென்று டொலர் சம்பாதிப்பதும் இல்லை. அவ்வாறு சம்பாதித்து, கும்மாளம் போடுபவர்களே என்னை விமர்சிக்கின்றனர் " இவ்வாறு இருவருக்குமிடையில் 10 நிமிடங்களுக்கு மேலாக கடும் வாக்குவாதம் நீடித்தது. எப்படியோ இருவரின் பிளவாலும் இராணுவம் செய்த அட்டூழியங்கள் வெளியில் வந்தால் நல்லதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பர்களுக்கான காத்திருப்பும் முடிவிலியான ஏமாற்றங்களும்!



ஈழத் தெருவிளக்கோன்

"மீண்டும் ஒரு உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தால் தான் எம்மவர்கள் எம்மைப் பற்றிச் சிந்திப்பார்களா? அதற்கும் முடியாதுள்ளதே... கொரோனாத் தொற்றுத் தாக்கத்திலிருந்து தேகம் இன்னும் முழுமையாக மீண்டு வரவில்லையே... என்ன செய்வது? யாரிடம் சொல்வது? "

அதிகார மையங்களால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் விடுதலையில் அரசியல் கைதிகளுக்கு இப்படியான நம்பிக்கை வறட்சி ஏற்படத் தொடங்கியுள்ளது. காலங்காலமாக மீட்பர்களுக்காக காத்திருந்து , ஏமாற்றமடைந்ததால் உண்டான நம்பிக்கையீனமே இது.

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அண்மையில் ஒரு விடயத்தைக் கூறியிருந்தார். அதாவது " போர் முடிவடைந்து பதினொரு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் புலிகளால் வழி நடத்தப்பட்டு குற்றச்சாட்டுக்குள்ளாகி சிறையிலிருப்பவர்களுக்கும் படைத் தரப்பால் வழிகாட்டப்பட்டு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டுள்ளவர்களுக்கும் ஒரு பொதுப் பொறிமுறையின் கீழ் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்"

இதே விடயம் கடந்த நல்லாட்சி அரசின் காலத்திலும் இவரால் முன்மொழியப்பட்டு அன்றைய ஜனாதிபதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும் அது பின்னர் நடைமுறைக்கு வரவில்லை என்பது வேறு கதை. இந்தப் பொதுப் பொறிமுறை பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் "குறித்த பொறிமுறை பற்றி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவும் எம்முடன் பேசியிருந்தார். அண்மையில் கட்சிக்குள்ளும் நாம் இது விடயமாகக் கலந்துரையாடி இருந்தோம். ஆனாலும் சிறிய தொகையாகவுள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஓர் இனச் சமூகத்தின் மீதான மனித உரிமை மீறல் குற்றங்களை கைவிடும்படியான உடன்பாட்டுக்குச் செல்ல முடியுமா? என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் இவ்விவகாரம் இருக்கிறது. அரசைப் பொறுத்தமட்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் படைகளுக்கெதிரான குற்றச்சாட் டுக்கள் பலமிழந்து பூச்சிய நிலையை எட்டும் வரையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுப் பொறிமுறையூடான விடுதலை சாத்தியப்படப் போவதில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

அப்படியென்றால் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசியல் கைதிகள் விடயத்தில் அடுத்து செய்யப் போகிறார்கள்? மாறி மாறி வருகின்ற அரசாங்கங்களைப் போல ஆசை காட்டி கைதிகளை மோசம் செய்யப் போகிறார்களா? இல்லையென்றால் சிறைக் குள்ளேயே செத்து மடிந்த அரசியல் கைதிகளைப் போல மிகுதியுள்ளவர்களும் சிறைச்சாலைகளுக்கு இரையாகிப் போகட்டும் என எண்ணுகிறார்களா?

பல வருட காலமாக சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை இன்றுவரை அடையாளமே காணப்படாத குற்றப் படைத்தரப்புடன் ஒப்பிடுவதன் மூலம் தந்திரமாக காய்களை நகர்த்தி தத்தம் கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளவே சிங்கள அரசுகள் எண்ணுகின்றன. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அரசாங்கமும் ஜனாதிபதியும் கிஞ்சித்தும் கரிசனை காட்டுவதாகத் தெரியவில்லை. கொரோனா நோய்த் தொற்றின் முதலாவது அலை சிறைக்குள் புகுந்தபோது பல்வேறு குற்றப் பின்னணிகளைக் கொண்ட சுமார் பத்தாயிரம் சிவில் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். எனினும் அரசியல் கைதிகளில் பலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டிருந்தபோதும் அவர்களில் ஒருவர் கூட விடுவிக்கப்படவில்லை. இரண்டாவது அலை நோய்த் தாக்கம் ஏற்பட்டபோதும் கணிசமான கைதிகள் பிணையில் விடு விக்கப்பட்டார்கள். அப்போதும் கூட தமிழ் அரசியல் கைதிகளை அரசு கண்டு கொள்ளவில்லை.

தற்போது தொற்றின் அடுத்த அலை பகுத்தறிய முடியாத பல வடிவங்களை எடுத்து வீரியத்துடன் வீசத் தொடங்கியுள்ளது. இது வரை கைதிகளுக்கு தடுப்பூசிகள் எவையும் ஏற்றப்படவில்லை. சிறை வளாகங்களுக்குள் தொற்று நீக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் கைதிகளைப் பொறுத்தமட்டில் நீண்டகால சிறைவைப்பால் அவர்கள் பல்வேறு தொற்றா நோய்களால் பீடிக்கப்பட்டு உடல் உள ரீதியில் வலுக்குன்றியவர்களாகக் காணப்படுகிறார்கள். நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக் கூடிய போஷாக்கான உணவுகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்களும் கூட மிகக் குறைவாகவே உள்ளன. உறவினர்கள் சென்று அவர்களைப் பார்க்க முடியாது. மக்கள் பிரதிநிதிகள் கூட, கைதிகளின் நிலைமை தொடர்பில் அறிந்து கொள்ள முடியாதிருக்கிறது.

நடப்பு அரசாங்கம் பதவியேற்று அரையாண்டு பூர்த்தி யாவதற்குள் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த படைத்தரப்பைச் செய்த அனைவரும் ஏதோ ஒரு வகையில் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். யாழ்., மிருசுவில் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சார்ஜன் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிக் காப்பாற்றியதை சர்வதேச சமூகம் மட்டுமல்லாது உள்நாட்டிலும் பலர் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.

முன்னாள் இராணுவப் படையின் பிரதானி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் கூட நாடாளுமன்றில் இதனைக் குற்றமாகச் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார். படைப் பொறுப்புகளுக்கு அப்பால் பல்வேறு சிவில் நிர்வாகங்களின் பிரதானிக் கதிரைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற இராணுவத் தலைமைப் பொறுப்பாளிகள் மீது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அமைப்பின் தலைவி யஸ்மின் சூக்கா கட்டுக்கட்டாக குற்றப் பத்திரங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறார். நியாயமான பொறுப்புக்கூறலின் மூலம் தான் இலங்கையில் நிலையான அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும் என்பது சர்வதேச சமூகத்தின் கருத்து. போர்க் குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகள் நீதி விசாரணைகளுக்கு வருகின்றபோது தேவையான ஆதாரங்களை முழுமையான சட்ட வலுவுடன் சமர்ப்பிக்கும் நோக்கில் தகவல் சேகரிப்புக் கட்டமைப்பு ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் பணியகம் உருவாக்கியுள்ளது. இலங்கையில் இப்போது புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் இருந்து படைவீரர்களை பாதுகாக்கும் வகையிலான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாகத் தெரிகிறது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிய பிரித்தானியா, தனது நாட்டுக்கு வெளியே நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பிரிட்டன் படையினர் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளும் போது அதிலிருந்து பாதுகாப்பளிக்கும் வகையிலான சட்டத்தை எவ்வாறு இயற்றியிருக்கிறதோ அதனைப் பின்பற்றியே தாமும் சட்டப் புகுத்தல் எற்பாட்டுக்கு ஆயத்தமாவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆனால் இந்தச்சட்டத்தின் மூலம் உள்நாட்டு மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட படைத் தரப்பை காப்பாற்றுகின்ற கைங்கரியத்தை இலங்கை எப்படி நிறைவேற்றப்போகிறதோ தெரியவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை இறைவனின் பெயரால் தாம் மன்னிக்கத் தயாராக இருப்பதாகவும் ஆனால் இந்தத் தாக்குதலை செய்தவர்கள் யார் என்பதை சமூகத்துக்கு அடையாளம் காட்ட வேண்டும் என்றும் கர்தினால் மல்கம் ஆண்டகை தெரிவித்துள்ளார். ஆனால் அவர் கூட இது வரை இறுதிப்போர் அவலத்துக்கு நீதி கோரியோ, வருடக் கணக்கில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவோ ஒரு சொல் கூட உதிர்த்ததில்லை. ஆனால் அவருக்கு எதிர்மாறாக வடக்கில் உள்ள ஆயர்கள் அரசியல் கைதிகளுக்காக தொடர்ச்சியாக ஓங்கிய குரலெடுத்து போராடி வருவதையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

"மறைந்த ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் மற்றும் நித்தமும் பல்வேறு துன்பதுயரங்களுக்கு முகம் கொடுத்து சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் கைதிகள் போன்ற பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக எவ்வாறெல்லாம் போராடினாரோ, அதேபோன்று மனித நேயத்துக்காக உரத்துக் குரலெழுப்பக் கூடியவர்கள் நம் மத்தியில் இருந்து கட்டாயமாக தன்முனைப்புக் கொண்டெழ வேண்டும்" என மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ அழைப்பு விடுத்துள்ளார். எனவே இந்தப் பொது அழைப்பை சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் துரித விடுதலைக்கு வழி சமைக்க புறப்பட வேண்டும். புறப்படுவார்களா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.பிரகாஷ்



உலகுலா

# ட்ரம்ப் உலகம் தனியுலகம்!

சர்ச்சைகளுக்குப் பெயர்போன அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தற்போது மீண்டும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார். இந்தச் சர்ச்சை பூதாகர மாகியுள்ள அதேநேரம் பேராபத்துக்கு உரியதொன்றாகவும் மாறியுள்ளது. சர்வதேச ஊடக தளத்தை அப்படியே புரட்டிப்போடக்கூடிய கனதியும் அதற்குண்டு.

ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் அவருக்கும் சமூக வலைத்தள நிறுவனங்களுக்கும் இடையில் நடைபெற்ற மனக்கசப்புக்கள், வாக்கு வாதங்கள், சண்டை சச்சரவுகள் அனைவரும் அறிந்ததே. ட்ரம்ப் ஒரு கருத்தை வெளியிடுவார். பின்னர் அந்தக் கருத்து அமெரிக்காவின் அமைதிக்கும் சர்வதேச அமைதிக்கும் பங்கம் விளைவிப்பதாக உள்ளது என்று தெரிவித்து ருவிற்றர், பேஸ்புக் நிறுவனங்கள் அந்தக் கருத்தை நீக்கம் செய்யும். இது அடிக்கடி இடம்பெறும் சம்பவங்களாக கடந்த காலங்கள் இருந்தன. குறிப்பாக ட்ரம்பின் ஆட்சிக்காலத்தின் கடைசிக் கட்டத்தில் இந்தக் காட்சிகள் தொடர்ச்சியாக அரங்கேறின.

அமெரிக்க அதிபராக பைடன் தெரிந்தெடுக்கப்பட்டதை அடுத்து, தேர்தலில் மோசடி இடம்பெற்றுள்ளது என்ற கருத்தை ட்ரம்ப் தன் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டார். இதையடுத்து அவரின் ஆதரவாளர்கள் பெரும்போராட்டங்களை மேற்கொண்டனர். அதன் தொடர்ச்சியாக சமூக வலைத்தள வெளியிலிருந்து ட்ரம்ப் பெயரில் இருந்த அத்தனை கணக்குகளும் அந்தந்த நிறுவனங்களால் முடக்கப்பட்டன.

தற்போது, தன்மீதான இந்தக் கட்டுப்பாட்டை - தடையை- எதிர்கொள்ள பிறிதொரு வழியைக் கண்டுபிடித்துள்ளார் ட்ரம்ப். பிறவிப் பணக்காரரான ட்ரம்ப் சொந்தமாக தொடர்பாடல் வலைத்தளம் ஒன்றை நிறுவியுள்ளார். இந்த வலைத்தளத்தில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் தம்மை இணைத்து வருகின்றனர். இன்னும் ஓரிரு மாதங்களில் பெரும் புரட்சியை இந்த வலைத்தளத்தின் வாயிலாக ட்ரம்ப் மேற்கொள்ள அதிகளவு சாத்தியங்கள் உள்ளன என்றும் கருதப்படுகின்றது.
ட்ரம்ப் ஆரம்பித்துள்ள இந்த வலைத்தளத்தை அவ்வளவு இலகுவாக எடுத்துகொண்டு கடந்துவிட முடியாது.

இனி அவருக்கு நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும் அவ்வளவு இறுக்கமாக இல்லை. சர்வதேச சட்டங்களையும், கட்டுப்பாடுகளையும் ட்ரம்ப் தன் வலைத்தளத்தில் பின்பற்ற வேண்டுமே தவிர, பிறிதெந்த நிறுவனங்களின் 'சுய வரையறை'களுக்கு தன்னை உட்படுத்த வேண்டிய தேவை ட்ரம்புக்கு இல்லை. சர்ச்சைகளுக்கும் சண்டித்தனத்துக்கும் பின்வாங்காத ட்ரம்ப் இனி தன் சொந்த வலைத்தளத்தில் தனக்கு பிடித்தமாதிரி கொடிகட்டிப் பறப்பார். தற்போது அவரொரு 'பரப்புரைச்' சுதந்திரப் பறவை.

நிறவெறி, இனவெறிகளை வெளிப்படுத்த முடியாத சமூக வலைத்தளங்களிலேயே, அகதிகளை அருவருக்கத் தக்கவர்கள், கறுப்பினத்தவர்கள் எலிகளுக்கு ஒப்பானவர்கள் என்றெல்லாம் பொழிந்து தள்ளியவருக்கு சொந்தமாக வலைத்தளம் கிடைத்துவிட்டால் நிலைமை என்னவாகும்.

ஆக, ட்ரம்ப் இனிமேல் தன்னுடைய வலைத்தளத்தில் கருத்தியல் ரீதியாக அமெரிக்க அதிபர் பைடனுக்கு பெரும் குடைச்சல் கொடுக்கக் கூடும். பைடனுக்கு உண்மையான தலையிடி இனிமேல் தான் . ட்ரம்பின் இந்தக் கருத்தியல் போரை பைடன் எப்படி எதிர்கொள்ளப்போகிறார் என்பதை அறிய ஒட்டுமொத்த உலகமும் ஆவலோடு காத்திருக்கிறது.

ஆர்.லயனல்

விளையாட்டு



# நிலம் இல்லாத வானம்!

ஐரோப்பிய சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் கடந்த மூன்று ஆண்டுகளின் முன்னர் கொடிகட்டிப் பறந்த ரியல் மட்ரிட் அணி, தற்போது பெரும் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுள்ளது. மட்ரிட்டின் தோல்விக்குக் காரணம் ரொனால்டோ. கிறிஸ்ரியானோ ரொனால்டோ என்ற ஒற்றை வீரனின் வெளியேற்றம் ரியல் மட்ரிட்டை பெரும் பின்னடைவுக்குள் தள்ளியுள்ளது என்றால் அதை மறுப்பதற்கில்லை.

மட்ரிட் அணியில் ரொனால்டோ விளையாடிய காலத்தில் ரியல்மட்ரிட் அணி வீழ்த்த முடியாத அணியாக இருந்தது. 2016, 2017, 2018ஆம் ஆண்டுகளில் சம்பியன்ஸ் கிண்ணத்தைத் தொடர்ச்சியாகக் கைப்பற்றி மிரட்டியது. ஆனால் ரொனால்டோ வெளியேறிய பின்னர் அந்த அணியால் மீண்டுமொரு கிண்ணத்தைக் கைப்பற்ற இயலவில்லை.

நடப்பு வருடத்தில் அரையிறுதியில் செல்சியிடம் கூட தோல்வியடைந்துள்ளது. 1:1 என்ற நிலையில் அரையிறுதியில் இரண்டாவது சுற்றை எதிர்கொண்ட மட்ரிட் 1:3 என்ற கணக்கில் படுதோல்வியடைந்துள்ளது.

ரொனால்டோ வெளியேறியபோது அவரின் வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று ரியல் மட்ரிட் அணியின் ரசிகர்கள் கோரிக்கை விடுத்தனர். ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில் இதற்காக ஆர்ப்பாட்டம்கூட முன்னெடுக்கப்பட்டது. ஆனால், ஒப்பந்த விவகாரத்தில் ரொனால்டோவுக்கும் மட்ரிட்டுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு இந்த இரு தரப்பையும் சமரசத்துக்குள் தள்ளவில்லை. மட்ரிட்டும் ஒரு மாபெரும் வீரன் என்ற மகத்துவத்தை ரொனால்டோவுக்குக் கொடுக்கவில்லை. இதற்குரிய அறுவடையை ரியல் மட்ரிட் தற்போது அனுபவிக்கின்றது.

'ராஜா இல்லாத ராஜ்ஜியமா?'

# செப்ரெம்பரில் ஐ.பி.எல் பாகம் 2




ஐ.பி.எல். தொடரின் ஆட்டங்கள் கைவிடப்பட்டுள்ள நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எஞ்சிய ஆட்டங்களை செப்ரெம்பரில் நடத்த வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

14ஆவது ஐ.பி.எல். தொடர் இந்தியாவில் கடந்த மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றது. உயிர் பாதுகாப்பு வளைய நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டுத் தொடர் நடத்தப்பட்டபோதிலும் கொல்கத்தா, டெல்லி, சென்னை அணியினருக்குத் தொற்று ஏற்பட்டது. இதையடுத்து ஐ.பி.எல். தொடர் காலவரையறை இன்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. வீரர்கள் தத்தம் சொந்த நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். தொடர் இடைநடுவே கைவிடப்பட்டதால் இந்திய கிரிக்கெட் சபைக்கு சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தத் தொகையைச் சரிசெய்வதற்காக தொடரின் எஞ்சிய ஆட்டங்களை ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்த பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளது. தொடர் கைவிடப்பட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

"அடாது கொரோனா வந்தாலும் விடாது நடக்குமாம் ஐ.பி.எல்"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org